MASTER NEGATIVE NUMBER

நவசக்தி
சிலம்பு 7, பரல் 20
March 09, 1927

Record no. 2305

Navacakti
Cilampu 7, paral 20
March 09, 1927

Record no. 2305

Registered No. M. 1500. "NAVASAKTI"

நவசக்தி

சந்தா விவரம்		
	ரூ.	அ.
வருட சந்தா	5	0
ஆறுமாத சந்தா	3	0
வெளிநாடு-வருட சந்தா ...	6	0

வாரப்பதிப்பு

விளம்பர விகிதம்		
பத்தி 1-க்கு வாரம் 1-க்கு ரூபா	7	0
சில்லரை விளம்பரம் 1 அங்.	0	8

முன்பணமின்றி விளம்பரஞ் செய்யப்படமாட்டாது.

"வீடு பெறநில்" "மாற்ருனுக் கிடங்கொடேல்" "ஏற்பதிகழ்ச்சி"

சிலம்பு எ அக்ஷயஞு மாசிமீ உகூஉ (9—3—27) புதன்கிழமை பரல் உo

கவியரசர் தாகூர் 1924-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் "பிரபாஸி" என்னும் வங்காளிப் பத்திரிகையில் எழுதிய அரிய கட்டுரை இக்காலத்துக்குப் பொருந்தியதொன்ருயிருப்பது கருதி இம்மாதத்து "மாடர்ன் ரிவியூ"வில் மொழி பெயர்த்து வெளியிடப்பட்டிருக்கிறது. அச்சிறந்த கட்டுரையை நாம் தமிழில் மொழிபெயர்த்துத் தருகிறோம் :—

சூத்திர தர்மம்

ஸ்ரீ ரவீந்திரநாத தாகூர் எழுதியது

ஒரு மனிதன் தன் ஜீவனோபாயத்துக்கு வழியைத் தானே தேர்ந்தெடுத்துக் கொள்வதற்குச் செயற்கைத் தடை எதுவும் இல்லாதவிடத்தும், பெரும்பாலோர் விஷயத்தில் விதி குறுக்கே நின்று அவர்கள் விருப்பம் கைகூடாமற்செய்து விடுகின்றது. ஓர் இராஜ்யத்தின் முதன் மந்திரி பதவியைக் குறித்துக் கனவுகாண உரிமையுள்ள ஒருவன் தன் ஜீவனோபாயத்துக்குத் தெருக்கூட்டுந் தொழிலை மேற்கொள்ள நேரிடலாம். அவ்வாறு நேரிடுங்கால் அவன் உள்ளத்தில் ஓயாத கலகம் நிகழ்ந்து கொண்டிருக்குமென்று சொல்ல வேண்டுவதில்லை.

* * *

இந்நிலைமையிலுள்ள கொடுமையாதெனில் தோட்டியின் ஊழியமில்லாமல் இராஜ்யம் நடைபெற இயலாது. ஆனல் சிறப்புகளெல்லாம் முதன் மந்திரிக்கே அளிக்கப்படுகிறது. அவன் பதவியை மட்டுமே வகித்து செய்வதற்குக் கடமை யெதுவும் இல்லாதிருக்கும் போதுங் கூட அச்சிறப்புகள் அவனை விட்டகல்வதில்லை. மனிதனின் முன்னேற்ற ஆசைக்கு விதியுந் துணை நின்று தோட்டிகள் எல்லாரும் மந்திரிகளாகிவிட்டார்களென்றுவைத்துக் கொள்வோம். அப்போது தெருக் கூட்டும் வேலை நின்று போவதோடு கூட, இராஜரீக காரியங்களும் நன்கு நடை பெறுவதாகா. தெருக் கூட்டும் வேலை உலகுக்கு இன்றியமையாதது. ஆனல் அவ்வேலையைக் கட்டாயமாகச் செய்தேயாகவேண்டுமென்ற விதிக்காளான படியால், தான் இழிவுப்பட்டவனென்ற உணர்வு தோட்டிக்கு இருந்தே திரும்.

* * *

பண்டைக் காலத்து இந்தியா, தொழிலைப் பரம்பரையானதாகச் செய்து இந்தப் பெரிய தொல்லையைத் தீர்த்துவைத்தது. இராஜாங்கத்தினல் கட்டாயப் படுத்தப்படும் போது தான் அவமான உணர்ச்சி தோன்றுகிறது. இவ்வுணர்ச்சி கலகத்துக்கு மூலகாரணமாயிருக்கிறது. இதற்கிடமின்றி, பண்டை இந்தியாவில் தர்மத்தின் பெயரால் கட்டாயத்தை ஏற்படுத்தினர்கள். ஒருவனுடைய சாதிக்கேற்பட்ட தொழிலைச் செய்தல் அவனுடையதர்மம், அவனது மதக் கடமை யென்று வலியுறுத்தப்பட்டது.

* * *

தர்மம் மனிதனிடம் தியாகத்தை வேண்டுகிறது. தியாகமின்றி ஒருவன் தர்மத்தைக் கடைப்பிடிக்க இயலாது. ஆனல் இத்தியாகம் ஒருவனுக்கு நஷ்டத்தை விளைவிப்பதன்று. அது மகிமை பொருந்தியது. பிராமணன் தன் தர்மத்தைக்கடைப்பிடிப்பதற்குப்பொருளாசை, சுகபோக ஆசைகளைத் துறத்தல் வேண்டும். ஆனல் இதற்கு ஈடாக அவன் புகழும் கௌரவமும் பெற்ருன். இங்ஙனமின்றேல், அவன் சமுதாயத்தில் தனக்குரிய கடமையைச் செய்திருக்க முடியாது. சூத்திரனும் இவ்வாறே பெரிதுந் தியாகஞ் செய்யும்படி கட்டாயப்படுத்தப்பட்டான். ஆனல் அவனுக்குப் புகழ், சிறப்பு ஒன்றுமில்லை. தர்மத்தை முன்னிட்டு இவ்விழி நிலையை ஏற்றுக்கொண்டோமென்னும் ஆன்மதிருப்தியே அவனுடைய தியாகத்துக்கு ஈடாயிற்று!

* * *

தனிமனிதனுடைய நலத்தை விடச் சமுதாயத்தின் நலமே பெரியது என்ற கொள்கை ஒப்புக் கொள்ளப்பட்டால்தான் ஒருவனுடைய ஜீவனோபாயத்தை தர்மமாகக் கருதுதல் சாத்தியமாகும். பிராமணன் வறுமை விரதம் பூண்டு பிராமண — இலட்சியத்தின் தூய்மை கெடாது பாதுகாத்து வருவானயின், அவனுடைய தொழில் ஜீவனோபாயமாகப் பயன்படினும் அதைக்கடந்து நிற்பதேயாகும். ஏனெனில் அது சமுதாயத்தின் ஊழியமுமாகிறது. குடியானவன் விவசாயத் தொழிலைத் தன் தர்மமாக ஏற்றுக் கொள்ளுதலும் தவருகாது. இதனல் அவன் பிராமணனைப் போல் சிறப்புப் பெறுவதில்லையாயினும், அவனுடைய தொழில் சமுதாயவாழ்வுக்கு இன்றியமையாததாகும். மனிதனுடைய உயரிய பண்புக்கள் தேவையாயுள்ள தொழில்கள் இயல்பாகவே அதிக சிறப்பைப் பெறும் என்னும் கொள்கை திறந்த கண்களுடன் எல்லாராலும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

* * *

தர்மத்துக்கும், ஜீவனோபாயத்துக்கான தொழிலுக்கும் யாதொரு தொடர்பு மில்லாத தேசங்களை எடுத்துக் கொள்வோம். அங்நாடுகளிலும் தாழ்ந்தவை என்று கருதப்படும் வேலைகள் நடைபெருமல் சமுதாயவாழ்வு நடைபெற இயலாது. எனவே மக்களில் பெரும்பாலோர் அத்தகைய வேலைகளைச் செய்து வரவே வேண்டியிருக்கிறது. பிழைப்புக்கு வேறுவழியில்லாததால் அத்தகைய வேலைகளுக்கு நிறைய ஆட்கள் கிடைத்து வருவதால்மட்டுமே அங்நாடுகளில் சமுதாயக்கட்டிடம் இடிந்துவிழாமல் இருந்து வருகிறது. அவ்வப்போது தொழிலாளி வகுப்பார் கிளர்ச்சி செய்து இக்கட்டிடத்தின் அடிப்படை சரியாயில்லை என்பதை மேல் வகுப்பாரான செல்வர்கள், படித்தவர்கள், சோம்பேறிகள்முதலியோரின் கவனத்துக்குக் கொண்டுவரும்போது கட்டிடம் ஆடத்தொடங்குகிறது. இத்தகைய சந்தர்ப்பங்களில், சிறிது விட்டுக் கொடுப்பதாலும்; சிறிது அதிக கண்டிப்பினலும் பழைய நிலைமையையே உறுதிசெய்ய முயல்கிருர்கள்.

* * *

ஆதலின், நமது நாட்டில், தொழிலையும் சமுதாயத்தில் அந்தஸ்தையும் தர்மத்துக்குரியவையென்று செய்துவிட்டபடியால், மேற்சொன்ன அதிருப்தி, கிளர்ச்சி முதலியவற்றின் மூல வேரையே வெட்டிவிட்டார்களென்று சொல்வலாகும். ஆனல் இவ்வுபாயத்தினல் நமது தேசத்தாரின் தொழில் திறமை வளர்ந்திருக்கிறதா, தேய்ந்திருக்கிறதா என்பதை மிகவும் சிரத்தையுடன் ஆராய்தல் அவசியம்.

* * *

சிலவகைத் தொழில்களைத் திறம்படச் செய்வதற்கு வெறும் பழக்கம்மட்டுமே போதாது. அறிவுக் கூர்மையுடன் கூடிய மனே முயற்சி தேவை. இவ்வகை, சாதிக்குரிய தொழிலாக, பரம்பரைத் தொழிலாக வகுத்து விடுவதால் அவை நன்கு செய்யப்பட மாட்டா. அத்தகைய தொழில்களுக்குத் தனி மனிதனுடைய திறமை கவனிக்கப்பட வேண்டும். அவற்றைச் சாதிக்குரிய தொழிலாகச் செய்து விடுவதால் வெளிப்படையான சடங்குகள் சரிவர நிறைவேற்றப்படலாம். ஆனல் தொழிலின் உண்மைச் சிறப்பு போய்விடுமென்பது நிச்சயம். அவை உயிரற்ற செயல்களாகவே இருக்கும். பிராமணத்துவத்திற்கு இன்றியமையாத சில மானசிக குணங்கள் உண்டு; ஒழுக்க முறைகள் உண்டு. இவை அந்தந்த மனிதனின் சக்தியினலும் உழைப்பினலுமே பெறக் கூடியவை. வெளிப்படையான கிரியைகள் மட்டுமே பரம்பரையாக வர முடியும். தலை முறை தலை முறையாக இக்கிரியைகள் செய்யப்பட்டு வந்திருப்பதால் அவை வெளிப்படையான குறையின்றிப் பூரணத்வம் பெற்றிருக்கலாம். உரியதற்கு மேற்பட்ட முக்கியமும் அடைந்திருக்கலாம். ஆனல் இவ்வாறு உயிரற்றுப்போன இச்சடங்குகளினல் எந்த இலட்சியத்துடன் அவை ஏற்பட்டனவோ அந்த இலட்சியம் கைகூடுவதில்லை யென்பது நிச்சயம். உதாரணமாக, உபநயனம் என்னும் சடங்கு ஒரு காலத்தில் ஆரியர்களுக்கு உண்மைத் தத்துவமுள்ள சடங்காயிருந்தது. அதிலடங்கிய கல்வி முறை, பயிற்சி, உள்ள நிலை இவை எல்லாம் அக்காலத்திய இலட்சியங்களுக் கேற்றவையாயிருந்தன. அந்த இலட்சியங்களெல்லாம் மாண்டு மறைந்துபோன இக்காலத்தில் 'பூணுல் கலியாணம்' பொருளற்ற, உயிரற்ற சடங்காகிவிட்டது. க்ஷத்திரியனுடைய நிலையும் இதுவேதான். உண்மையில் இக்காலத்தில் க்ஷத்திரியனக்காண முடிவதேயில்லை. அப்பெயர்தாங்கியிருக்கும் சாதியாரால் பிறப்பு, கலியாணம், சாவு இச்சந்தர்ப்பங்களில் மட்டும் பண்டைக்காலச் சடங்குகள் சில கையாளப்பட்டு வருகின்றன.

* * *

"ஒருவனுடைய சொந்த தர்மத்தைச் செய்து மரணமடையினும் நல்லதே; ஏனெனில் பர தர்மம் மரணத்தினும் பயங்கரமானது" என்று சாஸ்திரம் கூறுகிறது. என்ன நேர்வதாயினும் ஒவ்வொரு சாதியும் தன் தன் பரம்பரை வழக்கபழக்கங்களை அனுசரிக்க வேண்டுமென்பதே இதன் பொருளாகிவிட்டது. இஃது, அனுஷ்டானத்தில், குறிப்பிட்ட வெளிப்படையான சடங்குகளைத் தவருமல் நடத்துவதோடு முடிந்து போயிற்று. சடங்குகளின் உட்பொருளோ பயனே கவனிக்கப்படுவதில்லை. தனி மனிதனுக்கு இச்சாதிக்கட்டுப்பாடுகளினல் என்ன நஷ்டம் நேர்வதாயினும் கவலையில்லை. இதன் பயனக, புண்ணிய காலம் ஒவ்வொன்றிலும் தவருமல் ஸ்நானம் செய்யும் ஒரு ஸ்திரீ அவ்வாறு செய்யாதவர்கள் எவ்வளவு மேன்மக்களாயினும் அவர்களைத் தன்னினும் தாழ்ந்தவர்களாகக் கருதுகிருள். ஆனல் உண்மையில் உள்ளத்தூய்மை இலட்சியத்தை இழந்து விட்டவள் அவளேயாவள். இப்பொருளற்ற, குருட்டுத்தனமான வைதிக ஒழுக்கமுறைகளைத் தழுவி நடப்போர் தாங்களே மேலானவர்கள் என்று பெருமையடித்துக் கொள்கிருர்கள்.

தலை முறை தலைமுறையாக, பானை செய்வதோ, எண்ணெய் ஆட்டுவதோ, மேல்வகுப்பாருக்கு ஊழியம் புரிவதோ செய்து கொண்டுபோதல் கடினமான காரியமன்று. அதற்கு மாருக, மனே முயற்சியின் தேவை குறையக் குறைய, வேலை எளிதாகிறது. ஆனல், உடல் உழைப்புக்கே உரிய தொழில்களிலும் அபிவிருத்தி செய்ய வேண்டுமாகில் மனே முயற்சி தேவை. சாதித் தொழில் என்று பரம்பரையாகச் செய்து வருவதின் பயனக, மனேமுயற்சி கொல்லப்பட்டு விட்டால் மனிதன் இயந்திரமேயாகி விடுகிருன். செய்ததையே திருப்பிச் செய்து கொண்டிருப்பதையன்றி அவனல் வேறென்றும் செய்ய முடியாது.

* * *

இஃது எங்ஙனமாயினுமாகுக. இந்தப்பரந்த தேசத்தில் இதுகாலை சூத்திர தர்மம் [illegible] நிலைபெற்றிருக்கிறது என்பது [illegible] பாற்று. சாதிதர்மத்தை [illegible] விரும்பும் வைதிகக் கூட்டத்தார் [illegible] ஆட்சேபியாது ஒப்புக்கொண்டு [illegible] யிருந்து வருகின்றனர். எனவே, இந்தியாவில் உப்பை நீண்ட நாளாகத் தின்றவர்களும், [illegible] வுப்பினல் தின்னப்பட்டவர்களுமான [illegible] கிலோ இந்தியச் சீமாட்டிகள், திரும்பத் [illegible] தாய்நாட்டுக்குப்போன பின்னர், இந்தியாவில் போல நல்ல வேலைக்காரர்கள் [illegible] கிடைப்பதில்லையென்று அடிக்கடி [illegible] கூறுவதைக் கேட்கிறோம். தங்கள் தர்மத்தினலேயே பரம்பரை அடிமைகளாக்கப்பட்ட மானிடரை உலகில் வேறெங்கேதான் காணலாகும்? துன்பம், அவமானம் எது வருவதாயினும்தங்களின் இந்த ஸ்வதர்மத்தை அவர்கள் கை விடுகிருர்களில்லை! மரியாதை கேட்பது, மரியாதை பெறுவது என்பவை எவ்வாறிருக்கு மென்றே அவர்கள் அறியார்கள். சிறிதும் கலப்பற்ற இச்சூத்திர தர்மத்தை ஆயிரம் ஆயிரம் [illegible] இடைவிடாது அவர்கள் [illegible] கள் வாழ்வு இலட்சியம் நிறைவேறி [illegible] எண்ணி வந்திருக்கிருர்கள். இன்றைய தினம், வெளிநாட்டிலிருந்து இறக்குமதியான [illegible] கொள்கைகளினல் தூண்டப்பெற்று இந்த ஜனங்கள் தங்களை மறந்து ஏதேனும் பேசத் தொடங்கினல், உடனே வைதிகப் பெரியோர்கள் முன்வந்து அவர்களுடைய அதிகப்பிரசங்கித்தனத்தைக் கண்டித்துச் சீர்திருத்தி விடுகிருர்கள்.

* * *

இவ்வாறு இப்பழம்பெரும் நாடு இது காலை சூத்திர தர்மம் குடிகொண்ட நாடாகிவிட்டது. ஸ்வதர்மானுஷ்டானத்தில் தம்மையே மறந்த சூத்திரர்களே இத்தேசத்தில் இப்போது மிகப் பெரும்பான்மையோரா யிருக்கின்றனர். இச்சூத்திர தர்மம் என்னும் பெருஞ்சுமையின் கீழ் வளைந்து நிற்கும் ஹிந்துவானவன் பாரம் தாங்காது திணறுகிருன். அறிவு, புலமை, ஒழுக்கபலம் இவை தேவையாயிருக்கும் எந்த நல்ல காரியமும் மேலிருந்து அழுத்தும் இந்தப் பெருஞ் சுமையைத்தாங்கிக் கொண்டேதான் செய்தாக வேண்டும். அப்படி நாம் பெறும் சிற லாபங்களையும் இந்தக் குருட்டுப் பெட்டியிலே தான் பத்திரப்படுத்தி வைக்க வேண்டும். இத்தகைய [illegible] இக்காட்டில் நீடித்திருக்க வேண்டுமோ [illegible] தே இப்போது நாம் சிந்திக்க வேண்டிய [illegible] யம்.

* * *

சூத்திரதர்மம் [illegible] காட்டில் நாம் [illegible]

காணலாகும். அவற்றுள் எல்லாவற்றிலும் பெரிதும் துயருறக் கூடியதான ஒன்றைக் கடைசியாக நான் குறிப்பிட்டு முடிக்கிறேன்.

* * *

முதன் முறை நான் ஜப்பான் தேசத்துக்குச் செல்கையில் வழியில் ஹாங்காங்கில் எங்கள் கப்பல் நின்றபோது அவமானத்தினால் நான் தலைகுனிய நேர்ந்தது. கப்பலிலிருந்து ஜனங்கள் தரையில் இறங்கவேண்டிய இடத்தில் அத்தகையகாட்சியைக் கண்டேன். பஞ்சாபி போலீஸ்காரன் ஒருவன் சீனத்தான் ஒருவனைப் பிடித்துக்கொண்டு அவனைக் காலால் உதைத்துக்கொண்டிருந்தான். இந்திய மக்களை அரசாங்க உத்தியோகங்களிலுள்ள அவர்களின் சகோதரர்கள் இவ்வாறு நடத்துவதை நான் பலகாலும் கண்டிருக்கிறேன். இந்தியாவிலிருந்து வெகு தூரத்தில் ஹாங்காங் துறைமுகத்திலும் இத்தகையகாட்சியை நான் காண நேரிட்டது. இந்தியன் தன் சொந்த நாட்டில் மட்டுமன்றி தான் செல்லும் வெளிநாட்டிலுங் கூட சூத்திர தர்மத்தை எவ்வளவு உண்மையுடன் கடைப் பிடிக்கிறான் என்பதை அஃது எனக்கு உணர்த்திற்று. "உப்பிட்டவருக்கு உண்மையாக நடக்க வேண்டும்" என்னும் கொள்கையை எவ்வளவு அளவு கடந்து, எவ்வளவு பெருமையுடனும், மகிழ்ச்சியுடனும் அவன் கடைப்பிடிக்கிறான் என்பதைக் கண்டேன். சீனத்திலிருந்து ஹாங்காங்கைப் பிரித்துக் கைப்பற்ற இங்கிலாந்துக்குத் துணை செய்தவர்கள் இந்த மனிதர்கள்தான். நமது அயலாளான அச்சீன தேவியின் அழகிய மார்பில் இவர்கள் குத்தியதால் ஏற்பட்ட புண்களின் வடுக்கள் இன்னும் மறையாமலே இருக்கின்றன. அத்தேவி எத்தகையவள்? புத்தரின் அடிச்சுவடுகளைத் தன் இதயதாமரையில் ஏற்றுப் பூசித்தவள் ! இட்ஸிங், ஹியூன்த்ஸாங் முதலிய புதல்வர்களை ஈந்தருளியவள் !

* * *

மானிடவர்க்க மெனும் வானவெளியில் இதுகாலை யுத்த மேகங்கள் இருண்டடர்ந்து நிற்கின்றன. ஐரோப்பாவின் மார்பில் எய்யும் பொருட்டு ஆசியாவில் அம்புகள் தயாராகின்றனவென்று ஐரோப்பாவில் கூக்குரல் எழுந்திருக்கிறது. ஐரோப்பாவின் யுத்தக் கப்பல்கள் என்னும் கழுகுகளுக்கு, பசிபிக் சமுத்திரக் கரையில் கூடுகள் தயாராகின்றன. கீழ்நாட்டில் ஜப்பான் தேசம் ஒன்று விழித்துக்கொண்டு விட்டது என்பது உண்மையே. சீனமும், திருடர்கள் தன் சுவர்களைத் தகர்த்துக் கொண்டிருக்கும் சத்தங்கேட்டு விழித்துக்கொண்டு வருகிறது. இந்தப் பிரமாண்டமானதேசம், அடிக்கடி இரத்தம் நஷ்டமானதினால் ஏற்பட்ட பலவீனத்தையும், அபினி மயக்கத்தையும் உதறிவிட்டு ஒருநாள் விழித்தெழுதல்கூடும். சீனத்தின்சட்டைப்பைகளைக் காலிசெய்யும்வேலையிலீடுபட்டவர்கள் இவ்விழிப்பு ஐரோப்பாவுக்கு அபாயம் என்றே கருத வேண்டியிருக்கும்.

* * *

அப்போது சூத்திர இந்தியா என்ன செய்யுமென்பது தான் இப்போது கேள்வி. மீண்டுமொருமுறை, ஐரோப்பியத் தொழிற்சாலைகளில் தயாரான விலங்குகளைத் தாங்கித் தன் பழைய நட்பினளாம் சீனத்தின் கால்களில் மாட்டச் செல்லும் போலும் ! ஏன், எதற்காக என்று கேளாமல் இந்தியர் கொல்வார்கள், கொல்லப்படுவார்கள். ஏன், எதற்காக என்று கேட்டல் இந்திய தர்மத்துக்கு மாறான தன்றோ ?

* * *

''ஒருவனுடைய ஸ்வ தர்மத்தில் மரணமடைவதும் நல்லதே; மரணமுறச் செய்வதும் நல்லதே'' என்றுஇந்தியர்கூறுவர். உலகில்எந்தப் பகுதியிலும் இந்தியர்க்கு மரியாதையில்லை ; அவர்கள் மரியாதை எதிர்பார்ப்பதுமில்லை. பொருளற்றதும் நீதிக்குமாறானதுமான ஓர் ஊழியத்தில் இந்தியர் எங்கும் குற்றேவல் செய்வோராயிருக்கின்றனர். எஜமானனின் கட்டளை பெற்றுஅவர்கள் விரைந்தோடித்தாக்கும்ஜனங்கள் இந்தியாவின் பகைவர்களல்லர். சண்டை முடிவானதும் அவர்கள் அவசரம் அவசரமாக ஊழியர்க்குரிய ஜாகைக்கே திருப்பி அனுப்பப் படுகின்றனர்.

* * *

இவ்வாறாக, இந்தச் சூத்திரதர்மத்தில் சொந்த நலமுமில்லை ; வேறு உயர்ந்த நலமுங் காணோம். இதில் பெருமைக் கிடமெங்கே ? ''ஸ்வதர்மத்தில் மரணமடையினும் நன்றே'' என்னும் பொருளற்ற போலித்தத்துவத்தைத் தவிர வேறு ஒன்றுமேயில்லை. இத்தகைய மரணத்துக்கு இந்தியனுக்குச் சந்தர்ப்பம் ஏராளமாக உண்டு. இதில் அவனுடைய ஆண்மைக்குப்பெரிதும் ஊறுசெய்வது யாதெனில், அன்னியரில் ஒரு பகுதியாரின் சுயநலத்துக்காக, மற்றொருபகுதியாரை அழித்தல் தன்தர்மமாதல் கூடும் என்னும் நம்பிக்கையே யாகும். இக்கொள்கையை அவன் வெகு எளிதில் ஏற்றுக் கொண்டுவிடுகிறான். தெய்வா தீனத்தால் எப்போதேனும் பிரிட்டன் இந்தியாவை இழக்குமாயின், ''ஐயோ ! எனது சிறந்த வேலைக்காரனை இழந்து விட்டேனே!'' என்பதுதான் பிரிட்டனின் முக்கிய குறையாயிருக்கும்.

* * *

ஷாங்காயில் சமீபத்தில் நிகழ்ந்த வேலை நிறுத்தத்தைப்பற்றி, அமெரிக்க ''நேஷன்'' பத்திரிகையில், பால்பிளான் ஷார்ட் என்பாரின் அறிக்கை யொன்று பிரசுரமாகி யிருந்தது. அது பற்பலரின் சாட்சியங்கள் அடங்கிய அறிக்கை. அவற்றுள் ஒரு சாட்சியத்தை மட்டு மிங்கே எடுத்துக்காட்டுகிறேன். இச்சாட்சியமளித்தவரை மேற்படிபால்பிளான் ஷார்ட் பின்வருமாறுவர்ணித்திருக்கிறார்:-''கிளாஸ்கோ சர்வகலாசாலையில் பி. ஏ. பட்டம் பெற்ற சீன இளைஞர். குற்றமற்ற ஆங்கிலம் பேசுகிறார். தொழிலியக்கத்தைப்பற்றிய அவருடைய புத்தகசாலையைப்போன்ற வேறொன்று கீழ்நாட்டில் நான் பார்த்ததில்லை. சர்வதேசப் பொருட்காட்சிச் சாலைகள் பலவற்றில் அவருடையவோவியங்கள் தொங்கவிடப்பட்டிருக்கின்றன '' இத்தகையவருடைய சாட்சியம் பின்வருமாறு :—

நான் யுத்த விரோத இயக்கத்தைச் சேர்ந்தவன். ஆனால் இந்த வேலை நிறுத்தத்தைப்பற்றி என்னுடைய உணர்ச்சியைத் தெரிவிப்பதற்கு ஒரு நிகழ்ச்சியைப் பற்றிச் சொல்கிறேன். சீனத்தில் சமாதான வாதியாயிருத்தல் எத்துணைக் கடினமான தென்பதை அந்நிகழ்ச்சி விளக்கும்.

ஷாங்காயில் நந்த வனம் ஒன்று இருக்கிறது. அதன் நிர்வாகத்துக்குப் பணம் பெரும்பாலும் சீனர்கள் கொடுக்கிறார்கள். ஆனால் சீனன் எவனும் அவ்வனத்தினுள் போக முடியாது. ஒருநாள் அவ்வனத்தின் ஓரமாக நான் போய்க்கொண்டிருந்தபோது சீக்கியப் போலீஸ்காரன் ஒருவன் சில ரிக்ஷா வண்டிக்காரர்களை நந்தவனத்தின் வாயிலினின்று துரத்துவதையும், அவர்களில் ஒருவனை வேண்டுமென்று தள்ளிவிட்டதையும் பார்த்தேன். ரிக்ஷாக்காரர்களில் ஒருவன் நந்தவனத்துக்கு அதிக நெருக்கத்தில் வந்துவிட்டதனால் அவன் அத்துணைக் கோபமடைந்திருந்தான். பின்னர் அந்த ரிக்ஷாக்காரனின் அநுமதிச் சீட்டை அவன் பிடுங்கிக்கொண்டான். அவ் வெளிய மனிதனோ சாலையில் நின்று கொண்டு கண்ணீர் விட்டழுதான்.

நான் மேற்படி சீக்கியப் போலீஸானிடம் சென்று ''இந்தியாவில் போலீஸ் வேலைக்கு பிரிட்டிஷார் என்னை அமர்த்தினார்களாயின், நீர் இந்த ரிக்ஷாக்காரனை நடத்தியது போல் நான் ஒருநாளும் உமது தேயத்தாரை நடத்த மாட்டேன்'' என்று கூறினேன்.

உடனே அவன் கோபம் தணிந்தது. அநுமதிச் சீட்டை ரிக்ஷாக் காரனிடம் திருப்பிக் கொடுக்கப் போனான். ஆனால் அச்சமயத்தில் இரண்டு ஆங்கிலேயர்வந்து சேர்ந்தனர். அவர்கள் என்னிடம் கூறியதாவது:— ''நீ இங்கே என்ன செய்கிறாய்? போலீஸ்காரனுடன் சச்சரவிடுகிறாயா? எங்களுடன் வாதம் செய்யாதே! இங்கே உனக்கு என்ன வேலை? கேடுகெட்ட சீனனுக்கு இவ்வளவு என்ன? நில்லாதே, ஓடிப் போ !''

என் தாய் நாடாகிய சீனத்தில் அவர்கள் என்னிடம் இப்படிச் சொன்னார்கள் !

தீபம் தன் ஒளியைத்தனக்குள் ஒளித்து வைக்க இயலாது. — தாகூர்.

* * *

காலராநோயினின்றும் பிழைத்தவன் ஒருவன் டாக்டர் கேட்ட பெருந்தொகையைக் கொடுக்கத்தயங்கினான். ''உன்னைப் பார்க்க எத்தனைமுறை வந்திருக்கிறேன், ஞாபகமிருக்கிறதா?'' என்று டாக்டர்கேட்டார். அப்போது அவன் கூறியதாவது:— ''நல்லது ஐயா! இந்த ஊரில் என் மூலம் எத்தனை பேருக்குக் காலரா வந்திருக்கிறது! அதைக் கவனித்தீரா?''

விஞ்ஞான ஆராய்ச்சி

ஆகாயவிமானத்தின் சரித்திரம்

நூற்றாண்டுக் கணக்காக மனிதர்கள் ஆகாயத்தில் பறக்க வேண்டுமென்று பிரயத்தனம் பண்ணிவந்தார்கள் ; பல்வேறு காலங்களிலும் பல்வேறு வகைப் பிரயத்தனங்கள் செய்யப்பட்டு வந்தன ; எல்லாம் தோல்வியையே அடைந்தன. கி. பி. 1782, 1783-ல் மாண்ட்கோல்பியர் என்னும் இரு சகோதரர் உஷ்ணக்காற்றைக் கொண்டு புகைக் கூண்டு கட்டினார்கள். ஆகாயமார்க்கச் செல்லக்கூடிய அக்கூண்டில் 1783ல் அவ்விரு மனிதர்களும் ஏறிச்செல்லத் துணிந்தார்கள். பிறகு பற்பல மனிதர்கள் அவ்வாறு ஆகாய யாத்திரை செய்து வந்தார்கள். அதன் பின் உஷ்ணக்காற்றான புகையின் ஸ்தானத்தில் ஜலவாயுவை உபயோகப்படுத்தலாயினர். அதன்பின் நூறு வருஷம் வரை அந்தப் புகைக்கூண்டை அடக்கி யாளக்கூடிய வகை யொன்றும் கண்டு பிடிக்கப்படாமலிருந்துவந்தது; எந்தத் திசையில் காற்றடித்துக்கொண்டிருந்ததோ அந்தத் திசையை நோக்கியே அப்புகைக்கூண்டும் போய்க்கொண்டிருந்தது. ஆயினும் புகைக்கூண்டிலுள்ள அபிவிருத்தி மட்டும் குறையாமலே இருந்து வந்தது. நாளேற நாளேற மனிதர்களும் மேலே ஏறிக்கொண்டிருந்தார்கள். 1901-ல் இரண்டு ஜர்மானிய அறிவு நூல் வல்லார் 7மைல் வரை ஆகாயத்தில் யாத்திரை செய்தனர். 1913-ல் பிரஞ்சுக்கார ரொருவர் பாரிஸிலிருந்து ருஷ்யாவரை 1,500 மைல் புகைக்கூண்டில் பிரயாணம் செய்தார். புகைக்கூண்டுகள் சென்ற ஐரோப்பிய யுத்தத்தில் அதிகம் உதவி புரிந்தன. இன்னமும் அவை உபயோகிக்கப்பட்டு வருகின்றன.

புகைக்கூண்டின் கூடையில் முன்னோக்கித் தள்ளும் கருவியும் சுக்கானும் பொருந்திய சிறு இயந்திரமொன்று இணைக்கப்படுவதனால் புகைக்கூண்டின் பிரயோஜனம் அதிகமாய்க் காணப்பட்டது. புயலில்லாத ஆகாயத்தில் இந்தப் புகைக்கூண்டு மிக நன்றாகச் செல்லக்கூடும்; சிறு காற்றிலும் இடர்ப்படாமல் முன்னேறிச் செல்லும்.

அதன் பின் பாரிஸில் வசித்து வந்த பிரேஜில் வாசி யொருவரும் ஜர்மனி தேசத்துக் கௌண்ட் ஜெப்பெலினும் இதில் கவனத்தைச் செலுத்தினார்கள். பாரிஸிலிருந்தவர் அம்பிக்குழல் போன்ற உருவமுள்ள கூர்மையான முகத்துடன் 1901-ல் ஒரு புகைக்கூண்டைச் செய்து அதில் ஏறி அரை மணி நேரத்திற்குள் அங்கிருந்த எப்பெல் கோபுரத்தைச் சுற்றிக்கொண்டு புறப்பட்ட இடத்துக்கே திரும்பிவந்து சேர்ந்ததனால் 20 ஆயிரம் டாலர் சன்மானம் பெற்றார். அதன்பின் அவர் புகைக்கூண்டின் விஷயத்தை விட்டுவிட்டு ஏரோப்ளேன் என்னும் ஆகாயவிமானத்தின் பக்கல் தமது கவனத்தைச் செலுத்தினார்.

கௌண்ட் ஜெப்பெலின் வேறொரு விதமாக வேலை செய்து வந்தார். அவர், புகைக்கூண்டின் வெளி ஓட்டை இலேசான மெல்லிய உலோகத்தினால் செய்து அதன் உட்கூட்டைப் பல விதமான தனியறைகளாகப் பிரித்திருந்தார். அக்கூண்டை ஓட்டுவதற்குரிய இயந்திரங்களைக் கீழே தொங்க விட்டிருந்தார். 1900-த்தில் அதைக்கொண்டு மனிதர்கள் உயரத்தில் ஏறினார்கள் ; அதன் அபிவிருத்தியால் 1910-ல் ஒன்பது மணி நேரத்துக்குள் 300 மைல் வரை ஆகாயத்தில் சென்றனர். அதிலொரு விசேஷம் யாதெனில், அதில் பிரயாணிகளும் ஏறிச்சென்றனர். பிறகு கௌண்ட் ஜெப்பெலினால் கட்டப்பட்ட கூண்டுகள் [illegible] ஆட்களுடன் 24 பிரயாணிகளையும் ஏற்றிச் செல்லத் தொடங்கின. நூற்றுக்கணக்கான பிரயாணங்களுக்கு மணி யொன்றுக்கு 50 மைலுக்கு மேற்பட்ட வேகங்களும் நிறைவேற்றப்பட்டன. ஆனால் அத்தகைய ஆகாயக்கப்பல்கள் மிகப் பெரியனவாகவும் கனமாகவும் இருந்து வந்ததனால் புயற்காற்றினால் பல கப்பல்கள் சிதறுண்டு போயின. (இவ்வகையாக் கப்பலுக்கு அதைக் கண்டு பிடித்தவரின் பெயரால் ஜெப்பெலின் என்ற பெயர் ஏற்பட்டது.)

சென்ற ஐரோப்பிய யுத்தத்தின் போது ஜெப்பெலின்கள் அதிகமான இராணுவக் காரியங்களைச் செய்து வந்தன. அவை வடகடலைத் தாண்டி இங்கிலாந்தின்மீது வெடி குண்டுகளைச் சொரிந்தன ; பிரான்ஸின் மீது பறந்து பாரிஸைத் தாக்கின. ஆகாய விமானத்தைச் சுடுதற்காக ஏற்பட்ட பீரங்கிகளின் எல்லைக்கப்பால் பறக்கவேண்டி யிருந்ததனால் அந்த ஜெப்பெலின்கள் மிகக் குறியான தாக்குதலொன்றையும் செய்து முடிக்க வில்லை.

மேற்கூறிய வெல்லாம் ஆகாயத்தைக் காட்டினும் இலேசான இயந்திரங்களேயாம். ஆனால் காற்றைக் காட்டிலும் கனமான இயந்திரங்கள் வந்து பறக்க வேண்டியது வெற்றிக்கு அவசியமாய்க் காணப்பட்டது ; இவ்விஷயத்திலும் பல ஆண்டுகளாக மனிதர்கள் முயற்சிசெய்து வந்தார்கள்.எல்லோரும் தத்தமக்குரிய இயந்திரங்களைக் கொண்டு பறக்கப் பார்த்தனர். ஸர் ஹிரம் மாக்ஸிம் என்னும் ஆங்கிலேயர் 1894-ல் ஓர் இயந்திரத்தைச் செய்து பறக்கப் பார்த்தார். ஆனால் அதில் முழுவெற்றியும் காணப்படவில்லை. அதே சமயத்தில் அறிஞர் எஸ். பீ. லாங்லீ என்பர் வாஷிங்டனில் முயற்சி செய்து அமெரிக்க காங்கிரஸிலிருந்து 50 ஆயிரம் டாலர் தமது முயற்சிக்காகப் பெற்றுக்கொண்டார். அவர் சிறு சிறு இயந்திரங்களாகச்செய்து ஆளில்லாமல் பறக்கவிட்டார் ; அதன் பின் ஓர் என்ஜினீயருடன் செல்லக்கூடிய பெரிய தோர் இயந்திரத்தை நிர்மாணித்தார் ; அதைப் பறக்கச் செய்தபோது இரண்டு முறை இயந்திரம் முறிந்து விட்டதனால் அவருடைய விமானமும்உடைந்து அவர்மனமும் உடைந்து விட்டது ; அதனால் அவர் இறந்தும் பட்டார். ஆனால் அவர் கண்டுபிடித்த வழிதான் பிறகு நல்ல வழியாகக் காணப்பட்டது. அவருடைய இயந்திரத்தில் மற்றும் சில மாறுதல்களைச் செய்துவிடின் அதுவே நல்ல விமானமாகுமென்று பின் வந்தவர் கண்டுபிடித்தனர். ஆதலின் ஆகாய விமானத்தைக் கண்டுபிடித்தவர் உண்மையில் அறிஞர் லாங்லீ என்றே கூறுவது மிகையாகாது.

இதன் சார்பான மனிதர்களெல்லாரும் ஆகாயவிமானத்தின் சிறகுகளின் பருமனையும் உருவத்தையும் பற்றியே கவனித்துக் கொண்டிருந்தார்கள். இன்ஜின் விஷயமும் கவனிக்கப்படாமற் போகவில்லை.

ஆர்வில்லீ, வில்பர் ரைட் என்னும் இருவர் ஒஹியோவில் டேய்டன் என்னுமிடத்தில் சைக்கிள் செப்பனிடும் சாலை யொன்று வைத்திருந்தார்கள். அவர்கள் 1900-த்தில் ஏரோப்பிளேனின் உருவத்தையும் பருமனையும் பற்றிய ஆராய்ச்சியில் இறங்கினார்கள் ; அவ்விருவரும் வடக்குக் காரோலினா மாகாணத்தின் தனிமையான கடற்கரைக்குச் சென்று செய்து வந்த முயற்சியினால் 1903, டிசம்பர், 17-ல் இறுதியாக ஒரு மனிதனைத் தூக்கிக் கொண்டு ஆகாயத்தில் 59 வினாடிவரை நிலைநிற்கக் கூடிய ஓர்இயந்திரத்தைக்கண்டு பிடித்தார்கள். அன்று முதல்தான் மனிதன் ஆகாயத்தில் பறக்கும் விஷயம் வெற்றியடைந்தது. அதன் பின் அந்த இயந்திரத்தின் மீது பற்பல விதமான திருத்தங்களை யெல்லாம் செய்யத் தலைப்பட்டனர்.

ரைட் சகோதரர்கள் செய்து வந்த விடா முயற்சியினால் 1905-ல் 24 மைல் வரை பறந்துசென்று மீண்டும் புறப்பட்ட இடத்துக்கே திரும்பி வந்தார்கள் 1908-ல் அதிக தூரம் பறந்தார்கள். ஒரு முறை 56 மைல் தூரம்பறந்து சென்றனர் மற்றொரு முறை 2- மணி 20 நிமிஷம் வரை ஆகாயத்தில் உலாவித்திரிந்தனர்.அவ்விரு அமெரிக்க சகோதரர்களும் மற்றும் பல அறிவு நூல் விற்பன்னர்களைக் காட்டினும் வேறு கைதேர்ந்த சாமர்த்திய சாலிகளைக் காட்டினும் அதிகமான வேலை செய்து வந்தார்கள்.

இந்தப் பறக்கும் இயந்திரத்தைப்போல் மற்றோர் ஆச்சரியகரமான விஷயமும் அறிவு நூல் உலகத்தில் அத்துணை அளவுகடந்த கிளர்ச்சியை உண்டு பண்ணி விடவில்லை. மனிதன் பறக்கக் கற்றுக் கொண்டு விட்டானென்று உலகத்தா ரெல்லாம் குதூகலங் கொண்டார்கள் ; உடனே எல்லா நாகரிக தேசத்தாரும் தத்தமக்குரிய வித்தில் ஆகாய விமானங்களை அமைக்கத் தொடங்கினர். அதன்பின் இரட்டைச் சிறகுகளைக் கொண்டும், மூன்று சிறகுகளைக் கொண்டும், நான்கு சிறகுகளைக் கொண்டும் பறக்கத் தலைப்பட்டனர்.

முதன் முதலில் பிரஞ்சுக்காரரே இந்த ஏரோப்ளேன் விஷயத்தில் அதிக ஊக்கங் காட்டி வந்தார்கள் ; ஆதலின் 1909-ல் பிளிரியாட் டென்னும் ஒரு துணிகரமான பிரான்சியர் கலே துறை முகத்திலிருந்து சுமார் 21 மைல் தூரமுள்ள டோவர் துறை முகத்துக்கு இங்கிலீஷ் கால்வாய் வழியாய்ப் பறந்து வெற்றி பெற்றார். அதன் பின் ஆங்கிலேயர்களும் அமெரிக்கர்களும் அதிக சாமர்த்தியமான வித்தைகளையெல்லாம் பறந்து காட்டினார்கள்.

மிஸ்டர் கர்ட்டிஸ் என்பவர் ஹைட்ரோப்ளேன் என்னும் நீரிலும் மிதந்து ஆகாயத்திலும் பறக்கக் கூடிய ஒருவகை விமானத்தைக் கண்டுபிடித்தார். அஃதாவது, அதிக பலமான ஏரோப்பிளேனின்கீழ் இலேசான படகுகளையும் கட்டிவிட்டிருந்தார். இதனால் அந்த விமானத்தைப் பறக்கும் படகென்றே ஒருவாறு கூறத்துணியலாம்.

—''தாருல் இஸ்லாம்''

(அடுத்த பாவில் முடிவுபெறும்)

காத்தானின் கப்பல்

ஒரு சிறு கதை

ஸ்ரீமான் V. நடராஜன் B. A., L. T. எழுதியது

காத்தானுக்குச் சுமார் பதினைந்து வயதிருக்கும். அவன் இளம் வயதிலிருந்தே வெகு கஷ்டத்திலடிபட்டவன். ஐந்து வயது முதல் கடலில் குதிப்பதும் நீந்துவதுமாக இருப்பான். ஒவ்வொரு சமயம் தகப்பனுடன் கட்டுமரம் ஏறி மீன் பிடிக்கச் செல்வான். கடற்கரைக்கு மாலைநேரத்தில் உலாவவரும் கனவான்களைச் சந்தோஷிப்பதற்காகக் கடலில் முழுகி நீந்துவான். அவனுக்கு அவர்கள் இஷ்டப்பட்டுக் காலணா கொடுத்தால் அன்று நல்ல விருந்துச் சாப்பாடு எனலாம். ஆப்பமும் கடலையும் வாங்கித்தின்று அன்றைய ஜீவனம் முடியும். ஓர் அமாவாசை தினத்தில் சமுத்திரஸ்நானம் செய்து கொண்டிருந்த ஒரு கிழவருடைய மோதிரம் கடலில் நழுவி விழுந்து விட்டது. காத்தான் உடனே முழுகி அதைத்தேடி எடுத்துக் கொடுத்தான். கிழவர் சந்தோஷப்பட்டுக் காத்தானுக்கு ஒரு பழைய சவுக்கம் கொடுத்தார். அந்த சவுக்கம் தான் காத்தான் ஆறுமாதமாகக் கட்டியிருக்கிறான்.

இச்சமயம் காத்தான் கடற்கரையில் கிடந்த மரக் கட்டை யொன்றின்மேல் உட்கார்ந்து கொண்டு கடலை நோக்கிப் பார்த்துக்கொண்டிருக்கிறான். அவன் தந்தை கட்டுமரமேறிக் காலையில் சென்றவர் இன்னும் திரும்பி வரவில்லை. அவனது உறவினரும் நண்பரும் எல்லாரும் திரும்பிவிட்டார்கள். காத்தான் தந்தை வந்தபிறகுதான் வீட்டில் அன்று சாப்பாடு. காத்தானின் தாய்க்கு இரண்டு நாளாக ஜுரம். அவன் தங்கை நாலுவயதுக்குழந்தை; ஏதோ சிலர் பரிதாபப்பட்டுக் கொடுத்த நாலு தம்பிடிக்கு முறுக்கும் வடையும் தின்றுவிட்டுப் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தாள். காத்தானோ ஒன்றும் தின்னவில்லை. அன்று முழுதும் தேடியலைந்தும் அவனுக்கு ஒன்றும் கிடைக்கவில்லை. துர் அதிர்ஷ்டம் பிடித்த நாள் என்று காத்தான் எண்ணிக்கொண்டு அந்தக் கட்டைமீது உட்கார்ந்திருந்தான். ஒருவேளை தன் தந்தை இரவு திரும்பி வந்தாலும் வரலாம் என்று ஆசையோடு எதிர்பார்த்திருந்தான். ஒரு பக்கம் பயமாயிருந்தது. முதல் நாள்தான் கறுப்பன் கடலில் விழுந்து வெகு கஷ்டப்பட்டு ஆண்டவன் அருளால் வெகு நேரம் கழித்து கட்டுமரத்தில் தொத்திக் கொண்டு வந்துசேர்ந்தான். ஒருவேளை தந்தைக்கு ஏதேனும் ஆபத்து வந்துவிட்டதோ என எண்ணினான் காத்தான். ஒருவேளை நல்ல மீன்கள் கிடைத்ததனால் நாழிகையாகிறதோ என யோசித்தான்.

சூரியன் மலைவாயில் விழுந்து சற்று நேரமிருக்கும். அன்று நல்ல சந்திர வெளிச்சம் ; கடற்கரையில் பலர் உலாவிவிட்டு வீட்டுக்குத் திரும்பிச் செல்வாராயினர். தூரத்தில் சில பிள்ளைகள் அழகிய சட்டை, உருமால் அணிந்து, கையில் பிரம்பு வீசிக்கொண்டும் தமாஷாகப் பேசிக்கொண்டும் நடந்தனர். கடலில் மிதந்துகொண்டிருந்த நீராவிக் கப்பல்களைக் காட்டி, அவைகளைப்பற்றிப் பேசிக்கொண்டு சென்றார்கள். நமது காத்தான் அவர்களைப்பார்த்துப் பெருமூச்சு விட்டான். அவர்கள் போலத்தானும் நல்ல சட்டை போட்டுக்கொண்டு பள்ளிக்கூடத்திற்குப் போகமுடியவில்லையே என வருந்தினான். "நம் அப்பாவும் இந்த மாதிரி மீன் பிடித்து ஜீவனம் செய்யாமல், சுகமாக பங்களாவில் வசித்துக்கொண்டு மோட்டார் வண்டியில் ஏறிக்கொண்டு ஏன் போகக்கூடாது? இந்த உலகத்தில் நியாய அநியாயம் விளங்கவில்லை. அதோ போகும் பையன் என்னைவிடக் கறுப்பாக இருக்கிறான். அவன் வெள்ளைப்பட்டுச் சட்டை போட்டிருக்கிறானே !'' என்று பலவிதமாக யோசனை செய்தான்.

பிறகு கரையிலிருந்து இரண்டு மைல் தூரத்தில் இருந்த அந்த நீராவிக் கப்பல்களை நோக்கினான். கடற்கரை யோரத்தில் கோபுர தீபஸ்தம்ப வெளிச்சம் விட்டுவிட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. சந்திர வெளிச்சத்தில் அடிவானத்தினருகே அக்கப்பல்கள் வெகு அழகாகத் தோன்றின. அநேகத் தடவை காத்தான் இவ்வாறு வரும் கப்பல்களில் ஏறிப் பார்ப்பதுண்டு. அக்கப்பல்கள் சாதாரணமாக இரண்டு மூன்று நாள் தங்கியிருந்து திரும்பிப் போகும். கப்பல்களில் வேலை செய்யும் உத்தியோகஸ்தர்கள் காத்தானைப் பிரியமாக நடத்துவார்கள். பலதின் பண்டங்கள் கொடுப்பதுண்டு. கப்பல் இயந்திரங்களைக் காட்டுவதுண்டு. ஒவ்வொரு சமயம் கடலில் குதித்து முழுகி நீந்திக் காட்டுவார்கள். மிதக்கும் ரப்பர் பையைக்கட்டிக்கொண்டு காத்தானும் அவர்களுடன் விளையாடியிருக்கிறான். அக்கப்பல்களைப் பார்த்தவுடன் காத்தானுக்குப் பலவித யோசனை கிளம்பின. தானும் அவ்விதம் கப்பலில் வேலையாகப்போய் கடலில் பிரயாணம் செய்யவேண்டுமென்ற பெரும் ஆசை அவனைப் பிடித்தது.

தந்தை அடிக்கடி சொல்லியுள்ள கதைகளைப் பற்றிக்காத்தான் யோசனை செய்தான். அவர் பாட்டனார் காலத்தில் அவருக்குச் சொல்லியிருந்த கதைகள் எல்லாம் ஞாபகம் வந்தன. கடலுக்கு அக்கரையிலிருந்து வரும் இந்த வெள்ளை மனிதர்களின் தேசத்தைத் தானும் பார்க்கவெகு ஆவல் கொண்டான். இவ்விதம் யோசனை செய்து கொண்டே மரக்கட்டையின் மீது காத்தான் சோர்ந்து படுத்திருந்தான். பசியின் கொடுமையும் அலைச்சல் சிரமமும் சேர்ந்து கண்களைமூடின.

* * *

சற்று நேரத்திற்கெல்லாம் காத்தான் கண் விழித்துப்பார்க்கவே தான் அழகிய ஒரு கப்பல் மீது இருப்பதாகத் தெரியவந்தது. அவன் பக்கலில் வெளுத்த தாடியுள்ள ஒரு கிழவன் உட்கார்ந்திருந்தான்.

''அப்பா காத்தா! நான் உன் அப்பனின் பாட்டன். நீ அக்கரைச் சீமைக்குப்போக ஆசைப் பட்டபடியால் உன்னை அழைத்து வந்தேன்'' என்று சொல்லிவிட்டு அவனை அழைத்துக்கொண்டு போய்க் கப்பல் முழுதும் காட்டினான்.

அக்கிழவன் மேலுங் கூறியதாவது :— ''இது புதுமாதிரிக் கப்பல். எனக்கு ஒன்றும் தெரியவில்லை. நான் பார்த்திருக்கும் கப்பலில் அநேக பாய்மரங்கள் உண்டு. இதில் இருப்பதுபோலவே பீரங்கிகள் இருக்கும். ஆனால் இந்தக் கப்பலில் கொல்லக்பட்டரை போல் பெரிய அடுப்பும், புகை போகும் குழாயும் இருக்கின்றன. இவை எல்லாம் முன் காலத்துக் கப்பல்களில் கிடையா.''

''ஆனால் இது உங்கள் கப்பல் இல்லையா? உங்கள் கப்பல் இந்த மாதிரி இராதா?'' என்று வினவினான் காத்தான்.

''இது உனக்காகத் தருவித்தேன். எங்கள் காலத்தில் இருந்த கப்பல்கள் எல்லாம் பெரிய படகுகள் போன்றவை. இக்காலத்துக் கப்பல் எல்லாம் நீராவி சக்தியினால் சீக்கிரமாக வெகு தூரம் பிரயாணம் செய்யும். எங்கள் காலத்தில் வெள்ளைக்காரர்கள் முதல் முதல் நமது ஊர்ப்பக்கம் வர ஆரம்பித்தார்கள். ஒருநாள் கடற்கரையில் நான் சிலபேருடன் உட்கார்ந்து இருக்கையில் தூரத்தில் ஒரு பெரிய கப்பல் வந்தது. சற்று நேரத்திற்கெல்லாம் ஒரு படகைத் தள்ளிக்கொண்டு சில வெள்ளைக்காரர்கள் வந்தார்கள். அவர்களைப் பார்த்தவுடன் எங்களுக்கு ஆச்சரியமாயிருந்தது. எங்கிருந்து இவர்கள் குதித்தார்கள் என்று எண்ணினோம். கடலுக்கு அக்கரை எவ்வளவு தூரம் இருக்குமென்று எங்களுக்குத் தெரியாது. பிறகு சில வருஷங்களுக்கெல்லாம் இந்த வெள்ளைக்காரர்கள் அதிகமாக வர ஆரம்பித்தனர். சரக்குகளைப் படகுகளில் ஏற்றிக்கொண்டு போய்க் கொடுப்போம். அவர்களுக்கு உதவியாகத் தரகர்கள், துபாஷ்கள் நமது ஊரில் சிலர் ஏற்பட்டார்கள். ஆ! அந்த நாட்களை எண்ணினால் எவ்வளவு சந்தோஷமாயிருக்கிறது?''

இவற்றையெல்லாம் சாவதானமாகக் கேட்டுக் கொண்டிருந்த காத்தான் அப்போதுதான் ஒரு விஷயம் கவனித்தான். தான்திடீரென்று வளர்ந்து விட்டதாகத் தெரிந்தது. ஏனெனில் வெகு உயரமான ஒரு மனிதன் தன்னிடம் ஏதோ கேட்பதற்காக வந்தான். அவனை நிமிர்ந்து பாராமல் நேருக்கு நேராகப் பேசும் படியிருந்தது.

''காப்தான்! கப்பல் நேரே லண்டனுக்குச் செல்லாமல் சற்று திரும்பின மாதிரி யிருக்கிறது. முதலில் கப்பல் எங்கு நிற்க வேண்டுமென்று உத்தரவு கேட்டுப் போகவந்தேன்.''

தன்னைப் பேரைச்சொல்லி யழைத்து ஏதோ கேட்பதைப் பார்த்ததும் காத்தானுக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஆனால் அவன் அருகே இருந்த கிழவன் ''லண்டனுக்கே செல்வோம்'' என்று விடையளித்தனுப்பினான். அவன் போன பிறகு காத்தானைப் பார்த்து ''இக்கப்பல் உன்னுடையது. நீ தான் தலைவனாகிய காப்தான்'' என்றான்.

''ஆ! அப்படியா! என் அதிர்ஷ்டம் இவ்வளவா?''

''நீ உன் கப்பலில் சரக்குகள் கொண்டு லண்டனில் இறக்கிவிட்டு மறுபடியும் லண்டனிலிருந்து சரக்குகள் ஏற்றிக்கொண்டு திரும்பவும் சேட்டால், சிங்கப்பூர்போய் அங்கிருந்து நாகூர் செல்லலாம்!''

''எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே! நேட்டாலுக்கு எப்படி வழி? எனக்கு மாத்திரம் இவ்விதமான கப்பலில் வேலைக்கு அமர்ந்து கப்பலில் பூலோக முழுதும் சுற்றிவர வேண்டும் என்று ஆசை தான்!''

''அந்த ஆசையைத் திருப்தி செய்துகொள்ளவே உனக்கு இந்தக்கப்பல்தந்தேன். எங்கள் காலத்தில் இவ்விதம் கப்பலில்வரும் வெள்ளைக்காரரைப்பார்த்து ஆச்சரியப்படுவோம். ஆனால் உங்களைப்போல ஆசைபிடித்து அவதிப்படவில்லை. என் வீட்டில் குழந்தைகள் எல்லாரும் வயிறு நிறைய உண்டு உடம்பு நிறைய உடுத்து ஆளுக்கு ஒரு பொன் நகையும் போட்டுக்கொண்டு சுகமாக இருந்தார்கள். ஒரு சமயம் ஒரு வெள்ளைக்காரனுக்கு வழி காட்டினதற்காக நூறு ரூபா இனும் கொடுத்தான். ஆ! நாங்கள் வெகுசந்தோஷமாக இருந்தோம்.''

''பாட்டா! நீங்கள் சொல்வதை யெல்லாம் கேட்கக் கிடைத்தது என் அதிர்ஷ்டம் தான். உங்கள் நாட்களில் நீங்கள் அடைந்த சுகத்தைக் கேட்டாவது ஆனந்த மடைகிறேன். அப்பா இன்றுகாலை மீன்பிடிக்கப் போனவர் இன்னும் வரவில்லை. அம்மாவும் என் தங்கையும் நானும் நேற்று குடித்தகஞ்சிக்குப் பிறகு ஒரு துளி ஆகாரமும் இன்றிப்பட்டினியா யிருக்கிறோம். வெள்ளை மனிதர்களாவது அல்லது வெள்ளைக்காரரைப் போல சட்டை, தொப்பிபோட்டுக் கொள்ளும் நம் ஊர்ப் பெரிய மனிதர்களாவது அங்குமிங்கும் உலாவுகிறார்களேயன்றி ஒரு காலணா கொடுப்பதில்லை !''

''ஆம் உண்மையாகவே காலம் வரவரக் கெட்டுப் போய்விட்டது.''

''பசி உபத்திரவம் போதா தென்று நீங்கள் சொல்லுவது போல இந்தப் பாழும் ஆசை பெரிய அவதி. எனக்கு மற்ற பிள்ளைகளைப் போலப்படிக்க வேண்டும் என்று ஆசை.''

''அந்த ஆசையைப் பூர்த்தி செய்யபகவான் தான் அருள் செய்ய வேண்டும். பூலோகமுழுதும் கப்பலில் பிரயாணம் செய்யும் இந்த வெள்ளைமனிதர்கள் மிகவும் சாமர்த்தியமான செம்படவர்கள். அவர்கள் ஊரில் மீன் பிடிப்பவர்கள் எவ்வளவு சுகமாகவிருக்கிறார்கள் தெரியுமா? அவன் ஒரு நாள் உணவுக்குச் செலவழிக்கும் பணத்தினால் ஒரு வாரம் உன் குடும்பம் ஜீவிக்கும். செம்படவர்களில் எத்தனையோ லக்ஷப் பிரபுக்களும் உளர். மீன் பிடிக்கும் தொழிலில் சாமர்த்தியமாயிருந்ததனால் கடலில் தைரியமாய் வெகு தூரம் செல்லவும் பிறகு தைரியமாகக் கப்பல்களில் வேறு தேசங்களுக்குச்செல்லவும் துணிந்தனர். இது எல்லாம் நான் இறந்துபோன பிறகு எனக்குத் தெரிய வந்தது !''

''நானும் கடலில் இரண்டு மைல் நீந்துவேன். வெகு நேரம் மூச்சு அடக்கிக்கொண்டு முழுகியிருப்பேன். ஒரு சமயம் முழுகின போது கையிலேயே ஒரு பெரிய மீனைப்பிடித்தேன். என்னைப்போலப் பிள்ளைகள் பலர் உளர். பிள்ளைகளைத் தவிர பெரியவர்களும் கெட்டிக்காரர்கள்தாம். ஏன் எங்களுக்கு மாத்திரம் கப்பல்கள் இல்லை? இந்தக் கப்பல் என்னுடையது என்று நீங்கள் சொல்வதை நம்ப முடியவில்லையே.''

''இந்தக் கப்பல் உனக்கு நான் கொடுத்தேன். உன் தோழர்களுக்கு என் கப்பல் இல்லை என்றால் நான் என்ன செய்வது? உங்கள் ஊரிலுள்ள இராஜாவும், பிரபுக்கள் எல்லாரும் கப்பல் தொழில் விருத்தியும் வியாபாரவிருத்தியும் செய்ய எண்ணங்கொண்டு ஆரம்பித்தால் உன்னைப் போன்ற செம்படவர்கள் சாமர்த்தியமான கப்பலோட்டிகளாகமாட்டார்களா? வெள்ளைக்காரர் கொண்டுபோகும் சரக்குகளை நாமே கொண்டுபோய் விற்று வரலாமே!''

''என் பசி எனக்குத்தெரியும்'' என்று காத்தான் உட்கார்ந்தான். கிழவன் ஒரு மணி அடித்தான். உடனே வந்த வேலையாளிடம் சாப்பாடு கொண்டு வரச்சொன்னான். ஆனால் காத்தான் குளித்த பிறகு தான் சாப்பிடுவேனென்று பிடிவாதம் செய்த படியால் கிழவன் அவனை ஸ்நான அறைக்கு அழைத்துச் சென்றான். ஆகா! என்ன அழகாயிருந்தது? ஒரு குழாயைத் திருப்பினவுடன் மேலே பனி நீர் தெளித்ததுபோல உயரத்தில் ஒரு வட்டமான தகரத்தின் சிறு துவாரங்களினின்றும் நீர் சொரிந்தது. என்ன சுகம் என்று காத்தான் நினைத்தான்.

* * *

சந்திரன் மறைந்து வானம் சற்று இருளடைந்தது. திடீரென்று கொஞ்சம் நீர்த்துளிகள் விழ ஆரம்பித்தன. உடனே காத்தான் விழித்தெழுந்தான். மழை தூறிக்கொண்டிருந்தது. ''சீச்சீ! இவ்விதம் எவ்வளவு தடவை கனாக் காண்பது? ஏன்? நிஜமாக விழித்திருக்கும்பொழுது ஆனந்தமும் சுகமும் இல்லாவிட்டாலும் கனாக்கண்டாவது ஆனந்திப்போமே'' என்று எண்ணிக்கொண்டான் காத்தான். மரக் கட்டைகளின் கீழ் நகர்ந்து மறுபடியும் படுத்தான். பசியோ வயிற்றைக் கிண்டுகிறது. தந்தையோ வந்தபாடில்லை. பொழுதுவிடிய இன்னும் வெகுநேரமிருக்கிறது. இருள் அகன்று ஸந்தோஷமாகப் பொழுதுவிடியும் நாள் என்றோ என்று மறுபடியும் கண்களை மூடி நித்திரையிலமர்ந்தான்.

மணித்திரள்

ஸ்பெயின் தேசத்தில் சமீபத்தில் எடுத்த ஜனக்கணிதியின் பிரகாரம் நூறு வயது தாண்டிய 96 ஆடவர்களும் 258 ஸ்திரீகளும் இருக்கிறார்களாம்.

*　*　*

இதாலியில் இஸார்க்கோ என்னும் நதி ஒன்று இருக்கிறது. அதை அதன் படுகையி லிருந்து முறித்து ஒரு பெரிய குழாய் வழி யாக எட்டு மைல் தூரம் கொண்டுபோய் பால்ஸானோ நகருக்கருகில் 700 அடி உயரத் திலிருந்து கீழே விழும்படி செய்யப்போகிறார் கள். இந்தச் செயற்கை நீர் வீழ்ச்சியிலிருந்து 2,20,000 குதிரைகளின் சக்தியுள்ள மின்சார சக்தி உண்டாகுமாம்.

*　*　*

இங்கிலாந்தில் அல்வாஸ்டன் என்னுமிடத் தில் வசிக்கும் மிஸ்டர் ரோலண்டு பிரின்ஸ் என்பவர் 1927-ம் வருஷத்துக் காலண்டர் ஒன்று செய்திருக்கிறார். இது உலகிலேயே மிகச் சிறிய காலண்டராம். கால் ரூபா நாண யத்தினால் இதை மூடி மறைத்து விடலாம். ஆயினும் இதிலுள்ள தேதி விவரம் மிகத் தெளிவாயிருப்பதால் பூதக் கண்ணாடியின் துணையின்றியே இதைப் பார்த்துத் தேதி தெரிந்து கொள்ளக் கூடுமாம்.

*　*　*

புட்டிகளுக்குத் தக்கை போட உபயோகிக் கும் கார்க் என்னும் பொருள் உஷ்ணத்தைத் தடுக்கும் சக்தியுள்ளதாம். வீட்டுச் சுவர்களின் நடுவில் கார்க்கை வைத்துக் கட்டிவிட்டால், மழைகாலத்தில் உள்ளிருக்கும் சூட்டை வெளி யில் விடாமலும், கோடை காலத்தில் வெளி யிலுள்ள அதிக உஷ்ணத்தை உள்ளே விடா மலும் பாது காக்குமாம். இங்கிலாந்தில் கெண்ட் நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளருக்கு இத்தகைய வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட் டிருக்கின்றன.

*　*　*

லண்டனிலுள்ள ஒரு பெரிய ஹோட்டலில் உருளைக் கிழங்கு உரிப்பதே தொழிலாகக் கொண்ட ஒரு பட்டாளம் சிறுவர்கள் இருக் கிறார்களாம். இவர்கள் இவ்வேலையில் மிகச் சமர்த்தர்களாம். சிலர் மணிக்கு 70 ராத்தல் உருளைக் கிழங்கு உரித்து விடுவார்களாம். வரு ஷத்திற்கொருமுறை இவர்களுக்குள் போட்டி வைக்கப்பட்டு வெற்றிபெறுபவர்க்கு வெகுமதி யளிக்கப்படுகிறது. இப்போட்டி யொன்றில் ஒரு சிறுவன் 28 ராத்தல் உருளைக் கிழங்கை 18 நிமிஷம் 25 விநாடியில் உரித்தானும்.

*　*　*

50 வருஷம் உயிர் வாழ்ந்த ஒருவன் சாதா ரணமாக 6000 மணி நேரம் தூக்கத்திலும் 6500 மணி நேரம் வேலையிலும் கழித்திருப் பான் என்று கணக்கிடப் பட்டிருக்கிறது. ஆனால் குழந்தை பிறந்த தினத்திலிருந்து தூங்கத் தொடங்கி விட்டபடியாலும், கொஞ் சம் வயதான பின்னரே வேலைசெய்யத் தொடங்கியிருக்க முடியுமாதலாலும் சாதாரண மாக தினந்தோறும் தூக்கத்தில் கழிக்கும் நேரத்தைவிட ஒரு மணி அதிக வேலை செய் திருக்க வேண்டுமாம்.

*　*　*

ரயில்வே அபாயங்களை அறவே தடுப்பதற்கு இதாலியர் ஒருவர் ஒருபுதிய உபாயத்தைக் கண்டுபிடித்திருக்கிறார். இதன் படி ரயில் பாதையில் இரண்டு தண்டவாளங்களுக்கும் நடுவில் மூன்றாவது தண்டவாளம் ஒன்றிருக் கும். ரயில் ஓடும் போது இதில் மின்சாரசக்தி உற்பத்தியாகிக் கொண்டிருக்கும். என்ஜினி லும் மின்சாரக் கருவி ஒன்றிருக்கும். தண்ட வாளத்தில் எங்கேனும் தடை ஏற்பட்டிருந் தால், என் ஜினில் முதலில் ஒருவகை வெளிச் சம் உண்டாகும். டிரைவர் இதைக்கவனியா விட்டால் பின்னர் மணி அடிக்கும். இதுவும் டிரைவரின் கவனத்தைக் கவராவிட்டால் மின் சாரசக்தியினால் இயங்கும் பிரேக் தானகவே என் ஜினை நிறுத்திவிடுமாம்!

*　*　*

ஐரோப்பாவில் ஆஸ்திரியா தேசத்தின் திலகமான வியன்னு உலகிலேயே மிகச் சுத்தமான வீதிகளையுடையதென்று பெயர் பெற்றது. அந்நகருக்குச் சென்றிருந்த ஓர் ஆங்கிலேயர் டிராம் வண்டியிலிருந்து இறங்கி யதும் மற்ற நகரங்களில் வழக்கமாகச் செய் வது போல் டிராம் டிக்கட்டைக் கீழே எறிந் தாராம். உடனே ஒரு போலீஸ்காரன் அவ ரைப் பிடித்துக்கொண்டு வீதியை அசுத்தம் செய்ததற்காக இரண்டு ஷில்லிங் அபராதம் போட்டு அதற்கு ரசீது கொடுத்தானும். ஆங்கி லேயர் எரிச்சலுடன் அந்த ரசீதைக் கசக்கிக் கீழே யெறிந்தாராம். இதற்காக இன்னோர் இரண்டு ஷில்லிங் அவர் அபராதம் விதிக்கப் பட்டார். அவருக்கு எரிச்சல் அதிகமாகி வியன்னு போலீஸ் சட்டத்தைத் திட்டினாராம். அந்தப் போலீஸ்காரனுக்கு ஆங்கிலந்தெரிந் திருந்தபடியால், "கெட்ட வார்த்தைகள் பேசிய"தற்காக மற்றொரு பத்து ஷில்லிங் அபராதம் போட்டுவிட்டானும்!

எதிரொலி

இருவித உண்மைகள்

ஸ்வாமி விவேகானந்தரின் பின் வரும் மொழிகளை "ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்" வெளியிட்டிருக்கிறது:—

நமது சாஸ்திரங்கள் இரண்டுவித உண்மை களுக்குள்ள வித்தியாசத்தைத் தெளிவு பெற எடுத்துக்காட்டுகின்றன. ஒருவகை உண்மை கள் என்றும் மாறாத்தன்மையன; ஏனெனின், அவைகள் மனித ஜாதியின் சுபாவத்தையும், ஆத்மாவின் சுபாவத்தையும், ஈஸ்வரனுடைய சுபாவத்தையும், ஆத்மாவுக்கும் ஈஸ்வரனுக்கும் உள்ள சம்பந்தத்தையும், பரிபூரணத்வம் முத லியவைகளையும் அடிப்படையாக உடையன. எவ்விடத்திலும் எக்காலத்தும் ஒரே தன்மை யாய் இயங்கும் பிரகிருதி சட்டங்களை அடிப் படையாக உடைய பிரபஞ்சத்தின் உற்பத்தி யைப்பற்றியும், சிருஷ்டி அநாதி என்பதைப் பற்றியும், இன்னும் இவை போன்ற பிறவற் றைப் பற்றியும் உள்ள கொள்கைகள் மாறாத் தன்மையனவாய உண்மைகளில் அடங்கின வையாகும். மற்றொருவித உண்மைகள் மாறும் தன்மையனவாம். இவை மனிதன் தன் தின சரிவாழ்வில் நடக்கவேண்டிய வழியை விதிக் கும் சிறிய சட்டங்களாகும். இவ்வுண்மைகள் புராணங்களிலும் ஸ்மிருதிகளிலுமே உள்ள வை; சுருதியைச் சேர்ந்தவையாகா. இவ் விருவித உண்மைகளுக்கும் யாதொரு சம்பந் தமுமில்லை. பின் கூறப்பட்ட சின்னஞ் சிறிய தினசரி வாழ்வுக்குரிய சட்டங்கள் நமது ஹிந்து சாதியிலேயுங்கூட அப்போதைக்கப் போது மாறிக்கொண்டே வந்திருக்கின்றன ஒரு யுக வழக்கங்கள் மற்றொருயுகத்தில் வழங்கி வந்ததாகக் காணப்படவில்லை. இப்படி யுகந் தோறும் யுகந்தோறும் வழக்கங்கள் மாறு தல் அடையத்தான் வேண்டும். காலவேறு பாடுகளுக்குப் பொருத்தமுள்ள நடை யுடை பாவனைகளையும் வழக்கங்களையும் விதித்து நமக்கு வழிகாட்ட மகத்தான ரிஷிகள் ஜனிப் பார்கள்.

வேதாந்தத்திற்கு மாறாக ஸ்மிருதியில் ஏதா வது காணப்பட்டால் அதனைத் தள்ளிவிட வேண்டும். ஸ்மிருதியின் அதிகாரம் அப்பொ ழுது செல்லாது. இந்த ஸ்மிருதிகளும் கால வேறு பாடுகளுக்கு இசைய மாறிக்கொண்டே வந்திருக்கின்றன. ஸத்திய யுகத்தில் இன் னின்ன ஸ்மிருதிகள் பிரமாணங்களாயிருந்தன வெனவும், திரேதாயுகத்தில் இந்த ஸ்மிருதி களுக்குப் பதிலாக வேறு ஸ்மிருதிகள் பிரமா ணங்களாகக் கொள்ளப்பட்டன எனவும், துவாபரயுகத்தில் வேறு சில ஸ்மிருதிகள் பிரமாணங்களாக அங்கீகரிக்கப்பட்டன என வும், கலியுகத்தில் மற்றும் சில ஸ்மிருதிகள் பிரமாணமாகக் கருதப்படவேண்டு மெனவும், இவ்வாறாக நாம் சாஸ்திரங்களில் வாசிக்கின் றோம். ஒரு காலத்தின் முக்கிய நிலைமைகள் மாறுபட்ட பொழுதும், புதுப் புது சக்திகள் கள் சேர்ந்த பொழுதும், அயல் சார்புகள் நமது ஹிந்து சாதியில் உட்புகுந்த பொழுதும், இவைகளுக்கு இசைய நமது வழக்கங்களையும் நடையுடை பாவனைகளையும் மாற்ற வேண்டிய தாயிருந்தது. இந்த விஷயத்தை உங்கள் கவனத்தில் என்றும் மறவாது வைத்திருத்தல் வேண்டும்.

பெண் ஆணனள்!

"இண்டியன் நாஷனல் ஹெரால்ட்" பத்திரிகையில் பின்வரும் விவரம் வெளியாகி யிருக்கிறது:—

பெண்ணை ஆணாகவும், ஆணைப் பெண்ணாக வும் செய்வதற்குரிய முறையைத் தாம் கண்டு பிடித்து விட்டதாக மாஸ்கோ நகரில் உள்ள டாக்டர் ஐ. ஏ. கோலானிட்ஸ்கி என்பார் கூறு கிறார் 1926-ல் தாம் ஆறு பேருக்கு இச்சிகிச் சையைச் செய்து வெற்றி பெற்றதாகவும், இவ்வாறு பேரையும் இப்போது பெயர்பெற்ற ஒரு விஞ்ஞானச் சங்கத்தார் ஆராய்ச்சி செய்து வருகிறார்களென்றும அவர் சொல்கிறார்.

மேற்சொன்ன அறுவரில், 19 வயதுள்ள "ஆன்" என்னும் பெண் முதன்மையானவள். இவள் ஆண்மகனாக விரும்பினள். இவளு டைய மனோபாவம் பெரிதும் ஆண்மகனு டையது போலவே இருந்தது. எனவே மேற் படி டாக்டர் இவளுக்கு ஒன்பது முறை இரண சிகிச்சை செய்தார். கிளாண்ட் என் னும் உள்ளுறுப்புகளில் சிலவற்றை எடு த்து விட்டும் சிலவற்றைப் புதிதாகச்சேர்த்தும் அவள் உடலின் கிளாண்ட் அமைப்பையே மாற்றிவிட்டார். இதன் பயனாக அப்பெண் இப்போது முழுதும் புதிய தோற்றமடைந்து ஆண்மகனாகித் தன் பெயரையும் "விக்டர்" என்று மாற்றிக்கொண்டிருக்கிறாள(ன?)ம்!

26 வயதுள்ளவளும், உபாத்தியாயினியு மான "ஹடீர்ஜா" என்னும் பெண்ணுக்கும் இதே சிகிச்சை செய்யப்பட்டது. இப்போது ஹடீர்ஜா ஆணாகி ஓர் அழகிய சிறுபெண்ணைக் கலியாணமும் செய்து கொண்டிருக்கிறாள்!

மூன்றாவது பெண்ணான "மேரி" என் பாள், இதற்கு மாறாக, தன்னிடமிருந்த ஆணுக்குரிய சில சுபாவங்களைப் போக்கிக் கொண்டு, முற்றும் பெண்மைக் குணங்களை யே பெற விரும்பினள் இதுவும் இச்சிகிச் சையினால் கை கூடிற்றாம்.

"மேரி எல்" என்னும் மற்றொரு பெண் 23 வயதானவள். இவள் உடல் அமைப்பு பெண் அமைப்பாயிருந்தாலும் மனோபாவம் முழுதும் ஆண் மனோபாவமாயிருந்தது இவள் தன் உள்ள நிலைக்கேற்றவாறு உடம்பு அமைப் பை மாற்றிக்கொள்ள விரும்பினள். இது சாத் தியமாயிற்று என்று மேற்படி டாக்டர் சொல் கிறார். இப்போது "விளாடிமீர்" என்ற பெய ருடன் அவள் செட்டையான ஓர் இளைஞனா "சோவியட்" சைன்யத்திலும் சேர்ந்திருக் கிறான்!!

எந்த ஸ்திரீயையும் ஆணாக்கவும், எந்த ஆண் மகனையும் பெண்ணாக்கவும் தம்மால் முடியு மென்று மேற்படி டாக்டர் சொல்கிறாரில்லை. உடல் அமைப்பும், உள்ளத்தின் நிலையும் மாறு பட்டிருப்போர் விஷயத்தில் ஆணாகவோ பெண்ணாகவோ மாற்ற முடியுமென்று மட்டு மே அவர் கூறுகிறார்.

துருக்கி சுல்தான் போக்கிஷத்தில் இந்திய ஆடை!

"பம்பாய் கிரானிகல்" பத்திரிகைக்கு அதன் ஸ்டாம்போல் நிருபர் எழுதியுள்ள கடி தத்தின் ஒரு பகுதிவருமாறு:—

துருக்கியில் குடியரசு ஏற்பட்டதும், மார் மோரா கடற்கரையில் இருக்கும் துருக்கி சுல் தான்மாரின் பழைய அரண்மனை பொது மக் கள் காட்சிச் சாலையாக மாற்றப்பட்டது. பண் டை நாளில் பிரசித்தி பெற்றிருந்த ஆட்டோ மான் வமிசத்து சுல்தான்கள் இவ்வரண்மனை யிலேதான் வசித்தார்கள். டில்லியிலும் ஆக்ரா விலுமுள்ள மொகலாய மன்னர்களின் அரண் மனைகளைப் பார்த்தவர்களுக்கு இவ்வரண்மனை யின் உட்புறம் சிறப்புச் சிறப்பும், கலையழகும் இல்லாத தொன்றாகக் காணப்படுமாயினும், சுற்றிலும் அற்புத இயற்கைக் காட்சிகள் பொலியக் கம்பீரமான தோற்றங்கொண்டு நிற் கும் இம்மாளிகை பார்க்கத்தகுந்த தொன்று என்பதில் ஐயமில்லை. இவ்வரண்மனையில் சுல் தான் மாரின் பொக்கிஷ அறை சென்ற வாரத் தில் தான் பொது மக்கள் பார்ப் பதற்குத் திறந்துவிடப்பட்டது. இப்போது 12 அணு கொடுப்போர் எவரும் இப்பொக் கிஷத்தினுள் சென்று பார்க்கலாம். கான்ஸ் டாண்டி நோபிளை முதன் முதலில் கைப்பற்றி வெற்றி வீரன் என்று பெயர் பெற்ற மூகமது முதலாக கேற்றவரை இருந்த சுல்தான்களின் ஆடை ஆபரணங்கள் எல்லாம் இப்பொக்கி ஷத்தில் இருக்கின்றன. பளபள வென்று ஜொலிக்கும் ஆடைகளும், விலை மதிக்கவொண் ணாத கற்கள் பதித்த பிடிகளுள்ள உடைவாள் களும், கெட்டித்தங்கத்தினால் செய்யப்பட்டு வைரங்களும், மாணிக்கங்களும் பதித்த சிம் மாசனங்களும், மற்ற ஆபரணங்களும் பார்ப் போர் கண்களைப் பறித்து மதி மயங்கச் செய் வதாயிருக்கின்றன. இப்பெருஞ் செல்வத் திரளைச் சிறிது நேரம் பார்த்தால் எவருக்கும் தலை சுழல ஆரம்பிக்கும். உடனே வெளியே சென்று நீல வானத்தையும், சூரிய வெளிச் சத்தையும் பார்க்கவிரும்புவர். இவ்வாறு ஜகஜ்ஜோதியாகத்திகழும் ஆடை ஆபரணக் குப்பலில் இந்தியர் ஒருவரின் கண்களை முதன்மையாகக் கவரும் பொருள் ஒன்றும் இருக்கிறது. இது கான்ஸ்டாண்டி நோபிளைக் கைப்பற்றிய வீரனான சுல்தான் முகமதுவின் மகுடாபிஷேக உடையேயாகும். விஸ்தார மான பிரதேசங்களை ஜெயித்து ஆண்ட இச் சக்ரவர்த்தியின் உடை இந்தியத் துணியின லானது! என்ன விந்தை? 1453-ம் ஆண்டில் சக்ரவர்த்திகளுக்கு உடையளித்த இந்தியா வானது 1927-ல் கோவணத் துணியையும் வெளிநாடுகளிலிருந்து தருவித்துக் கொள் கிறது! காருண்ய பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இந்தியாவின் மீது சொரிந்துள்ள நன்மைகள் அத்தகையன!

வாழ்க்கை என்பது உண்மை. வெறும் விளையாட்டுக் காரியமன்று. இடுகாடு அதன் முடிவும் அன்று. மண்ணால் ஆன நீ, மண்ணா கவே ஆவாய் என்பது ஆன்மாவைப் பற்றிச் சொல்லியதன்று.—லாங்பெல்லோ.

உதிர்ந்த மலர்கள்

ஸ்ரீமான் சுபாஷ் சந்திர போஸ் (ஒருகடி தத்தில்):— என்னுடைய உடல் நிறை 183 ராத்தலிலிருந்து 157 ராத்தலுக்கு வந்துவிட் டது. ஆனால் உடல் வலிமை எவ்வாறாயினும் மனோவலிமை மட்டும் முன் போலவே இருக் கிறது. உண்மையில், உடல்வலிமை குன்றக் குன்ற ஆன்மசக்தி அதிகமாகிவருகிறதென்றே நம்புகிறேன்.

*　*　*

மகாத்மா காந்தி:—ஆலைத்துணியைஉற்பத்தி செய்யும் முதலாளிகளும் தொழிலாளிகளும் கதர் அணிதல் எவ்வாறு பொருந்துமென்று கேட்கிறீர்கள். மான்செஸ்டர் ஆலை முத லாளிகள் தங்கள் ஆலைகளில் உற்பத்தியா கும் துணிகளை அணிவதில்லை யென்று உங்களுக்குத் தெரியுமா? ஹெப்ரிடீஸ் தீவி லுள்ள ஏழைகளின் பரிதாப நிலையைக் கண்டு ஸதர்லண்டு டச்சஸ் என்னும் பெருமாட்டி அவர்களுக்கு இராட்டைகளையும் கைத்தறிகளையும் அளித்தார். ஹெப்ரிடீஸ் ஜனங்கள் கையினால் நூற்று நெய்த துணி கள், மான்செஸ்டர் ஆலைத்துணிகளைவிட மூன்று மடங்கு அதிக விலையுள்ளதாயிருந்தும், மான்செஸ்டர் வாசிகள் - ஆலைச்சொந்தக்காரர் களுள்பட - அத்துணிகளைவாங்கி அணிகிறார்கள்.

*　*　*

மேற்படியார்:— சத்தியம் அனைவராலும் அறிந்து கொள்ளப்பட வேண்டுமானால் அதைக் கோடி கோடி முறை சொல்லியாக வேண்டும். சத்தியத்தை ஒருமுறை சொல்லு தலே போதுமானதாயின் இதற்குள் ஒவ் வொருவரும் தெய்வநம்பிக்கை யுடையவர் களாகியிருப்பார்கள். ஆண்டவன் ஒருவனே என்னும் உண்மை இதுகாறும் கோடிக்கணக் கான முறை சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அவ்வுண்மையை இதயத்தில் ஏற்றுக்கொண் டவர் மிகச் சிலரே யாவர்.

*　*　*

மேற்படியார்:— தர்மஞ்செய்து ஏழைகளைக் காப்பாற்றுவதாகச் சொல்லாதீர்கள். தர்மத் துக்குப் பாத்திரமானவர் இரண்டு கூட்டத் தினரேயாவர்: (1) தனக்கென்று ஒரு பைசா சொத்தும் வைத்துக்கொள்ளாமல் பாரமார்த் திகக் கல்வியைப் பரப்புவதைத் தொழிலாகக் கொண்ட பிராமணன்; (2) குருடன் அல்லது அங்கவீனன். ஜகந்நாதத்தில் செய்யப்படுவது போல் உடல் வலிமையுள்ள சோம்பேறிகளுக் குத் தர்மங்கொடுப்பது நாக்குப் போவமானத் தருவதாகும்.

*　*　*

ஸ்ரீமான் சக்லத்வாலா (சென்னைக் கடற் கரைக் கூட்டத்தில்):— ரயில்வேத் தொழி லாளர் மாதம் 9,10,11 ரூபாவில் வாழ்க்கை நடத்த முடியா தென்றால் புத்திசாலிகளும், நாகரிக முற்றவர்களுமான மேனாட்டார் "அவ் வாறு செய்ய உங்களுக்குக் கற்றுக் கொடுப் போம்" என்று கூறிப்போர்வீரர்களையும், சுழற் றுப்பாக்கிகளையும் அனுப்புகின்றனர். ஆனால் அதே ரயில்வேயின் ஏஜண்ட் துரை குடியி லும், சுருட்டிலும் பிரதிதினமும் ஒன்பது ரூபா செலவு செய்கிறார்! நாய்வளர்க்கும் ரயில்வே உத்தியோகஸ்தர் ஒருவர் மாதம் ஒன்பது ரூபா அந்த நாய்க்காகச் செலவு செய் கிறார்! ("வெட்கம்")

*　*　*

மேற்படியார்:— உண்மையான மனிதன் உண்மை எந்த ஓரத்தில் இருக்கிற தென்று நம்புகிறானோ அங்கே சென்று நிற்பான். அது தவறாயிருப்பினும் கவலையில்லை. இவனையே அமிதவாதி யென்கிறார்கள். தந்திரசாலியான மிதவாதியோ எப்போதும் நடுவில் நிற்பான். உலகம் "இதுதான் சரியான ஓரம்" என்னும் போது, "ஆகையினால் தான் நான் அதைப் பார்த்துக்கொண்டே நிற்கிறேன்" என் பான். (சிரிப்பு) பின்னர் மற்றவர்கள் "அன்று; அது தான் சரியான ஓரம்" என்னும் போது "முற்றும் உண்மை. நான் எப்போதும் அப்பக்கமே தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்பான். (மீண்டும் சிரிப்பு) உண்மையானவர்களும் தங்கள் கட்சி யில் நம்பிக்கையுள்ளவர்களும் எப்போதும் அமிதவாதிகளாகவேயிருப்பார்கள்.

*　*　*

மேற்படியார்:— இரண்டு பிரிட்டிஷ் மேதா விகள், உதாரணமாக மிஸ்டர் லயனல் கர்டி ஸும் மிஸ்டர் மாரிஸனும் சேர்ந்து உட்கார்ந்து இந்தியாவுக்கு ஓர் அரசாங்க அமைப்பையெழுதி யிருக்கிறோமென்று என்னிடம் வந்து சொன் னால், "ஐயன்மீர்! அதைவெந்நீரில் கொதிக்க வைத்துக் குடித்து விடுங்கள்" என்று கூறு வேன். (சிரிப்பு) எந்த தேசமும் அன்னிய அறி ஞர்களிடம் அரசாங்க அமைப்பைக்கடன்வாங்க முடியாது.

*　*　*

[லக்னௌவில் பிப்ரவரி மீ 28௨ நடந்த உலக முஸ்லிம் மகாநாட்டு இந்தியக்கிளையில்]

அக்கிராசனர் டாக்டர் அன்சாரி:— இஸ் லாமிய உலகத்துக்கு இந்திய முஸ்லிம்கள் செய்யக்கூடிய சிறந்த தொண்டு தங்கள் நாட் டில் சுதந்திரம் பெறுவதேயாகு மென்று கெமால் பாட்சா அனுப்பிய செய்தியை நாம் மறக்கவே கூடாது. நமது தற்போதைய நிலை பிறநாடுகளை அடிமைப்படுத்துவதற்குக் காரணமாயிருந்து வருகிறது. இதனால் மற்ற முஸ்லிம் தேசத்தார் நம்மைப்பற்றிக் கேவல மாகக் கருதுகின்றனர்.

*　*　*

மேற்படியார்:— நாம் முஸ்லிம்களாயிருப்ப தால், நாம் இந்தியர்கள் என்பதை மறந்து விடக்கூடாது. முதலிலும், கடைசியிலும், எப் போதும் நாம் இந்தியர்களேயாவோம். ஆத லின் சமூக மனப்பான்மையை அறவே யொழிக்கவேண்டும்.

*　*　*

பண்டித மாளவியா (இந்திய சட்டசபை யில்):— காசி சர்வகலாசாலையில் தாழ்ந்த வகுப்பு மாணாக்கர் கட்கு உபகார சம்பளம் கொடுக்கிறோம்.

ஜனாப் கபீருடீன் அஹமத்:— அவர்களு டைய சமுதாயவாழ்வு முறை எப்படி?

மாளவியா:— எனது நண்பர் கபீருடீன் அஹமதுடன் பழகுவது போலவே அவர் களுடனும் நான்பழகுகிறேன்.

அஹமத்:— மாணாக்கர்கள் சேர்ந்து உட் கார்ந்து சாப்பிடுவதுண்டா?

மாளவியா:— என் நண்பருக்குச் சாப்பாட் டைத்தவிர வேறு நினைவேகிடையாது. (நகைப்பு.)

வரவேற்பு ஏற்பாடுகள்

ஸ்ரீமான் சக்கரவர்த்தி இராஜகோபா லாச்சாரியார் எழுதுவது:—

மகாத்மாகாந்தி சென்னைக்கு ஏப்ரல் மீ 6௨ வந்து சேர்வார். 11௨ வரை சென்னையில் தாமதிப்பார். 12௨ முதல் 19௨ வரையில் மைசூர் சமஸ்தானத் தில் சுற்றுப் பிரயாணம் செய்வார். 20௨யிலிருந்து தமிழ் நாட்டில் பிரயா ணம் தொடங்குவார். இடையில் கோ ளத்துக்கும் தென் கன்னடத்துக்கும் சென்று அங்குப் பருவமழை தொடங் குவதற்கு முன் பிரயாணத்தை முடித்து விட்டு மீண்டும் தமிழ் நாட்டுக்கு வந்து பிரயாணம் செய்வார். தமிழ் நாட்டில் மகாத்மா எந்தெந்த விடத்துக்குச் செல்வார் என்ற விவரம் சர்க்கா சங்கக் காரியதரிசியினால் விரைவில் தெரிவிக் கப்படும். ஆங்காங்கு நடந்திருக்கும் வேலையைக் குறித்து அறிக்கைகள் வந் ததும் அவர் இவ்விஷயமாக முடிவு செய் வார்.

தொண்டர்கள்

வரவேற்பு ஏற்பாடுகளைத் திறம்படச் செய்வதற்கு இப்போதே ஆங்காங்குத் தொண்டர்களைச் சேர்த்துவிட வேண் டும். எல்லாம் குழப்பமில்லாமலும் ஒழுங்காகவும் நடைபெற வேண்டுமா னால் ஒவ்வொரு ஏற்பாட்டையும் பற்றி முன்னடியே யோசித்து முடிவு செய் திருக்கவேண்டும். இவ்விஷயத்தில் எவ் வளவு முன் ஜாக்கிரதை எடுத்துக்கொ ண்டாலும் மிகையாகாதென்று பிறமாகா ணங்களின் அநுபத்திலிருந்து நன்கு தெரிய வருகிறது.

நிதி வசூல்

இம்முறை சுற்றுப் பிரயாணத்தில் அடிகளின் முக்கிய நோக்கம் கதர் வேலைக்கு நிதி சேர்ப்பதேயாகும். ஆத லின் நிதி வசூலில் மிகுந்த சிரத்தை எடுத்துக்கொள்ளுதல் அத்தியாவசியம். பெரிய தொகைகள் வசூலிக்கப்பட்ட தும், வீடு வீடாகச் சென்று சிறு தொ கைகள் வசூலிக்கவேண்டும். மகாத்மா வருவதற்கு முன்பே எல்லாத் தொகை களையும் வசூலித்து அவர் வரும்போது கொடுக்கப் பெரிய பணமுடிப்பைச்சித்த மாக வைத்திருக்கவேண்டும். வசூலான தொகை ஒவ்வொரு பைசாவும் கதர் வேலைக்காகவே உபயோகிக்கப்படும்.

மகாத்மாவின் அலுவல்கள்

மகாத்மாவின் வரவேற்பு நிர்வாகிகள், காலை 9 மணி முதல் 10 மணி வரைக் கும், பிற்பகல் 2 மணி முதல் 4-30 வரைக்கும், மாலை 5-30 முதல் 7-30 வரைக்கும் மட்டுமே அவர் வருமிடங் களில் அலுவல்களைக் கவனிக்க முடியும் என்பதை நினைவில் வைக்கவேண்டும். எனவே இந்த நேரத்திற்குள் தான் எல்லா அலுவல்களையும் நிர்ணயித்துத் திட்டம் போடவேண்டும். சில விடங் களில் இவ்வளவு நேரம் முழுமையுங் கூட அகப்படாமற் போகலாம். அதே நாளில் வேறோரிடத்திலோ, பிரயாணத்திலோ மேற்படி நேரங்களில் கொஞ்சம் பகுதி போய்விடலாம். ஆயினும் மேலேகுறிப்பிட்ட நேரங்களி லன்றி மற்ற நேரத்தில் எவ்வகை அலுவலும் அவருக்குவைக்கக் கூடாது. கடிதம் எழுதுவதற்கும் பத்திரிகைக்கு எழுதுவதற்கும் அவருக்கு நேரம் வேண்டும். உணவருந்தவும், ஓய்வு எடுத்துக் கொள்ளவும், தேகாப்பியாசம் செய்யவும் நேரம் வேண்டும். இடை விடாப் பிரயாணமும், வேலையும் செய்ய வேண்டியவராயிருக்கும் அவர் தேக சுகத்தைப் பாதுகாக்க வேண்டு மென் பதை மறந்து விடக்கூடாது. ஆகவே மேலே குறிப்பிட்ட நேரங்களில் மட்டு மே பொதுக்கூட்டங்கள், பேட்டிகொடுத் தல், சம்பாஷணை முதலிய எல்லாவற் றிற்கும் ஏற்பாடுசெய்யவேண்டும்.

ஊர் வலம் கூடாது

மகாத்மா வருங்காலத்தில் கூட்டங் கூடி வரவேற்பதோ, ஊர்வலம் நடத்து வதோ கூடவே கூடாது. வரவேற்பு நிர் வாகிகள் தாங்கள் இத்தகைய ஏற்பாடு செய்யாதிருப்பதுடன் பிறர் செய்வ தற்கும் இடங்கொடுக்கலாகாது. பொதுக் கூட்டங்களில் மட்டும் ஜனங்கள் கூட வேண்டும்.

பெண்மணிகள்

சாவகாசம் கிடைக்குமிடங்களிலெல் லாம் தனி ஸ்திரீகள் கூட்டத்துக்கு ஏற் பாடு செய்யலாம். மற்றப்படி, பொதுக் கூட்டங்களில் பெண்மணிகள் சௌ கரியமாக உட்காருவதற்கும், கஷ்ட மின்றி வந்து போவதற்கும் வசதிகள் செய்யவேண்டும்.

பொதுக்கூட்டங்கள்

அடிகள் அமரும் மேடை உயரமாக அமைக்கப்பட வேண்டும். கூட்டத்தி லுள்ள எல்லாரும் கீழே உட்கார்ந்து விடவேண்டும். ஒருவரும் நிற்கக்கூடாது. மகாத்மா நின்று கொண்டு பேச முடி யாததலால், சௌகரியமாக உட்கார்ந்து பேசுவதற்கேற்ற விசாலமான மேசை ஒன்று போட்டிருக்கவேண்டும். பொதுக் கூட்டத்திலுள்ள எல்லா ஜனங்களும் மகாத்மாவைப் பார்த் தலும், அவர் மொழிகளைக் கேட் டலும் கூடிய வரை சாத்தியமாகுமாறு மேடை மத்திய ஸ்தலத்தில் அமைக்கப் படவேண்டும். மகாத்மா மேடைக்குச் செல்வதும் கூட்டம் முடிந்ததும் விரை வில் வெளியேறுதலும் சாத்தியமாகும் படி, மேடைக்குப் போகும்வழி பாது காக்கப்படவேண்டும். முன்யோசனை யற்ற அன்பர்கள் கும்பல் கூடிவழியை அடைத்து விடும்படி இருக்கக்கூடாது.

மகாத்மாவின் உபந்நியாசத்தை வாக் கியம் வாக்கியமாகத் தமிழில் மொழி பெயர்த்துச் சொல்ல நன்றாய் மொழி பெயர்க்கத் தெரிந்தவர் ஒருவர் தயாரா யிருக்கவேண்டும். கூட்டங்கள் சிறு தோத்திரப் பாட்டுகளுடன் தொடங்க வேண்டும். மகாத்மாவைப் புகழும் பாட்டுகள் வேண்டாம். தெய்வ ஸ்தோத் திர மாயிருப்பதே நல்லது. கூட் டங்களில் தரப்படும் மிகச்சிறு நன் கொடைகளையும், கூட்ட நடைமுறைக்கு எவ்வகை இடையூறுமின்றி வசூலிப் பதற்குத் திறமையான ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

உபசாரப் பத்திரங்கள்

வரவேற்பு உபசாரப்பத்திரங்கள் எல் லா வற்றையும் முன்னதாகவே மகாத் மா படிப்பதற்குக் கொடுத்துவிடலாம். அடிகள் கூட்டத்தில் செலவு செய்யக் கூடிய நேரம் முழுவதையும், அவரு டைய மொழிகளைக் கேட்பதற்கே பயன்படுத்த வேண்டும். அதலின் உப சாரப்பத்திரங்களை முன்னதாகவே பத் திரிகைகளில் பிரசுரிப் பதற்கும் அனுப்பிவிடலாம். கூட்டங்களில் பத் திரங்களைப் படித்தல் அநாவசியம். அந்தந்த ஸ்தாபனத்தின் சார்பாகக் குறிப்பிட்டவர்கள் பத்திரத்தை அடிக ளிடம் சமர்ப்பித்துவிட்டாலே போதும். பொதுக் கூட்டத்தில் பத்திரத்தைப் படித்தல் இன்றியமையாதது என்று கருதப்படும் போதன்றி மற்றப்படி பத் திரம் படிக்கப்பட்டதாகப் பாவிக்கப் படலாம்.

பொதுக் கூட்டங்களில் துண்டுப் பிர சுரங்கள், உபசாரப் பத்திரங்களின் நகல்கள் முதலியவை விநியோகிக்கப் படக்கூடாது. இதனால் கூட்டங்களில் குழப்பம் விளைந்து மறுபடியும் அமைதி ஏற்படுவதில் அதிக காலம் வீணாகி விடுவது வழக்கமாயிருக்கிறது.

ஜாகைவசதிகள்

ஈரோட்டிலுள்ள சர்க்கா சங்கக் காரிய தரிசிக்கு, ஆங்காங்கு இது வரை நடந் திருக்கும் ஏற்பாடுகளைப்பற்றிவரவேற்பு நிர்வாகிகள் உடனே எழுதுவதுடன் அவ்வப்போது ஏற்பாடுகளின் அபி விருத்தியைப்பற்றி எழுதித் தெரிவித்து வரவேண்டும்.

ஒவ்வோரிடத்திலும் ஏற்பாடு செய் வோர், மகாத்மாவும் அவருடன் வரு வோருந் தங்குவதற்கு எங்கே ஜாகை தயார் செய்யப்பட்டிருக்கிற தென்றும், ஜாகை ஏற்பாட்டை யார் மேற்பார்க்கிறா ரென்றும் உடனே சர்க்கா சங்கக்காரிய தரிசிக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். ஏனெனில், இவ்வேற்பாட்டை மேற்பார்க்க ஒப்புக் கொண்டிருப்பவர்களுடன் சிற்சில சில் லரை விவரங்களைப்பற்றிக் காரியதரிசி கடிதப் போக்குவரவு செய்தல் அவசிய மாயிருக்கும்.

வேண்டுகோள்

தமிழ்நாட்டாருக்கு ஒரு விஷயத்தை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மகாத்மாகாந்தி இது காறும் பிரயாணம் செய்துள்ள மாகா ணங்களிலெல்லாம் அந்தஸ்து, சாதி, வகுப்பு, தொழில், சமய வேற்றுமை களை அறவே மறந்து எல்லா ஜனங் களும் மகாத்மாவை வரவேற்பதி லும் அவருடைய இயக்கத்துக்கு உதவி புரிவதிலும் முன் வந்து ஒத்துழைத்திருக்கிறார்கள். கதர் இயக் கம் கட்சியையும், அரசியலையுமே கடந்து நிற்கும் இயக்கமென்று சொல்லவேண்டு வதில்லை. அம்மாகாணங்களைப் பின்பற் றித் தமிழ்நாட்டாரும், தமிழ் நாட்டைத் தங்கள் தந்தாய வாசஸ்தலமாகக்கொண் டுள்ளவர்களும் அடிகளின் சுற்றுப் பிர யாண ஏற்பாடுகளில் ஒத்துழைக்க முன் வருவார்களென்றும், இச்சுற்றுப் பிர யாணத்தினால் அவருடைய உடம்புக்கு ஓய்வும், ஆன்மாவுக்குத் திருப்தி யும், அவர் இயக்கத்துக்கு உதவியும் கிடைக்குமாறு செய்வார்களென்றும் மனப்பூர்வமாக நம்புகிறேன்.

சமரசப் பத்து

அன்பகம் - முன்னீர்ப்பள்ளம்

ஸ்ரீமான் மு. போ. ஈசுரமூர்த்தியா பிள்ளை பாடியது

நெஞ்சில் நின்று நிலவும் நிமலனே
அஞ்சல் என்னும் அபயம் அளித்தருள்
வஞ்சன் என்று வரைந்து விடுவையேல்
பஞ்சை பாவம் பரிகரிப் பாரெவர். (௧)

எவரும் நம்மவ ரேஎன் றிணங்கலும்
தவம் பிறர்துயர் தாங்குத லென்றலும்
அவன் உளத்துள் அமர்த லுணர்தலும்
இவன் உளத்தி யல்பாக்குக ஈசனே. (௨)

ஈசனே என்தன் காலிட ரெய்தினல்
நேசமோ டென்கை தாழ்ந்திடர் நீக்கல்போல்
ஆசையா லய லாரடை துன்பத்தை
தாசன் தீர்க்கும் தகுதியுண் டாக்குவாய் (௩)

ஆக்க மாவ தறிவுறும் ஊக்கமே
போக்கற் பால பொருமை பொய் புன்மையே
நோக்கற் பாலநன் னூல்மறை நுண்பொருள்
வாக்கிற் காவது வாழ்த்துதல் வள்ளலே! (௪)

வள்ள லாதல் உயிரும் வழங்குதல்
விள்ள லென்றும் விழுஉப் பொருள் யாவர்க்கும்
உள்ள லென்றும் உயிர்களுக் கூழியம்
தள்ள லென்றும் தகுதியில் செய்கையே. (௫)

செய்கை சொல்கை என்சிந்தை இம்மூன்றுமே
மெய்யதா யொன்றி மேவும் படிக்கருள்
அய்யனே! எனதாருயிர் அண்ணலே!
பொய்யனேன் இனிப்பொற் புற வாழ்வனே. (௬)


வாழ்க மெய்யறம் வையகம் எங்குமே
தாழ்க என்றும் தகுதியில் லாதன
சூழ்க சுற்றம் துணைவலி யாவுமே
ஆழ்க அன்பில் எனதகம் அன்பனே! (௭)

அன்புன தரு வாமென் றறிந்துளேன்
அன்ப! உன்னை அடைய விரும்பினேன்
அன்பதே அடியேன் உளமாகிற் பேர்
இன்ப வீடென் இருப்பிடம்; வாய்மையே. (௮)

வாய்மை உன்வடி வென்ப துணர்ந்துளேன்
தாயுமான நீ தஞ்சமெனக் கொண்டேன்
வாய்மை விட்டு விலகலெற் கொண்ணுமோ?
சேய்மை யின்றி என்சிந்தைகொள் சீலனே! (௯)

சீலனே! சிற்குணம் நிறை செல்வனே!
ஞால மீதுநாம் நல்லவ ராகவும்
கால னூர்க்குங் கலங் காதிருக்கவும்
சால வேநிடம் தந்தருள் நெஞ்சிலே. (௧௦)

நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம் நரகத்தி லிடர்ப்படோம் நடலையில்லோம், ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம் இன்பமே யெந்நாளுந் துன்பமில்லை, தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான சங்கரனற் சங்கவெண் குழையோர் காதிற், கோமாற்கே நாமென்றும் மீளாவாளாய்க் கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகினோமே.—(அப்பர்.)



சென்னை 1927ஞு மார்ச்சுமீ 9உ

இந்திய வரவு செலவு

சென்ற திங்கட்கிழமை இந்திய சட்டசபையில் வரவு செலவுத் திட்டம் விளத்தப்பட்டது. இவ்வாறு ஒவ்வோராண்டும் வரவு செலவுத் திட்டங் விளத்தப்படுவது வழக்கம். அது குறித்து அரசினர் சார்பிலும், பொதுமக்கள் சார்பிலும் சொற்போர் நிகழ்வதும் வழக்கம். வெற்றியோ அரசினர்பால் உறுதல் இயல்பு. அவ்வமைப்பு ஆட்சி முறையில் நிலவியிருக்கிறது.

வழக்கம்போல 1927-28-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டம் சட்டசபை முன் விளத்தப்பட்டது. அத்திட்டப் பொறுப்பு உறுப்பினராய ஸர் பேஸில் பிளாக்கெட், அத்திட்டங் குறித்து நீண்டதொரு சொற்பொழிவு நிகழ்த்தினர். ஸர் பேஸில் பிளாக்கெட் வரவு செலவுத் திட்டஞ் செப்பஞ் செய்வதிலும், அது குறித்துத் திறம்பட விரிவுரை முழக்குவதிலும் பேராற்றல் வாய்ந்தவர் என்பதில் ஐயமில்லை. அன்னர் திறனும் கூர்த்த மதியும் நாட்டினர்க்குப் பயன்படுவதில்லை என்பது வெள்ளிடை மலை. அவர் என் செய்வார் பாவம்! ஆட்சி முறை நிலை அவ்வாறு கிடக்கிறது! அதற்குத் துணை புரியுங்கடனை அவரேற்றிருத்தல் தவறு.

ஸர் பேஸில் பிளாக்கெட் ஒவ்வோராண்டும் வரவுக்குமேல் செலவு நிகழாதவாறு காத்து வருகிறாரென்றும், எதிர்நோக்கிக் கோலப்படும் செலவினுஞ் சுருக்கி இலாபங் காட்டுகிறாரென்றும் சில விடங்களில் சிறப்பாகப் பேசப்படுகின்றன. சென்ற ஆண்டில் எதிர்பார்த்த மிகுதிஒருகோடி சில்லரை. நடைமுறையில் இரண்டு கோடி சில்லரை மிகுந்திருத்தல் கருதற்பாற்று. வரும் ஆண்டிலும் அத்தகை மிகுதி மேம்பாடு எதிர் பார்க்கலாம். அம்மிகுதியால் நாட்டுக்கென்ன பயன்?

1927-28 ம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் வரவு 128 கோடியே 96 லட்சம்; செலவு 125 கோடியே 26 லட்சம். எஞ்சி நிற்கும் மிகுதி 3 கோடியே 70 லட்சம். வழக்கப்படி செலவில் சிறிது குறையலாம்.

இம்முறை இத்திட்டத்தில்ஒருபெருஞ் சூழ்ச்சி விரவியிருத்தல் கவனிக்கத்தக்கது. நாணயமாற்று விகிதத்தைப்பற்றிய வாதம் சட்டசபையில் நிகழ்ந்து வருகிறது. மாற்று 18 பென்ஸாக இருக்க வேண்டுமென்பது அரசாங்கத்தார்கொள்கை. 16பென்ஸாக இருக்கவேண்டுமென்பது ஜனப்பிரதிநிதிகளில் பெரும்பான்மையோர் கொள்கை. ஜனப்பிரதிநிதிகளில் சிலரும், அரசாங்கச் சார்பினரும் ஒன்றுபட்டு அரசாங்கத்துக்கு ஆக்கமளிக்கலாம். எவர் துணைபுரியினும் இராஜப் பிரதிநிதிக்குத் தனியுரிமையிருக்கிறது. அவ்வுரிமை கொண்டு அவர் அரசாங்கச் சார்புவழிநிற்றல் இயல்பாயிருந்து வருகிறது.

ஸர் பேஸில் பிளாக்கெட் 18 பென்ஸ் விகிதம் வரவு செலவுத் திட்டங்கோலி 3 கோடி 70 லட்சம் மிகுதி காட்டுகிறார். 16 பென்ஸாகத் திட்டங் கணிக்கப்படின் 1 கோடி 56 லட்சம் துண்டு விழுமென்று அவர் புள்ளியிட்டுக் காட்டுகிறார். எத்துணை முறையில் திட்டங் கோலப்பட்டிருக்கிறது! அரசினர் கொண்ட 18 பென்ஸை நிலை பெறுத்து முறையில் திட்டங் கோலப்பட்டிருக்கிறது. ஜனப்பிரதிநிதிகள் குறிப்பிட்ட 16 பென்ஸ்வழித் திட்டங் கணிக்கப்படின் நட்டம் உறுகிறது. எந்நிலையில் ஜனப் பிரதிநிதிகள் நிறுத்தப்பட்டார்கள்! அந்தோ! இதுகண்டு சில விட்டில்கள் அதிகாரவர்க்கத்தீயில் விழுந்து விட்டன. 18 பென்ஸுக்கு வழிதேடும் முறையில் திட்டங்கோலிப் பிரதிநிதிகளை மருட்டுங் கூர்த்தமதியினர் ஸர் பேஸில் பிளாக்கெட் என்று அவரைப் புகழலாமன்றோ?

செலவினத்தின்மீது பெரிதுங் கருத்துச் செலுத்த வேண்டுவதில்லை. செலவினத்தில் இராணுவச் செலவெனும் பெரும் பூதமொன்று நின்றுகொண்டிருக்கிறது. அஃது ஏறக்குறைய வருவாயில் ஒரு பகுதி விழுங்கி விடுகிறது. மொத்தவருவாய் 128 கோடியே 96 லட்சம். இவ்வருவாயில் இராணுவச் செலவிற்கென 54 கோடியே 92 லட்சம் தொலைதல் உன்னற்பாலது.

இஞ்சுகேப் கூட்டத்தார் இராணுவச் செலவை 50 கோடி யாக்கவேண்டுமென்று குறிப்பிட்டது இன்னும் நடைமுறையில் வரவில்லை. 50 கோடி செலவே அதிகம் அதிகம் என்னுங் கூக்குரல் நாட்டில் உண்டு. இன்னும் 54 கோடி 55 கோடி பாட்டுகள் பாடப்படுகின்றன. சென்ற ஆண்டில் நிகழ்ந்த இராணுவச் செலவு 55 கோடியே 55 லட்சம். இச்செலவு எதிர் பார்த்ததைவிட 67 லட்சம் அதிகம் விழுங்கி விட்டதென்று ஸர் பேஸில் பாடம் படிக்கிறார். இவ்வாண்டும் இராணுவச் செலவு எதிர் நோக்கினும் மேம்பட்டு நிற்கலாம்.

இராணுவச் செலவைப்பற்றி ஜனப் பிரதிநிதிகள் மூச்சு விடக்கூடாது. அதைப்பற்றிய உரிமை சட்டசபைக்கு எட்டுணையுமில்லை. இராணுவச் செலவினத்தைப் பற்றிய செலவுத் திட்டத்தையும், பிறவற்றையும் அரசாங்கச் சார்பினர் சொல்வதை ஜனப்பிரதிநிதிகள் செவிமடுத்துக் கொண்டிருத்தல் வேண்டுமேயன்றி வேறொன்றும் நிகழ்த்தக்கூடாது. ஆட்சிமுறைச்சட்டம் அவ்வாறிருக்கிறது!

ஆண்டுதோறும் ஏறக்குறைய 55 கோடி விழுங்கும் இராணுவம் நாட்டிற்கு வேண்டற்பாலதா என்பது சிந்திக்கற் பாற்று. நாட்டில் ஆங்காங்கே கிளம்பும் சிறு குழப்பங்களை அடக்கி அமைதிகாக்கப் போலீஸ் இனமிருக்கிறது. இத்துணை இராணுவம்எற்றுக்கு? இராணுவம் சிறிதிருக்கலாம். இராணுவத்துக்குச் செலவாகும் பொருள் கல்விக்கும் சுகாதாரத்துக்கும், குடிகேட்டுக்கும் பயன்படின் நாட்டில் சிறுகுழப்பமும் நிகழல் அரிதாகிவிடும். அத்தொகையுள் ஒரு சிறு பகுதி மதுவிலக்குப் பிரசாரத்துக்குப் பயன் படுவதாயின், நாட்டில் அமைதி நிலவும். இதைப்பற்றிக் கனவுலகில் வேண்டுமேல் கருதலாம். நினைவுலகில் கருதற்கே இடனில்லை.

18 பென்ஸ் விகிதங் கணக்கிட்டு 3 கோடியே 70 லட்சம் மிகுதி காட்டும் ஸர் பேஸில் பிளாக்கெட், வரியினங்களில் ஏதாயினுங் குறைத்தலாகாதா என்று எவருங் கருதக்கூடும். ஸர் பேஸில், வரியினங்களில் சில குறைந்ததாக உலகங் கருதுமாறு சில மாறுதல் குறிப்பிட்டிருக்கிறார்.

மாட்டுத்தோல் ஏற்றுமதி வரி விலக்கப் பட்டிருக்கிறது. ஆட்டுத் தோல் ஏற்றுமதி விலக்குவதில் விளையும் நலன் மாட்டுத்தோல் வரி விலக்கவிராது. மாட்டுத்தோல் வாணிபம் அருகி வருகிறதென்று ஸர் பேஸில் கூறுகிறார். அத்தகைய ஒன்றன் வரி விலக்கலால் பெரு நலன் எங்ஙனம் விளையும்?

தேயிலை ஏற்றுமதி வரியும் விலக்கப் பட்டிருக்கிறது. இதற்குப் பதிலாகத் தேயிலைத் தோட்டக்காரர் வருமான வரி உயர்த்தப் பட்டிருக்கிறது. இதுகாறும் அவர்கள் வருவாயில் கால்பாகத்துக்கு வரி செலுத்தி வந்தார்கள். இனி அவர்கள் அரைப் பாகத்துக்கு வரி செலுத்தல் வேண்டும்.

மோட்டார் வண்டி இறக்கு மதி வரியும், உருளை (டையர்) இறக்குமதி வரியும் முறையே 100க்கு 30 வீதத்திலிருந்து 20 வீதத்துக்கும், 30 வீதத்திலிருந்து 15க்குங் குறைக்கப்படுமென்று ஸர் பேஸில் தெரிவிக்கிறார். மாகாண அரசாங்கத்தார் பாதை முதலியவற்றை ஒழுங்குபடுத்தமோட்டார்சொந்தக்காரருக்கு வரி விதிக்கலாமென்னுங் குறிப்பொன்று ஸர் பேஸிலால் பொறிக்கப்பட்டிருக்கிறது.

இனி, செக்குகளுக்கு ஸ்டாம்பு வேண்டாமாம். அதை ஈடு செய்யச் சுருட்டுப் புகையிலை இறக்குமதிவரி உயர்த்தப்பட்டிருக்கிறது. இப்பொழுதுள்ளதினும் அரை ரூபாய் அதிகம் ஏற்படுமாம்.

இவ்வரியினங்களின் மாற்றத்தால் ஏழைமக்கட்கு என்ன பயன் விளையும்? ஏழை மக்கட்குப் பயன் தாவல்ல தபால் கட்டணத்திலாதல் உப்புவரியிலாதல் எவ்வித மாற்றமும் நிகழவில்லை. தபால் கட்டணக் குறைவும் உப்புவரிக் குறைவும் ஏழைகட்கு நலஞ் செய்வன. அவைகளில் ஒரு மாற்றமுஞ் செய்யப்படவில்லை.

இத்தகை வரவு செலவு திட்டத்தைப் போற்றிப்பேசச்சிலரும் தூற்றிப்பேசச் சிலரும் சட்டசபை நண்ணியிருக்கிறார். பேச்சளவில் தூற்றிப்பேசிப் பின்னை வாளாகிடப்பதால் தேசத்துக்கு என்ன நலன்?

சட்ட சபையால் பயனில்லை என்று வாயால் முழங்கிக் கொண்டு ஏழை மக்கள் வரிப் பணத்தை முதல் வகுப்புப் பிரயாணத்துக்கும், படிச் செலவிற்கும் ஏன் பெற்றுக்கொண்டிருத்தல் வேண்டும்? ஆண்டு அழுது கொண்டிருப்பதைவிட நாட்டிற் போந்து பல நற்றொண்டுகள் செய்யலாம்.

ஊருணியிலுள்ள புனலை வழக்கம் போல ஸர் பேஸில் பிளாக்கட் கால்வாய்களைப் புதுக்கிப் பாய்ச்சுகிறார். புதுக்கும்போது சில கால்வாய்களில் பெருக்கஞ் சுருக்கம் ஏற்பட்டு விடுகின்றன. மொத்தத்தில் தண்ணீர் செலவில் எவ்வித மாறுதலுமில்லை.

பழி சுமந்த பணம்

மதுவிலக்கைப்பற்றிய பேச்சு எழும் போதெல்லாம், அரசினரும், மந்திரிமாரும், மற்றும் மதுவிலக்குக்கு மாறுபட்ட அரசியல் வாதிகளும் கிளப்பும் தடை ஒன்றுண்டு. அது யாதெனில், மதுவிலக்கு ஏற்பட்டு விட்டால் அரசாங்க நிர்வாகச் செலவுக்குப் போதிய பணம் இல்லாமற் போகுமென்பதே. சென்னை அரசாங்கத்தின் இவ்வாண்டு வரவு செலவுத் திட்டம் மேற்போந்த தடையை அடித்து வீழ்த்துவ தொன்றாயிருக்கிறது. உண்மையில் அத்திட்டத்தில் பொதுமக்களால் பெரிதும் சிந்திக்கப் படவேண்டிய கூறு இதுவே யாகும்.

சென்னை அரசாங்கத்துக்கு இவ்வாண்டு எதிர்நோக்கும் வருவாய் 16 கோடியே 55 லட்சம்; செலவு 17 கோடியே 24 லட்சம். எனவே, அதிக செலவு 69லட்சமாகும். ஆனால் இத்திட்டம், இந்திய வரவு செலவுத்திட்டம் வெளியாவதற்கு முன் செப்பஞ் செய்யப்பட்டதொன்று. இந்திய அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டிய கப்பம் 1 கோடி 65 லட்சம் ரூபா தள்ளிக்கொடுக்கப்பட்டுள்ள படியால், சென்னை அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டம் உண்மையில் மிகுதித்திட்டமாகிறது. அதாவது ஏறக்குறைய ஒரு கோடி ரூபா செலவு போக மிகுதி ஏற்படும்.

இவ்வொரு கோடி ரூபாவை எவ்வழியில் பயன்படுத்துவதென்னும் வினா எழுகிறது. சட்ட சபை அங்கத்தவர் பற்பல யோசனைகளைக் கூறியுள்ளார். சிலர் கிராமபாதைகளைச் சீர்திருத்தவேண்டுமென்கிறார். சிலர் புதிய வைத்திய சாலைகளை ஏற்படுத்தவேண்டு மென்கிறார். இன்னும் சிலர் ஆரம்பக்கல்வியைப்பற்றிப் பேசுகிறார். வேறு சிலர் ஸ்டாம்பு வரி கோர்ட்டு வரி முதலியவற்றைக் குறைக்கவேண்டுமென்கிறார். மற்றவர் என்னென்னவோ சொல்கிறார். முடிவில், எல்லாரும் சேர்ந்து ஒரு முகமாக இம்மாகாணத்தின் குடிகாரர் களுக்கு நன்றி செலுத்தும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றிவிடுவார் போலும்! மதுவிலக்கு வரவு செலவு ஆட்சேபத்தைக் கிளப்பிவந்தவர்கள் நேர்மையாளர்களாயின், இதுகாலை இவ்வொரு கோடி ரூபாவையும் மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டுவருவதற்கே பயன் படுத்த வேண்டுமென வலியுறுத்துவார்கள்.

இவ்வாண்டு வருவாய் இனங்களில் மிகப் பெரியது நிலவரி. இவ்வினத்தில் வரவு 7 கோடி 55 லட்சம். கலால்வரி அதற்கடுத்தபடியாக வருகிறது. கலால் வருவாய் 4கோடி 99 லட்சம். சென்ற ஆண்டுவரவு செலவில் ஒருவிநோதம் கவனிக்கற்பாலது. சென்ற ஆண்டில் கலாலைத்தவிரமற்ற வருவாய் இனங்களில்எதிர்பார்த்த திட்டத்தைவிட வருவாய் குறைந்துள்ளது. உதாரணமாகநிலவரியில் $6\frac{1}{2}$ லட்சமும், பத்திரப் பதிவு இலாகாவில் $\frac{1}{2}$ லட்சமும் அத்திட்டத்தைவிடக் குறைந்து போயின. ஆனால் கலால் இலாகாவில் மட்டும் உத்தேசதிட்டத்தைவிட $19\frac{1}{2}$லட்சம் அதிக வருவாய் வந்திருக்கிறது. சென்ற ஆண்டில் இந்நாட்டில் செழிப்புற்றிருந்தவர்கள் குடிகாரர்களே போலும்!

நேயர்களே! இப்பெரும் அநீதியை உற்று நோக்குங்கள். இந்நாட்டில் நிலவரிக் கடுத்தபடியான பெருந்தொகை, ஏறக்குறைய ஐந்து கோடி ரூபா, நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைக்கும் ஏழை மக்களிடமிருந்து ஆண்டுதோறும் பறிக்கப்படுகிறது. இவ்வாறு பறிக்கப்படும் பணம் அம்மக்களுக்குப் பயன்படுகிறதா வெனில் அதுவுமில்லை. மக்களிடம் திரட்டப்படும் வரிப்பணம் அவர்கள் நன்மைக்கே செலவழிக்கப்பட வேண்டுமென்பது அரசாங்க தர்மம். இந்நாட்டில் அத்தர்மம் முற்றும் நிலவவில்லையாயினும், நிலவரி, வருமானவரி முதலியவற்றில் ஒருபகுதியேனும் அந்தந்தவரி கொடுப்போரின் நன்மைக்குச்செலவாகிறது. செலவினங்களில் பெருந் தொகைகளை விழுங்கும் இனங்களெல்லாம் பெரிதும் படித்தவகுப்பார், அன்னிய நாட்டார், பெருஞ்செல்வர் முதலியோருக்கும், சிறிது மத்திய வகுப்பாருக்கும், கிராமத்து மிராசுதாரர்களுக்கும் பயன்படுவனவாயிருத்தல் காணலாம். ஆனால் கலால் வரி கொடுக்கும் ஏழை மக்களுக்குப் பயன் படக்கூடிய இனம் துருவித் துருவி ஆராய்ந்தும் நமக்குப் புலனாகவில்லை. அவர்களைக் குற்றம் செய்யாமல் தடுத்துக் காப்பாற்றும் போலீஸ் இலாகாவின் செலவு அவர்களுடைய நன்மைக்கானதென்று ஒருகால் சொல்லலாம்!!

எனவே கலால் இலாகா தரும் இவ்வருவாயை "ஏழைகளின் பழி சுமந்த பணம்" என்று நாம் சொல்கிறோம். நமது படித்த வகுப்பாருக்கும் செல்வர்களுக்கும், அவர்களுடைய பிரதிநிதிகளாகச் சட்டசபையில் வீற்றிருப்போருக்கும் ஜீவகாருண்ய மிருந்தால், நியாய புத்தியிருந்தால், அவர்கள் "இப்பழி சுமந்த பணத்தினால் பெறப்படும் கல்வி, உத்தியோகம், சுகாதாரம்முதலிய எந்த நலமும் எங்களுக்கு வேண்டாம்" என்று மறுத்தே தீர்வார்கள்.

"கலால் வருவாய் போய் விட்டால் செலவுக்குப் பணமெங்கே?" என்னும் வாதம் உண்மையில் பொருளற்ற வாதமாகும்; போலி ஆட்சேபமாகும். எவ்வாறென்று விளக்குவோம். தொடக்கத்தில் சென்னை அரசாங்கத்தார் இந்திய அரசாங்கத்துக்கு ஏறக்குறைய மூன்றரை கோடி ரூபா கப்பஞ் செலுத்த வேண்டியிருந்தது. இவ்வாண்டுடன் அக்கப்பம் ஒழிந்ததென்று கொள்ளலாம். இந்த $3\frac{1}{2}$ கோடியையும் மதுவிலக்குத் திட்டத்துக்கு ஒதுக்கினால் துண்டு விழுவது $1\frac{1}{2}$ கோடியே யாகும். இதை வெகு எளிதில் ஈடு செய்து விடலாம். ஆண்டுதோறும் கட்டிடங்களுக்குத் தொலைக்கும் பெருந் தொகை மீந்தால் இதுகை கூடும். சென்னை மத்திய வைத்தியசாலையைப் புதுப்பிப்பதற்கு 50 லட்சம் ரூபா செலவு செய்யப்போகிறார்களாம்! வைத்திய சாலை வேண்டுவதே. ஆனால் ஏழைகளின் குடியைக் கெடுத்துப் பெரிய கட்டிடங்கள் எற்றுக்கு என்றே நாம் வினவுகிறோம்.

ஐந்து கோடிக்கும் அறவே ஈடு செய்ய முடியாவிடினும், இவ்வாண்டில் கலால் வரியில் ஒரு கோடி ரூபா குறைக்கலாமென்பதில் சிறிதும் ஐயமில்லை. இம்மாகாணத்தில் ஐந்திலொருபகுதியிடத்தில் அதாவது ஐந்து ஜில்லாக்களில் உடனே பூரண மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டு வரலாம். ஆனால் சட்ட சபை அங்கத்தவர்களும், புதிய மந்திரிமார்களும் தங்கள் கடனை ஆற்றுவார்களெனத் தோன்றவில்லை. சட்ட சபை வரவு செலவுத் திட்டத்தின் மீதுநடந்த விவாதத்தின் போது அங்கத்தவரில் சிலர் மதுவிலக்கைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார்களாயினும் அதை முதன்மையாக வற்புறுத்தக்காணோம். கலால் மந்திரி ஆரோக்கியசாமி முதலியார் பரிசோதனைகள் நடத்த உத்தேசித்திருப்பதாகச் சொல்கிறார்! டாக்டர் சுப்பராயன் மதுவிலக்கே தங்கள் கட்சியின் நோக்கமென்று கூறிவிட்டு அதே மூச்சில் "கலால் வருவாய் போனால் ஈடு செய்வதெப்படி? ஆதலின் படிப்படியாகப் போகவேண்டும்" என்று பேசுகிறார். வரவு செலவு அங்கத்தவர் மிஸ்டர் மாயரும் இந்தப் பழம் பாட்டையே பாடுகிறார். மிகுதித் தொகை ஒரு கோடி ரூபா முழுவதையும் மதுவிலக்குக்கு ஏன் பயன்படுத்தக்கூடாதென்று ஒருவரேனும் யோசித்ததாகத் தெரியவில்லை. போலிச் சாக்குகளினாலும், கண் துடைக்கும் பரிசோதனைகளினாலும் பொதுமக்கள் இனியும் ஏமாறுவார்கள் என இவர்கள் நினைக்கிறார்கள் போலும்! பொதுமக்கள் என்ன செய்யப்போகிறார்கள்?

இடியேறு

"சீவயாதனு வியாசம்" - ஒரு திருத்தம்

"சீவயாதனு வியாசம்" என்னும் நூலைப்பற்றிச் சென்ற வாரம் மதிப்புரை எழுதப்பட்டது நேயர்கள் நினைவிலிருக்கலாம். அதன்கண் நூல் விற்கும் இடத்தைப்பற்றி ஒரு பிழை நிகழ்ந்துவிட்டது. "39, நம்புலய்யர் வீதி, ஜார்ஜ் டவுன், சென்னை" என்னும் விலாசம் குறிக்கப்பட்டிருந்தது. அவ்விலாசத்துக்குப் பதிலாக "முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை" என்னும் விலாசத்தைக் கொள்ளுமாறு குறிப்பிடுகிறோம்.

மந்திரிக்கட்சியின் திட்டம்

பிப்ரவரிமீ 28உ நடந்த சென்னைச் சட்டசபை சுயேச்சைக் கட்சியாரின் கூட்டத்தில் இராஜமகேந்திர புரத்தில் அபிவிருத்தி இலாகா மந்திரி வெளியிட்டவேலைத்திட்டம் சிற்சில மாறுதல்களுடன் அங்கீகரிக்கப் பட்டதாம். இவ்வேலைத் திட்டத்தைக் குறித்து நமது அபிப்பிராயத்தை முன்னமே தெரிவித்துள்ளோம். மாறுதல்களில் முக்கியமானது, "கல்விப்பயிற்சிக்குத்தாய் மொழியை மூலமாகக் கொள்ளுதலை ஆதரிப்ப"தாகும். இது நல்லயோசனையென்று சொல்ல வேண்டுவதில்லை. ஆனால் காகிதத்திட்டங்களை வரைந்து வெளியிடுவதால் மட்டும் பயன் விளைந்து விடாது. திட்டம் எவ்வளவு தூரம் காரியத்தில் நடத்திவைக்கப்படும் என்பது இனித் தெரிய வேண்டும்.

அந்தோ! வங்காளமே!

தேசபந்துவை ஈன்ற வங்காளத்தில் இதுகாலை காங்கிரஸின் நிலை அதிகார வர்க்கத்தார் எள்ளி நகையாடற்குரியதா யிருப்பது யாருக்குத்தான் வருத்தந்தராது? வங்காளக் காங்கிரஸ் கமிட்டியின் அக்கிராசன பதவிக்கு ஸ்ரீமதி வசந்தாதேவியும், காரியதரிசியாக ஸ்ரீமான் அனில்பரன் ராயும் முதன் முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டதும், இவ்விருவரும் அப்பதவிகளை மறுத்து விட்டதும் நேயர்களுக்குத் தெரியும். பின்னர் நடந்த ஒரு கூட்டத்தில் ஸ்ரீமான் ஜிதேந்திரலால் பானர்ஜி அக்கிராசனராகவும், ஸ்ரீமான் ஸாஸ்மால் காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஸ்ரீமான்கள் சென்குப்தா, கோஸ்வாமி கூட்டத்தாருக்கு இவர்களைப் பிடிக்கவில்லை. எனவே மறுபடியும் மாகாணக் காங்கிரஸ் கூட்டம் நடந்தது. இக்கூட்டத்தில் மேற்படி நிர்வாக சபையைக்கலைப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது. புதிய நிர்வாக சபை தேர்ந்தெடுப்பதற்காகக் குறிப்பிட்டநாளில் ஸ்ரீமான் சாஸ்மால் கூட்டத்தை நடத்தவில்லை. அதை அவர் தள்ளிவைத்து விட்டு அன்று காங்கிரஸ் காரியாலயத்தைப் பூட்டி வைத்து விட்டாரென்று சொல்லப்படுகிறது. சென்குப்தா கூட்டத்தார் வேறிடத்தில் கூட்டம் போட்டு ஸ்ரீமான் அகில சந்திரதத்தரைத் தலைவராகவும், ஸ்ரீமான் ஜே. எம். தாஸ்குப்தாவைக் காரியதரிசியாகவும் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இது முறைப்படி ஏற்பட்ட நிர்வாக சபை ஆகாதென்று சாஸ்மால் கூட்டத்தார் சொல்கின்றனர். ஒருவர் மேல் ஒருவர் குறை கூறி அறிக்கைகள் பிறந்தவண்ணமிருக்கின்றன. அந்தோ! வங்காளமே! உன் அருமைப் புதல்வர்களில் ஒரு சாரார் சிறையில் தவங்கிடக்கையில் மற்றொரு சாரார் தங்களுக்குள் சண்டையிட்டுக்கொண்டு காலங் கழிக்கின்றனர். என்னே உன் நிலை?

காரணம்

சாஸ்மால் கூட்டத்தை எதிர்க்கு மளவில் சென்குப்தா கூட்டத்தார் ஒற்றுமைப்பட்டிருக்கிறார்களாயினும் அவர்களுக்குள்ளும் வேற்றுமை இல்லாமலில்லை. இவர்களுக்குள் சென்குப்தா கட்சி, கோஸ்வாமி கட்சி, கர்மி சங்கத்தாரின் கட்சி முதலிய பல கட்சிகள் இருக்கின்றன. இவர்களெல்லாரும் தேசபக்தர்கள், தியாகிகள், தேசபந்துதாஸரின் அருந்துணைவர்களாயிருந்து நாட்டுத் தொண்டு ஆற்றியவர்கள் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. பின்னர் இவர்களுக்குள் இவ்வளவு வேற்றுமைகள் எழக்காரணம் என்ன? பாழுஞ் சட்டசபை நுழைவே எல்லாவற்றிற்கும் காரணம் என்போம். ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்குப் பெயர் போன வங்காளத்தில் முஸ்லிம்கள் அடியோடு காங்கிரஸை விட்டுப் போனதற்கும் சட்டசபை நுழைவே காரணமாகும். தற்போது காங்கிரஸ் தொண்டர்களுக்குள் விளைந்துள்ள வேற்றுமைகட்கும் அதுவே காரணம் என்பதில் ஐயமில்லை. தேச சேவையில் தியாகம் செய்தலும், சிறை செல்லுதலுமே முதன்மையாக இடம் பெற்றிருந்தவரை எல்லாரும் ஒற்றுமையாகத் தொண்டாற்றினர்கள். பட்டம், பதவி என்ற பேச்சு நுழைந்ததும் வேற்றுமையும் உடன் நுழையத் தொடங்கிவிட்டது. தற்போது மாகாணக்காங்கிரஸைக் கைப்பற்றுவது குறித்து எழுந்துள்ள போராட்டத்திற்குச் சிறப்பான காரணம் சமீபத்தில் நிகழவிருக்கும் கல்கத்தா நகர சபைத்தேர்தலே என்பது கவனிக்கற்பாற்று. சாஸ்மால் கூட்டத்தார் தங்களுக்கு வேண்டியவர்களையும், சென்குப்தா கூட்டத்தார் தங்கள் மனிதர்களையும் அபேட்சகர்களாக நிறுத்த விரும்புகிறார்கள். எனவே போராட்டம் எழுகின்றது. சட்டசபை, நகர சபைத் தேர்தல்கள் நாட்டைப் பல்லாற்றானும் பாழ் செய்து வருவதை இங்கே கண் கூடாகக் காண்கின்றோ மன்றோ?

எத்தனை நாள்?

இதைப்பற்றி எழுதுங்கால், இன்னொரு வினா எழுகின்றது. பயனற்ற சட்டசபைத்திட்டத்தைக் கட்டிக் கொண்டு இன்னும் எத்தனை காலம் காங்கிரஸ் மகாசபை அழுது கொண்டிருப்பது? மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை இயக்கம் ஒன்றரை ஆண்டு காலமே நடத்தி வைக்கப்பட்டது. ஆனால் இதற்குள்ளாகச் சுயராஜ்யம் வந்து விடவில்லையென்றும், ஆதலின் திட்டத்தை மாற்றிவிட வேண்டுமென்றும் 1922-ல் கூக் குரல் கிளப்பப்பட்டது. 1923-ம் ஆண்டில் தில்லியில் நடந்த விசேஷ காங்கிரஸிலிருந்து சட்டசபைத்திட்டம் நடத்திவைக்கத் தொடங்கப்பட்டது என்று வைத்துக் கொண்டாலும் இப்போது ஏறக்குறைய மூன்றரை ஆண்டுகள் ஆகிவிட்டன. ஒத்துழையாமை இயக்கத்தினால் விளைந்த பயனில் நூற்றிலொன்றும் சட்டசபை வேலையினால் விளைந்ததாகத் தெரியவில்லை. காங்கிரஸ் தலைவர் ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் அவர்களே சட்டசபை வேலை விஷயத்தில் பெரிதும் ஏமாற்றமடைந்து விட்டதாய்க் கூறியதாகத்தெரிகிறது. சட்டசபை வேலையினால் பயன் எதுவும் விளையாததோடன்றித் தீமைகளும்விளைந்து வருகின்றன. வங்காளத்தின் நிலைமையைப்பற்றி மேலே குறிப்பிட்டோம். இந்திய சட்டசபையிலும் காங்கிரஸ் கட்சிக்குள் வேற்றுமை வளர்ந்து வருவதாகத் தெரிகிறது. கட்சியின் தீர்மானத்துக்கு விரோதமாக மூன்று அங்கத்தவர் லேடி பிளாக்கெட் நடத்திய விருந்துக்குச் சென்றார்களாம். மற்றும் சிலர் மாறு பெயர்களுடன் கட்சியின் நடைமுறைகளைத்தாக்கிப் பத்திரிகைகளுக்கு எழுதுகிறார்களாம். இவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கட்சித் தலைவர் பண்டித் நேரு கூறுகிறாராம்! இவை எல்லாம் தேசபக்தர்கள் சட்டசபைகளுக்குத் தலை முழுகிவிடவேண்டுமென்னும் ஓர் உண்மையையே உணர்த்துகின்றன. ஆயினும் நமது தலைவர்கள் கண்ணிருந்துங் குருடர்களா யிருக்கின்றனர். என் செய்வது?

வேட்டையும் தண்டனையும்

சென்னைச் சட்டசபையில் ஸ்ரீமான் ஜி. ஹரி சர்வோத்தமராவ் கேட்ட ஒரு வினாவினால் வெளியான விவரம் இந்தியாவின் நிலையை நன்குணர்த்துவதாயிருக்கிறது. காட்டிலாகா அஸிஸ்டெண்ட கன்சர்வேடர் உத்தியோகம் பார்த்துவரும் மிஸ்டர் சார்லஸ் மொஹோனி என்பார் போலம்பட்டி பள்ளத்தாக்கிலுள்ள ஒதுக்கப்பட்ட காடுகளில் வேட்டையாடிக் கொண்டிருக்கையில் இருளில் தவறி, ஒரு மனிதனைச் சுட்டுவிட்டாராம். இக்குற்றத்திற்காக இவ்வுத்தியோகஸ்தரை நீதிமன்றத்துக்குக் கொண்டு வராமல் அரசாங்கத்தார் தாங்களே கடுந்ததண்டனை விதித்து விட்டார்கள்! இரண்டு வருஷகாலம் அவ்வுத்தியோகஸ்தர் மேற்படி காட்டில் வேட்டையாடக் கூடாதென்பதுவே அக்கடுந் தண்டனையாகும்! இத்தண்டனை போதாதென்று, வானுலகஞ் சென்றவனின் உறவினர்க்கு நஷ்டஈடும் கொடுக்கப்பட்டதாம். அவனுடைய உயிர் எத்தனை ரூபாவுக்கு மதிக்கப்பட்டது என்னும் விவரம் தெரியவில்லை. மிஸ்டர் மொஹோனி இன்னும் உத்தியோகத்திலிருக்கிறார்; இரண்டு வருஷத்துக்குப் பின்னர் 'ஒதுக்கப்பட்ட' காடுகளில் மீண்டும் வேட்டையாடுவார்! இஃதெல்லாம் நியாயமேயென்று ஓர் இந்தியர் சட்டசபையில் விடையிறுக்கிறார்! இந்த அவமானத்தைக் குறித்து அழுவதா, சிரிப்பதா என்பது உண்மையிலேயே நமக்குத் தெரியவில்லை.

ஊர் வம்பு

"தமிழ்த்தேனீ" திரட்டியது

சென்ற வாரத்தில் "தமிழ்த் தேனீ" காந்தி கதர்நிதிக்குப் பணந்திரட்டப் போயிருந்தது. அணில் ஸ்ரீராமபிரானுக்குப் பாலங் கட்டிக் கொடுக்கவில்லையா?—எனவே, அதிக வம்பு திரட்டுவதற்குச் சாவகாசமில்லாமற் போயிற்று.

* * *

இருந்தாலும், நேயர்களுக்கு ஏமாற்றந் தர விருப்பமில்லை. காந்திநிதி திரட்டும் அநுபவத்திலேயே வம்புக்குப் போதிய சரக்குகள் கிடைத்தன. அவற்றுள் சிலவற்றை இன்று விளம்பரஞ் செய்கிறோம்.

* * *

நேயர்கள் சிரிக்கவேண்டும், கொஞ்சம் புன்னகையேனும் புரிய வேண்டுமென்னும் நோக்கத்துடனே தான் நாம் எழுதுகிறோம். ஆனால் ஒருவேளை, நேயர்கள் சிறிது கண்ணீர் விடும்படி நேர்ந்தால், அது நமது குற்றமாகாது.

* * *

மற்றோர் எச்சரிக்கை. ஒருவாரம் நிதி வசூல் செய்ததில் "தமிழ்த் தேனீ"க்கு உலகத்தினிடமே வெறுப்புத் தோன்றிவிட்டது.

* * *

சட்டை, தலைப்பாகை, மூக்குக் கண்ணாடி அணிந்த கனவான் ஒருவர். குறைந்தது மாதம் ரூ 150 சம்பளமாவது இருக்கும். அவரிடம் போய் ரசீது புத்தகத்தை நீட்டினோம்.

* * *

"இந்த நிதிக்குக் கொடுத்தல் ரொம்ப அவசியமென்று எனக்குத் தெரியும், ஸார்! காந்தி ஒரு பைசா கூட தமக்கு எடுத்துக் கொள்ளப் போவதில்லை. ஆனால் என்ன செய்வது? ரொம்பக் கஷ்டமான நிலைமை. மாதம் பிறந்ததும் 50 ரூபா கவர்ன்மெண்டுக்குக் கொட்டிக் கொடுக்கவேண்டியிருக்கிறது. கடன் வாங்கி வீடுகட்டி விட்டேன்!" என்று தமது துயரங்களை அடுக்கிக்கொண்டே போனார் அக்கனவான்.

* * *

அரசாங்கத்தினிடம், கூட்டுறவு முறையில், குறைந்த வட்டிக்குக் கடன் வாங்கி முதல்தரமான பங்களா கட்டிக்கொண்ட இக்கனவான் மாதம் 50 ரூபா கொடுக்க வேண்டியிருக்கிறது என்று கஷ்டப்படுகிறார்! சூரிய சந்திரர் வாசம் செய்யும் ஏழைக் குடிசைகளில் வசிப்போரின் கதியைப்பற்றி அவர் சிந்திக்கவில்லை.

* * *

அரைமணி நேரம் முறையிட்ட பின்னர் இக்கனவான் அரை ரூபா தருகிறேனென்றார். இன்னும் அரைமணி நேரம் பேசிய பின்னர் ஒரு ரூபாவுக்குச் சம்மதிக்கச் செய்தோம். இந்த ஒரு ரூபாவுக்கும் கையொப்பம் வைத்து விட்டுப் பணத்துக்கு ஒரு வாரங் கழித்துவரச் சொன்னார். "சந்தோஷம்" என்று விடை பெற்றுக் கொண்டோம்.

* * *

சில அடிதூரம் போனதும் அவர் நம்மைத் திரும்ப அழைத்தார். ஆவலுடன் திரும்பினோம். அவர் சொல்கிறார்:—"இந்த [illegible] எல்லாம் உத்தியோகஸ்தர்கள் [illegible] ஒரு வீட்டையாவது பாக்கி [illegible] எல்லாரும் கொடுப்பார்கள்." [illegible] பின் கதை நமக்கு [illegible]

* * *

அடுத்தாற் போல் இன்னொரு வீட்டுக்குச் சென்றோம். அவர் கூறுகிறார்:—"[illegible] மாதம் ஐந்து ரூபா இந்தமாதிரி காரியங்களுக்கென்று நான் எடுத்துவைத்து [illegible] கம். அத்தொகை செலவழிந்து விட்டது [illegible] கால் ரூபா மீத மிருக்கிறது. வேண்டுமானால் தருகிறேன்."

* * *

"உங்களுக்குத் தெரியாதது ஒன்று மில்லை. ஆனால் இது மற்ற தர்மங்கள் [illegible] இல்லை—" என்று கூறத்தொடங்குவதற்குள் அவர் "அந்தக்கதை யெல்லாம் எனக்குத் தெரியும், ஸார்!" என்று கூறி நமது அதிக பிரசங்கத்தை முடித்து விட்டார்.

* * *

"அப்படியானால் ரசீது கொடுப்பதற்கில்லை. உண்டிப்பெட்டியில்தான் போடவேண்டும்" என்றோம். "அதனாலென்ன, ஸார்? [illegible] குப் பெயர், புகழ் ஒன்றும்வேண்டாம். [illegible] ஒருகையால் செய்தது இன்னொரு கைக்குத் தெரியக்கூடாதென்று பெரியோர் சொல்லியிருக்கிறார்கள்" என்று வேதாந்தம் பேசத் தொடங்கிவிட்டார் அப்புண்ணியவான்.

* * *

இன்னொருவரிடம் சென்றோம். "[illegible] போது சௌகரியமில்லை" என்றார் அப்பெரியவர். "அப்படியானால் எப்போது வரட்டும்? தேதி குறிப்பிட்டால் வருகிறேன்." "வேண்டாம், வேண்டாம்! அவ்வளவு சிரமம் வேண்டாம். நானே சேர்ப்பித்து விடுகிறேன்."

* * *

இன்னொருவர் முதலில் ஏதோ கூறினார். கடைசியில் "அவ்வளவு ஏன்? இந்த இயக்கத்தில் எனக்கு அநுதாபமில்லை" என்றார். "இதை முன்னாலேயே சொல்லியிருக்கக் கூடாதா" என்று எண்ணிக்கொண்டு திரும்பினோம்.

* * *

மற்றொரு கனவான் வக்கீலைப்போல் [illegible] மைக் குறுக்கு விசாரணை செய்தார். "நீர் யார்?" "எதற்காக நீர் வருகின்றீர்?" "யார் அதிகாரம் கொடுத்தார்?" "பணத்தை என்ன செய்வீர்?" "பத்திரிகையில் பெயர் வருமா?" இக்கேள்விகளுக்கெல்லாம் விடையிறுத்தோம்.

* * *

ஏதோ இடையில் விட்டிருந்த காரியத்தைத் திடீரென்று நினைத்துக் கொண்டவர்போல் அவர் அதிவேகமாகக் கம்பி நீட்டினார்! நமது விடைகள் திருப்தியளித்தனவா என்று கூட அவர் தெரிவிக்கவில்லை!

* * *

இதுகாறும் படித்த வகுப்பாரிடம் நமது அநுபவத்தைப்பற்றியே சில உதாரணங்கள் தந்தோம். இவர்களில் சிலர் "அப்புறம் [illegible]" என்று அனுப்பினார்கள். சிலர் "சேர்த்து [illegible] கிறோம்" என்றனர். ஒருவர் இருவர் தைரியமாக "இல்லை" என்றனர். பலர் ஓரணா முதல் ஒரு ரூபா வரை தந்தனர். நமது [illegible] பர்கள் சிலரைத் தவிர ஒரு ரூபாவுக்கு [illegible] எவருந் தரவில்லை.

* * *

படியாதவகுப்பாரிடம் நமது அநுபவத்துக்கு ஓர் உதாரணம் சொல்லி இன்று நிறுத்திக் கொள்கிறோம். ஒரு கடைக்காரிடம் நண்பர்களுடன் சென்றோம். அவர் ஆங்கில மறியாதவர். ஆனால் காந்தி பக்தர். நாங்கள் போய் நின்றதும் அவர் கண்ணை மூடிக் கொண்டார். சில நிமிஷநேரம் யோசித்தார். படித்தவகுப்பு அநுபவமே மிகுந்த நாம் "இல்லை" என்னப் போகிறாரோ, அரையணா உண்டியில் போடப் போகிறாரோவென எண்ணினோம். ஐந்து ரூபா நோட்டை எடுத்து நீட்டியதும் திகைத்து விட்டே போய் விட்டோம்.

* * *

இதற்குப் பின்னர் இன்னும் சில வியாபாரிகளும் ஐந்து, மூன்று, இரண்டு ரூபாய் கொடுத்தார்கள். நேயர்களுக்கு ஏதேனும் படிப்பினை கற்பிப்பதற்காக இந்த அநுபவங்களை நாம் எழுதவில்லை. ஆனால், அவர்கள் ஏதேனும் படிப்பினை ஏற்றுக்கொண்டாலும் நாம் குறுக்கே நிற்கப்போவதில்லை.

அகில இந்தியத் தொழிலாளர் காங்கிரஸ் மார்ச்சு 12, 13-ந் தேதிகளில் டில்லியில் நடைபெறும். ராவ்சாகிப் சந்திரிகாபிரசாத் தலைமை வகிப்பார்.

o o o

எட்டு மணிநேரத்தில் மூன்று ராத்தல் வரை நூற்கக்கூடிய ராட்டு ஒன்றைக்கண்டு பிடித்திருப்பதாக பெங்களூர் வாசி ஒருவர் சொல்கிறார்.

o o o

சென்ற சிவராத்திரியன்று மதுரை மீனாட்சி கோயிலிலுள்ள எல்லா விக்கிரகங்களுக்கும் வெண்மையான தூய கதராடை அணியப் பட்டதாம்.

o o o

மகாத்மாகாந்தி திருநெல்வேலிக்கு வரும் போது அவருக்கு ஓர் உபசாரப் பத்திரம் படித்துக்கொடுக்கத் திருநெல்வேலி நகரசபை தீர்மானித்திருக்கிறது.

o o o

சென்ற வாரத்தில் இராஜப் பிரதிநிதி இர்வின் பிரபு டில்லி நகர வீதிகளிலும் சந்துகளிலும் ஆடம்பரமின்றி நடந்து சென்று ஜனங்களிடம் க்ஷேம லாபங்களை விசாரித்தாராம்.

o o o

முன்பு சென்னை ஹைகோர்ட்டு ஜட்ஜாக விருந்த சர் பிரான்ஸிஸ் ஓல்டு பீல்டு இது போது மான்செஸ்டர் விக்டோரியா சர்வகலா சாலையில், இந்து முகமதியச்சட்ட ஆசிரியராக நியமனம் பெற்றுள்ளாராம்.

o o o

சிவராத்திரியன்று திரிச்சி முனிசிபல் பப்ளிக் ஹாலில் நேஷனல் காலேஜ் மாணவர்கள் காந்தி கதர் நிதிக்குப் பணம் சேகரிக்க "நந்தனார்" என்ற நாடகம் நடத்தினார்கள். ஆயிரம் ரூபா வசூலானதாகத் தெரிகிறது.

o o o

சென்ற மாதம் கும்பகோணத்தில் நடைபெற்ற மிருகக்காட்சிக்கு இரண்டு எருமைக் கடாக்களை கொண்டு வரப்பட்டனவாம். மற்றவர்கள் தங்கள் மிருகங்களைக் காட்சிக் கிட்டுச் சென்றால் பார்வை தோஷமுண்டாகுமென அஞ்சினார்களாம்.

o o o

பெல்வா மாஜி நவாப் மீர் அப்துல் அலாம் கான் சிறிது காலத்துக்கு முன் 18,000 ரூபா பெறுமான நகைவிஷயத்தில் ஏமாற்றுஞ் செய்ததாக், பம்பாய் பிரதம மாஜிஸ்ட்ரேட்டால் 6 மாத கடுங்காவல் தண்டனையும் 1000 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டார்.

o o o

மதுரையில் சென்ற ஜனவரி மாதத்தில் தமிழ்நாடு வாலிபர் சங்கமொன்று காணப்பட்டது. இச்சங்கம் பிராமணரல்லாதார் முன்னேற்றம் நாடியும் கதர், தீண்டாமை விலக்கு முதலியன குறித்தும் பெருந்தொண்டு புரியும் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

o o o

சென்னையில் டாக்டர் அன்னிபெசண்டம்மையாரால் நடத்தப்பட்டுவரும் "நியூஇந்தியா" பத்திரிகை இம்மாதம் 15-ந் தேதி முதல் வாரப்பத்திரிகையாக மாற்றப்பட்டு விடுமென்றும் அது பம்பாயிலிருந்து பிரசுரிக்கப்படுமென்றும் தெரியவருகின்றன.

o o o

சிங்கப்பூரில் 1925-ம் வருடம் ஸ்தாபிக்கப்பட்ட சிங்கை அகம்படிய மகாசன சங்கம் கல்வி அபிவிருத்திக்காகவும், பத்திரிகை ஆராய்ச்சிக்காகவும், உயர்வு தாழ்வு பேதமகற்றுவதற்காகவும் அரிய தொண்டு புரிந்து வருவதாக ஓர் அன்பர் தெரிவிக்கிறார்.

o o o

பஞ்சாப் அரசாங்கத்தார் அட்டாக் ஜில்லாவில் வெள்ளத்தால் கஷ்டமுற்றவர்கள் வீடுகள் கட்டிக்கொள்ள இனாமாக 30,000 ரூபாவும், கடனாக 3,13,000 ரூபாவும், மலேரியாவை ஒழிக்கவும் வடிகால் கட்டவும் 2,00,000 ரூபாவும் கொடுத்திருக்கின்றனர்.

o o o

யுனைடெட்ஸ்டேட்ஸ்கடற்படைஇலாகாதார் இரு யுத்தக் கப்பல்களைத் தற்காலத்துக்கேற்றபடி திருத்தி யமைக்கவும், கட்டப்பட்டு வரும் மூன்று யுத்தக் கப்பல்களைக் கட்டி முடிக்கவும் 2,61,50,000 டாலர் அளிக்க ஜனப்பிரதிநிதி சபையில் ஒரு தீர்மானம் செய்து செனெட் சபைக்கனுப்பி யிருக்கின்றனர்.

o o o

இம்மாதம் முதல் நாளன்று பாரிஸில் ஒரு பெரிய மலைச்சரிவு ஏற்பட்டதால் ரோக் பிக்லியர் என்ற கிராமம் முழுதும் புதைந்து போயிற்றாம். இந்த கிராமத்திலிருந்து சில நகரங்களுக்குத் தண்ணீர் போவதுண்டாம். இது ம்போது அந்நகரங்கள் மிக்கதுன்புறுகின்றனவாம்.

o o o

சென்ற வியாழனன்று சென்னைக் கிருஷ்ணம் பேட்டையில் கோழிச்சண்டை யொன்று விடப்பட்டதாம். கோழிகள் காலில் கத்தி கட்டப்பட்டிருந்ததாம். கோழி துள்ளிக் குதித்துச் சண்டையிடுகையில் அங்கிருந்த நான்கு வயதுக் குழந்தை யொன்றை அறுத்துக்கொன்று விட்டதாம்.

o o o

சென்ற வெள்ளியன்று மாலை திரிச்சியில் அகோபிலம் ஜீயர் மடத்து யானை ஒன்று கோபமடைந்து, தெருக்களில் திரிந்து ஜனங்களுக்கு அச்சம் விளைத்ததுடன் ஒரு குதிரையைக் கொன்று விட்டது. இரண்டு மாட்டு வண்டிகளையும் ஒரு மோட்டார் வண்டியையும் சிறிது சேதப்படுத்தி விட்டதாம்.

கலம்பகம்

இரங்கூனைச் சேர்ந்த டேவாய் எனும் பெரும் வியாபார ஸ்தலத்தில் சென்ற 28-ந் தேதி யன்று ஒரு ஜவுளிக் கடையில் தீப்பிடித்து அதன் மூலம் 300 வீடுகள் வரை சாம்பலாயின. பல குடும்பங்கள் வீடின்றித் தவிக்கின்றன. கஷ்ட நிவாரண வேலை நடை பெறுகிறதாகத் தெரிகிறது.

o o o

மகாத்மாவின் வருகையின் போது பெங்களூர் நகரசபையார் அவர் உருவப்படம் திறக்கவும் அவருக்கு வரவேற்பளிக்கவும் தீர்மானித்திருக்கின்றனர். முனிசிபல் சிப்பந்திகளுக்குக் கதராடை தரவேண்டுமென்றும் ஏழைகளுக்கு ராட்டினம் கற்றுக் கொடுக்க வேண்டுமென்றும் மற்றொரு தீர்மானம் செய்யப்பட்டது.

o o o

பம்பாயில் சென்ற வாரத்தில் கங்காபாய் என்ற மாது தனது ஜாதியார் அல்லாத வேறு ஒருவர் கையால் செய்த உணவை உண்டது பற்றி பந்துக்கள் கண்டனத்துக்கஞ்சி சௌபட்டிக் கடலில் விழுந்து தற்கொலை செய்து கொள்ள முயன்றாள். கடலில் விழுந்த கங்காபாயை ஒரு போலீஸ்காரன் தூக்கி வந்து காப்பாற்றினான்.

o o o

குழித்தலையில் வக்கீல் வரத ஐயங்காரின் மனைவியைக் கொலைபுரிந்து மறைந்திருந்த மூன்று மலையாளத் தச்சர்கள் உடுமலைப் பேட்டையில், அவ்வூர் போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டரால் கைது செய்யப்பட்டார்களாம். கொலை யுண்டவ ரணிந்திருந்த 2,000 ரூபா நகைகள் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டனவாம்.

o o o

இந்திய அரசாங்கத்திற்கும் தென் ஆப்பிரிக்கா அரசாங்கத்திற்கும் சமீபத்தில் ஏற்பட்டிருக்கிற உடன்படிக்கையின்படி தென் ஆப்பிரிக்காவில் ஏற்படவேண்டிய இந்தியப் பிரதிநிதி பதவிக்குச் சென்னையில் தொழிற் கமிஷனரும், முன் தென்னாப்பிரிக்காவுக்குத் தூது சென்று வந்தவருமான ஸர். ஜார்ஜ் பாடிசன் நியமிக்கப்படலாமென்று சொல்லுகிறார்கள்.

o o o

பொன்னேரியைச் சேர்ந்த ஒரு தட்டான் பித்தளைக் காப்புகளைத் தங்கக் காப்புகளெனக் கூறி வண்ணாரப்பேட்டையிலுள்ள ஒரு மார்வாடி கடையில் சென்ற மாதம் அடகு வைத்தான். மார்வாடி சிலநாள் கழித்து சந்தேகமுற்றுப் போலீசார்க்கறிவிக்க அன்னார் அவனைக் கைது செய்து மாஜிஸ்ட்ரேட் முன் னிறுத்தி 6-மாத கடுங்காவல் தண்டனை பெறுவித்தனர்.

o o o

பேட்டை சைவமாணவர் தமிழ்ச்சங்கத்தின் 4,5,6,7,8-ம் ஆண்டுகளின் நிறைவு விழா 1927-ம் வருஷம் பிப்ரவரிமாதம் 20-ந் தேதியில் அம்பா சமுத்திரம் வழக்கறிஞர் ராவ் சாஹிப் V. P. காந்திமதிநாத பிள்ளையவர்களின் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அறிஞர் பலர் அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள் என ஒருவர் தெரிவிக்கிறார்.

o o o

திருவண்ணாமலைக் கோயிலுக்குள் தம்மை விடாதும் தேங்கா யுடைக்கவொட்டாதும் தடுத்ததாக அக்கோயில் தர்மகர்த்தர்கள் மீது "திராவிடன்" ஆசிரியர் ஸ்ரீமான் கண்ணப்பர் தொடுத்த வழக்கு திருவண்ணாமலை மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் சென்ற 28-ந் தேதி விசாரணைக் கெடுத்துக்கொள்ளப்பட்டது. தர்மகர்த்தர்களுக்காக ஸ்ரீமான் எஸ். சத்தியமூர்த்தி ஐயர் தோன்றி வாதித்தாராம்.

o o o

நாகபுரியைச் சேர்ந்த பாலா என்ற கிராம வாசியின் குமாரன் பாபுராவ் விறகு கொண்டு வரக் காட்டுக்கு வண்டி யோட்டிச்சென்றானாம். தகப்பன் வண்டியின் பின் நடந்து செல்ல, பாபுராவ் வண்டியை நிறுத்தாமலே ஓட்டிச் சென்றமை குறித்து அவன் தந்தை சினந்து கொண்டானாம். பாபு ராவ் ஆத்திரமுண்டு கோடரி கொண்டு தந்தையைக் கொன்று ஒரு கிணற்றில் எறிந்துவிட்டானாம். போலீசார் முன் எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டானாம். கோர்ட்டில் எதிரிஅம்மான் பிராசிக்யூஷன் சாட்சியாக விசாரிக்கப்படுகையில் எதிரியான பாபுராவ்மூர்ச்சித்துவிழுந்துவிட்டானாம்.

o o o

சென்னைத் திருமயிலை கொச்சிக் குப்பம் திரு அதிபத்த நாயனார் கழகத்தின் மூன்றாம் ஆண்டுவிழா சிவராத்திரி தினத்தன்று அக்குப்பம் திரு எல்லம்மன் கோயிலில் திவான் பகதூர் ஜி. நாராயணசாமி செட்டியார் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடந்தது. திருவாளர்கள் மணி திருநாவுக்கரசு முதலியாரவர்களும் அலர்மேலு மங்கைத்தாயாரம்மாளும் இ. என். தணிகாசல முதலியாரவர்களும் ஏ. இராமநுஜலு நாயுடு அவர்களும் முறையே "சைவசமயம்" "பெண் கல்வி" "அதிபத்தர்" "குடியின் கேடு" என்னும் பொருள்கள் பற்றிப் பேசினார்கள் என திரு. நடேசன் எழுதுகிறார்.

சுவாமி சிரத்தாநந்தர் கொலை வழக்கு மார்ச்சு 3-ந் தேதியிலிருந்து டில்லியில் விசாரிக்கப்பட்டுவருகிறது. டிபன்ஸ் தரப்பு சாட்சிகள் 4-ந் தேதிவரை 48 பேரும் 5-ந்தேதி 5 பேரும்விசாரிக்கப்பட்டனர். அவரவரும்சிறு சிறு மாறுதலோடு குற்றவாளியாக நிறுத்தப்பட்டுள்ள அப்துல் ரஷீத்துக்குப் பைத்தியமுண்டென்று கூறியிருக்கின்றனர். பிராசிகியூஷனுக்காக லாகூர் பைத்தியக்கார ஆஸ்பத்திரி பிரதம டாக்டர் விசாரிக்கப்பட்டார். அவர் 15 நாள் வரை எதிரியின் செயல்களை தினம் ஒரு மணி நேரம்வரை தாம்கவனித்து வந்ததாயும் எதிரி நல்ல புத்தி சுவாதீனத்துடனிருப்பதாகவே தாம் தீர யோசித்து அபிப்பிராயப்படுவதாயும் கூறினர்.

o o o

சென்ற 25-2-27௳ பிற்பகலில் சென்னை ஸ்பென்சர் கம்பெனியின் ஸோடா தொழிற்சாலையில் வழக்கம்போல் வேலை செய்து கொண்டிருக்கையில் இடது கை பெல்டுக்கும் இயந்திரத்திற்கும் இடையில் அகப்பட்டுக் கொண்டதனால் உரூர் வாசியான தம்பு சுவாமி இறந்துபோனார் என்று சென்னைத் தொழிலாளர் சங்கத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. இத்தொழிலாளிக்கு ஒரு பெண், மனைவி, தாயார் இவர்கள் இருக்கின்றார்கள். கம்பெனியார் 44 ரூபாதான் கொடுத்திருக்கின்றனர். 700-ரூபா அவருக்கு நியாயமாக நஷ்ட ஈடாகக் கொடுக்க வேண்டும். அதனைக் கம்பெனியார் விரைவில் கொடுத்து விடுவார்களென்று நம்புகின்றேன் என்று ஸ்ரீமான் வி. எஸ். இரத்தின சபாபதி எழுதுகிறார்.

o o o

மார்ச்சுமாதம் 8-ந் தேதி முதல் 20-ந் தேதி வரை நடைபெறும் திருமழிசை ஒத்தாண்டேசுரர் பிரம்மோற்சவத்தில் 13-ந் தேதி மாலை 4 மணிக்கு திருவாளர்கள் திருமழிசை தி. க பச்சையப்ப உடையார் அவர்களும் "சுதேசமித்திரன்" உதவி ஆசிரியர் தே. உலகநாத முதலியார் அவர்களும் முறையே "கடவுளும் சமயங்களும்" "காழி நாதரின் கருணைத் திறம்" எனும் பொருள்கள் பற்றிப் பேசுவார்கள். 19-ந்தேதி மாலை 3 மணிக்கு திருவாளர்கள் M. பால சுப்பிரமணிய முதலியார் B. A., B. L., அவர்களும் "நவசக்தி" ஆசிரியர் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்களும் முறையே "தமிழரும் அவர்கள் சமயமும்" "அப்பர் அடிமைத் திறம்" என்பன பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள் என அறிவிக்கப்படுகிறது.

o o o

பட்டுக்கோட்டை திருவள்ளுவர் ஆண்டு விழா நிகழும் அட்சயவாண்டு மாசித் திங்கள் 29, 30, (12, 13—3—27) சனி, ஞாயிறுகளில் மாலை $4\frac{1}{2}$ மணி முதல் திருவாளர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் தலைமையின் கீழ் இவ்வூர் உயர்தரக் கலாசாலையில் நடைபெறும். முதல் நாள் திருவாளர்கள் ம. உ. க. பஞ்சரத்தினம் பிள்ளையவர்களும் ம. ரா. குமாரசாமி பிள்ளையவர்களும் முறையே "வாழ்க்கையின் வெற்றியும் தோல்வியும்." "திருவள்ளுவர்." எனும் பொருள்கள் பற்றியும் 2-ம் நாள் திருவாளர்கள் வேங்கடேசுவரய்யரவர்களும சொ. முருகப்ப செட்டியாரவர்களும் ம. ரா குமாரசாமி பிள்ளையவர்களும் நிரலே "தமிழினுயர்வும் தற்கால நிலையும்" "தமிழர் நிலை" "சமயகுரவர்" என்பன குறித்தும் சொற்பொழிவுகள் நிகழ்த்துவார்கள் என அறிவிக்கப்படுகிறது.

o o o

கை இராட்டினத்தில் நூற்றுக் கைத்தறியில் செய்த ஆடை கதராடை என்று சொல்லப்படும். இவ்வாடை தான் இருநூறு ஆண்டுகளுக்கு முன் நம்நாட்டார் அநேகருடைய மானத்தைக் காப்பாற்றி வந்தது. சில ஆண்டுகட்குப் பிறகு சிலருடைய சூழ்ச்சியால், நம் நாட்டில் நூற்றலும் நெய்தலும் தடைப்பட்டன. நாளடைவில் பிற நாட்டாருக்குத் தேவையான ஆடைகளை அனுப்பிவந்த நாமே நமக்கு வேண்டிய ஆடைக்கு முயற்சியின்மையால் அன்னிய நாட்டை எதிர்பார்க்கலானோம். ஆதலால் சகோதரர்களே, மீண்டும் முயற்சியெடுத்து மகாத்மாகாந்தி தமிழ் நாட்டிற்கு வருவதற்குள் நாமெல்லோரும் கதராடையே கட்டவேண்டுமென்றும், பெண்மணிகள் கை இராட்டினத்தில் நூல் நூற்கவேண்டுமென்றும், காந்தியடிகட்குக் கதர் நிதிக்குப்பணம் உதவ வேண்டுமென்றும் கூட்டங்கள் கூடித் தீர்மானிப்பதுடன் செயலிலும் கொணரவேண்டுமென்றும் வேண்டுகிறேன் என திரு. மு. வள்ளியப்பன் எழுதுகிறார்.

o o o

சிதம்பரத்தில்சிறந்த வியாபாரியானஸ்ரீமான் ஏ. மு. சார்தலிங்க முதலியார் அவர்கள் 5-3-27 வைகறை உயிர் நீத்தார்கள். இச் செய்தி நகரெங்கும் பரவிப் பலர் மனதைப் புண்ணாக்கியது. அன்னார் செங்குந்த மரபிற்றோன்றியவர். இவ்வூரின் ஒரு பகுதியிலுள்ள செங்குந்தர்களது தலைவர்; நீண்டகாட்கள் நகரசபை அங்கத்தினராகவும் ஹிந்து சாசுவத ஜனோபகாரநிதி அத்தியட்சகராயும் அர்பன்பாங்கு அத்தியட்சகராயும் வரி செலுத்துவோர் சங்கத்தின் தாற்காலிகத் தலைவராயும் நகர காங்கிரஸ் கமிட்டி காரியதரிசியாயும் பஞ்சாயத்து சபை உறுப்பினராயுமிருந்தவர். இன்னோரன்ன பல்வேறு பீடத்திருந்து பொதுமக்கட்கு இயன்ற தொண்டு ஆற்றிக் காங்கிரஸிடத்து அன்பு பூண்டு கதரபிவிருத்தியில் ஊக்கம் காட்டி வந்த "நவசக்தி"யின் நண்பரான இவ்வன்பரை வெஞ்சுரம் கொள்ளை கொண்டது. அன்னவர் ஆன்மா சாந்தியுறுக. இத்தகைப் பெரியாரை இழந்து வாடும் அன்னார் அருமை மனைவியாருக்கும் சகோதரர்கட்கும் எமது மனமார்ந்தஅநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன் என நமது நிருபர் எழுதுகிறார்.

o o o

யாழ்ப்பாணம் ஸர் பொன்னம்பலம் இராமநாதர் தம் ஸ்ரீ பரமேசுவரக் கலாசாலையின்கண் மாணவரால் நிறுவப்பட்டுள்ள "சைவ சேவை சங்க"த்தின் ஆதரவில் சென்ற 19-2-27-ல் திருவள்ளுவர் திருநாள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெறுவதாயிற்று. இக்கலாசாலைத் தலைமை ஆசிரியர் திருவாளர் சு. நடேசபிள்ளை அவர்கள், பி. ஏ. பி. எல். தலைமையில் ஒரு சபை கூட்டப்பட்டது. உயர் திரு சுவாமி உருத்திரகோடீசுரர் அவர்கள், திருவள்ளுவர் திருநாள் முதன் முதல் 1917-ம் ஆண்டில் சென்னைத் திருமயிலையில் ஸர் இராமநாதர் தலைமையில் கொண்டாடப்பட்டதென்றும், பின்னர் 1922 முதல் திருமயிலைத் திருக்குறள் கழகத்தில் கொண்டாடப் பட்டு வருகின்றதென்றும் 1924ல் யாழ்ப்பாணத்தைச் சார்ந்த மல்லாகத்தில் கொண்டாடப்பட்டு வருகின்றதென்றும், கொழும்பைச் சார்ந்த வெள்ளவத்தையில் இரண்டு ஆண்டுகளாகக் கொண்டாடப்பட்டு வருகின்றதென்றும், இன்று இக்கலாசாலை மாணவராலும் இத்திருநாள் கொண்டாடப்படுகிறதென்றும், இஃது இலங்கையிலும்தென் இந்தியாவிலும் உள்ள தமிழ் மாணவர்களுக்கெல்லாம் ஒரு நன்மாதிரியாகுமென்றும் இத்தகைய கொண்டாட்டத்தினால் தமிழகம் சிறப்படையுமென்றும் கூறினார்கள். திருவாளர் பிறக்டர் க. தம்பய்யா அவர்களும், இக்கலாசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதராகிய திருவாளர் நவநீத கிருஷ்ண பாரதியார் அவர்களும் திருக்குறளைப் பற்றியும் அதற்குள்ள பரிமேலழகர் உரையைப் பற்றியும் விரிவாகச் சொற்பொழிவுகள் செய்தார்கள் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

மகாத்மாவுக்கு மைசூர் மகாராஜாவின் அழைப்பு

மைசூர் இராஜ்யத்தின் திவான் மகாத்மா காந்திக்கு அடியிற்கண்ட கடிதத்தை எழுதியிருப்பதாக ஸ்ரீமான் ச. இராஜகோபாலாச்சாரியார் அறிவிக்கிறார்:—

பங்களூர், 14-2-27.

அன்பார்ந்த மகாத்மாஜி,

அடுத்த ஏப்ரல் மாதத்தில், சமூக, பொருளாதாரச் சீர்திருத்த வேலையை முன்னிட்டுத் தாங்கள் மைசூர் இராஜ்யத்தில் சுற்றுப் பிரயாணம் செய்ய உத்தேசித்திருப்பதாக மகா ராஜாவுக்குத் தெரிய வந்திருக்கிறது. இச்சுற்றுப் பிரயாணத்தின்போது தாங்கள் சமஸ்தானத்தின் தலைநகருக்கு விஜயம்செய்து, அங்கிருக்கையில் மகாராஜாவின் விருந்ினராக இருக்கக்கூடுமானால் தமக்குப் பெரிதும் மகிழ்ச்சி உண்டாகுமென்று தங்களுக்குத் தெரிவிக்குமாறு மகாராஜா எனக்குப் பணித்துள்ளார். தங்கள் சுற்றுப் பிரயாணத் திட்டம் முடிவானதும் மைசூருக்குத் தாங்கள் வரக்கூடிய தேதியைத் தயவு செய்து தெரிவிப்பீர்களென்று நம்புகிறேன்.

தங்கள் உண்மையுள்ள

(ஒப்பம்) மிர்ஸா எம். இஸ்மேல்.
(மைசூர் திவான்.)

காந்தியடிகள்

உண்மையோடியைந்த வாழ்வு

பாகம் 3. அத்தியாயம் 13.

கல்கத்தா காங்கிரஸ்

கடைசியில் தாய்நாட்டுக்குப் பிரயாணமானேன். மொரீஷியஸ் (மோரிஸ்) இடையில் கப்பல் தங்க வேண்டிய துறைமுகங்களிலொன்று. கப்பல் அங்கு நீண்ட நேரம் தாமதித்தபடியால் நான் கரைக்குச்சென்று அங்குள்ள நிலைமையைக் கூடிய வரையில் தெரிந்துகொண்டேன். அத்தீவின் கவர்னர் ஸர் சார்லஸ் புரூஸின் விருந்தினனாகவும் ஓர் இரவு இருந்தேன்.

இந்தியா வந்து சேர்ந்ததும், நாடு சுற்றுவதில் சில காலங்கழித்தேன். அது 1901-ம் ஆண்டு. அவ்வருஷத்திய காங்கிரஸ் மகா சபை கல்கத்தாவில் ஸ்ரீமான் (இப்போது ஸர்) டின்ஷா வாச்சாவின் அக்கிராசனத்தின் கீழ் கூடியது. அதற்கு நான் போயிருந்தேன். நான் சென்றிருந்த முதலாவது காங்கிரஸ் இதுவேயாகும். பம்பாயிலிருந்து ஸர் பிரோஸிஷா மேதா பிரயாணம் செய்த அதேவண்டியில் நானும் பிரயாணம் செய்தேன். ஏனெனில், தென்னாப்பிரிக்கா இந்தியர் நிலையைக் குறித்து அவருடன் பேசவேண்டியிருந்தது. அவர் எத்தகைய இராஜ போக வாழ்க்கை நடத்தினார் என்பது எனக்குத் தெரிந்தேயிருந்தது. அவர் தமக்காக 'ஸ்பெஷல் ஸலூன்' ஒன்று அமர்த்தியிருந்தார். ரயில் அடுத்தடுத்து நிற்கும். குறிப்பிட்ட இரண்டு ரயில்வே நிலையங்களுக்கிடையே அவருடைய ஸலூனில் பிரயாணம் செய்து நான் சொல்லவேண்டியதைச் சொல்லுமாறு கட்டளை யிடப்பட்டது. அவ்வாறே குறிப்பிட்ட நிலையத்தில் ஸலூனுக்குச் சென்றேன். அவருடன் ஸ்ரீமான் டின்ஷா வாச்சாவும் ஸ்ரீமான் (இப்போது ஸர்) சிமன்லால் சேதால் வட்டும் இருந்தனர். அவர்கள் அரசியலைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்தார்கள். என்னைப்பார்த்ததும் ஸர் பிரோஸிஷா கூறியதாவது:— 'காந்தி, உமக்கு நாங்கள் ஒன்றும் செய்யமுடியாதென்று தோன்றுகிறது. நீர் வேண்டுகிறபடி தீர்மானத்தை நிறைவேற்றுவதில் ஆட்சேபமில்லை. ஆனால் நமது நாட்டிலேயே நமக்கு உரிமைகள் இல்லையே? நமது சொந்த நாட்டில் நமக்கு அதிகார மெதுவு மில்லாமலிருக்கும் போது குடியேற்ற நாடுகளில் நாம் இதைவிட நல்ல நிலைமையிலிருக்க முடியாதென்று தோன்றுகிறது.'

நான் திடுக்கிட்டுப் போய்விட்டேன். ஸர் சிமன்லாலும்இவ்வபிப்பிராயத்தை ஆதரிப்பதாகக் காணப்பட்டது. ஸர் டின்ஷாவோ என்னைப் பரிதாபத்துடன் பார்த்தார்.

ஸர் பிரோஸிஷாவிடம் வாதமிட முயன்றேன். ஆனால் பம்பாயின் முடிசூடா மன்னரை என்னைப் போன்ற ஒருவன் திருப்புவது நினைக்கவும் முடியாததொன்று எனச்சொல்ல வேண்டுவதில்லை. என்னுடைய தீர்மானத்தைக் கொண்டுவர அனுமதி பெறுவேனென்ற எண்ணத்துடன் நான் திருப்தியடைந்தேன்.

என்னை உற்சாகப்படுத்தவான் வேண்டி "தீர்மானத்தை முன்னதாகவே என்னிடம் காட்டுவீர்களல்லவா?" என்று ஸர் டின்ஷா வாச்சா கேட்டார். அவருக்கு வந்தனமளித்துவிட்டு ரயில் நின்ற அடுத்த நிலையத்தில் இறங்கிச் சென்றேன்.

லோகமான்யர்

கல்கத்தா போய்ச்சேர்ந்தோம். வரவேற்புக் கழகத்தார் மிகச்சிறப்புடன் அக்கிராசனரை அவரது ஜாகைக்கு அழைத்துச் சென்றார்கள். நான் எங்கே போகவேண்டுமென்று ஒரு தொண்டரைக் கேட்டேன். அவர் என்னை ரிப்பன் கலாசாலைக்கு அழைத்துச் சென்றார். அங்கே பிரதிநிதிகள் பலருக்கு ஜாகை ஏற்பாடு செய்திருந்தார்கள். அதிர்ஷ்டம் என் பக்கலிலிருந்தது. நான் இருந்த பகுதியிலேயே லோகமான்யரின் ஜாகையும் இருந்தது. ஒரு நாள் கழித்து அவர் வந்ததாக ஞாபகம்.

லோகமான்யர் இருக்கு மிடங்களிலெல்லாம் அவருடைய தர்பாருங் கூடவே இயல்பேயாகும். நான் ஓவியக் காரனாயிருந்தால், நண்பர்கள் பலர் சூழ அவர் படுக்கையில் வீற்றிருந்த காட்சியை அப்படியே படம் எழுதிவிடுவேன். அக்காட்சி அத்துணைத் தெளிவாக இன்னமும் என் கண்முன் நிற்கிறது. அவரைப்பார்க்கவந்த எவ்வளவோ பேரில் அமிருத பஜார் பத்திரிகையின் காலஞ் சென்ற ஆசிரியர் பாபு மோடி லால் கோஷைத்தான் எனக்கு இப்போது நினைவிருக்கிறது. அவர்களுடைய உரத்தசிரிப்பும், ஆளும் இனத்தாரின் தவறுகளைப்பற்றிய அவர்கள் சம்பாஷணையும் என்றும் மறக்கற்பாலனவல்ல.

காங்கிரஸ் விடுதி

இந்த, மேற்படி காங்கிரஸ் விடுதியின் நிலையைக் குறித்துச் சில விவரங்கள் தெரிவிக்கவிரும்புகிறேன். தொண்டர்கள் ஒருவரோ டொருவர் சச்சரவிட்டுக் கொண்டிருந்தார்கள். ஒருவரை ஏதேனும் செய்யச் சொன்னால் அவர் இன்னொருவரிடம் சொல்வார். அவர் மூன்றாமவரிடம் சொல்வார். எனவே, பிரதிநிதிகள் திக்குத் திசைபுரியாமல் தவித்தார்கள்.

சில தொண்டர்களிடம் நட்புரிமை கொண்டேன். தென்னாப்பிரிக்காவைப்பற்றிச் சில விவரங்களைக் கூறியபோது அவர்கள் வெட்கமடைந்தார்கள். தொண்டின் இரகசியத்தையும் அவர்களுக்கு அறிவுறுத்த முயன்றேன். அவர்கள் அதை அறிந்த தொண்டர்களெனக் காணப்பட்டது. ஆனால் தொண்டு செய்யும் பேறு அத்தனை எளிதில் பெறக் கூடியதன்று. முதலில் விருப்பமும், உறுதியும் வேண்டும். பின்னர் அநுபவம் வேண்டும். கபடமற்றவர்களும், நல்ல இருதயம்படைத்தவர்களுமான அவ்விளைஞர்களுக்கு விருப்பத்திற்குக் குறைவில்லை. ஆனால் அநுபவம் மட்டுமே இல்லை. காங்கிரஸ் வருஷத்தில் மூன்று நாள் கூடிவிட்டுப் பின்னர் தூங்கச் செல்வது அக் காலத்தில் வழக்கமாயிருந்தது. இந்த மூன்று நாள் திருவிழாவில் ஒருவர் என்ன பயிற்சி பெறக் கூடும்? பிரதிநிதிகளும் தொண்டர்களும் தேர்ச்சியில்லாதவர்களாகவே யிருந்தனர். அவர்களுக்கும் பயிற்சி கிடையாது. அவர்கள் தாங்களே எதையும் செய்ய முடியாதவர்களாயிருந்தனர். "தொண்டரே! அதைச்செய்யும்" "தொண்டரே! இங்கே வாரும்" என்று அவர்கள் ஓயாது கட்டளை பிறப்பித்த வண்ணமிருந்தனர்.

தமிழர்களின் தீண்டாமை

தீண்டாமையை இவ்விடுதியிலேயே நான் நேருக்கு நேர் காண நேரிட்டது. தமிழர்களின் சமையலறை மற்றச்சமையலறைகளிலிருந்து தனியே தூரத்தில் அமைக்கப்பட்டிருந்தது. தாங்கள் உணவருந்தும்போது பிறர் பார்த்தாலும் தீட்டாய்ப்போய்விடும் (திருஷ்டிதோஷம் வந்து விடும்) என்பது தமிழ்ப் பிரதிநிதிகளின் நம்பிக்கையாயிருந்தது. எனவே, அவர்களுக்கென்று, தட்டியினால் சுவரெடுத்துத் தனிச் சமையலறை ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. இதில் உள்ளே செல்வோர்கள் திக்குமுக்காடிப் போகும் வண்ணம் புகை நிறைந்திருந்தது. சமையல், சாப்பாடு, கை அலம்புதல் எல்லாம் அவ்வறையிலே தான். நிறப்பேயில்லாது இறுக்கி மூடப்பட்ட பெட்டியைப்போல் அவ்வறை இருந்தது. இது வர்ணாசிரம தர்மத்தைப்பிறழ உணர்ந்ததினாலேயே என்று எனக்குத் தோன்றிற்று. காங்கிரஸ் பிரதிநிதிகளுக்குள்ளாகவே இவ்வளவு தீண்டாமை பாராட்டப்பட்டால், அவர்கள் யாருக்குப் பிரதிநிதிகளாகவந்துள்ளார்களோ அந்தஜனங்களிடம் இக்கொள்கை எவ்வளவு தூரம் குடிகொண்டிருக்குமென்பதைக் கற்பனை செய்து பார்த்துக் கொள்ள வேண்டியதே யென்று கருதினேன். இவ்வாறெண்ணிப் பெருமூச்செறிந்தேன்.

சுகாதாரக்கேடு

காங்கிரஸ் விடுதியில் சுகாதாரக் கேட்டுக்கு அளவேயில்லாமலிருந்தது. எங்குப் பார்த்தாலும் தண்ணீர் குட்டை குட்டையாகத் தேங்கி நின்றது. கக்கூஸ்கள் மிகச்சில. அவற்றின் துர்நாற்றத்தை நினைத்தால் இப்போதும் எனக்கு மூச்சுத்திணறுகிறது. தொண்டர் ஒருவரிடம் இதைப்பற்றிக் கூறினேன். அவர்கள் "அது தோட்டிகளின் வேலை; எங்களுடைய வேலையன்று" என்று திட்டமாகக் கூறிவிட்டார்கள். விளக்குமாறு ஒன்று வேண்டுமென்று ஒரு தொண்டரைக் கேட்டேன். அவர் திடுக்கிட்டுப் போய் என்னைப் பார்த்து விழித்தார். கடைசியில் ஒரு விளக்குமாறு சம்பாதித்துக் கக்கூசைச் சுத்தம் செய்தேன். ஆனால் என்னுடைய உபயோகத்துக்கு மட்டுமே இது செய்து கொண்டேன். கக்கூஸ்கள் மிகச் சிலவாயும் அவற்றை உபயோகிப்போர் மிகப் பலராயும் இருந்தபடியால், ஒவ்வொருமுறை உபயோகித்தபின்னரும் சுத்தம் செய்தல் அவசியமாயிருந்தது. இது நான் செய்து முடிக்கக் கூடியதன்றெனச் சொல்ல வேண்டுவதில்லை. எனவே, என்காரியத்தைப் பார்த்துக் கொண்டதுடன் திருப்தியடைந்தேன். மற்றவர்கள் அசுத்தத்தையும் அசுத்தத்தையும் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

இது மட்டுமன்று. பிரதிநிதிகளில் சிலர் தங்கள் அறைகளின் வெளிப்புறத்துத் தாழ்வாரத்தை இரவு நேரத்தில் அசுத்தம் செய்யவும் பின் வாங்கினார்களில்லை. காலையில் தொண்டர்களிடம் இத்தகைய அசுத்தமான இடங்களைக் காட்டினேன். அவ்விடங்களைச் சுத்தம் செய்த பெருமையை என்னுடன் பங்கிட்டுக்கொள்ள ஒருவரும் முன்வரவில்லை. இப்போது நிலைமை பெரிதும் அபிவிருத்தியடைந்திருக்கிறது. ஆனால் இன்றைக்கும், காங்கிரஸ் விடுதியில் கண்டவிடமெல்லாம் அசுத்தமாக்கும் பிரதிநிதிகள் இல்லாமல் போகவில்லை. அவ்வாறே அவ்விடங்களைச் சுத்தப்படுத்தவும் எல்லாத் தொண்டர்களும் தயாராக முன் வருவதில்லை.

காங்கிரஸ் மகாசபை இன்னும் சில தினங்கள் நீடித்து நடக்குமானால், கொள்ளை நோய் பரவுதற்குப் பெரிதும் அநுகூலமான நிலைமை ஏற்பட்டிருப்பதை கண்டேன்.

சந்தோஷப்பிரயாணம் அன்று

தரித்திர நாராயணனின் சேவை

வரவேற்பு நிர்வாகிகளுக்குச் சில யோசனைகள்

மகாத்மாகாந்தி "எங்இந்தியா"வில் எழுதியிருக்கும் குறிப்புகளின் சாரம் வருமாறு:—

பொதுக்கூட்டங்களில், நடவடிக்கை ஆரம்பமான பின்னர், உபசாரபத்திரத்தின் பிரதிகளை விநியோகிக்க ஆரம்பித்து விடுகிறார்கள். இது யோசனை யற்ற காரியம். பெரிய பொதுக் கூட்டங்களில் சாதாரணமாகவே அமைதியை நிலைநாட்டுவது கடினம். இதனால் இன்னும் அது கஷ்டமாகிறது. ஏதேனும் பத்திரங்களை விநியோகிப்பதானால் நடவடிக்கை தொடங்குவதற்கு முன்னாலேயே விநியோகித்து விடவேண்டும். மற்றும், வேண்டும் எல்லாருக்கும் கொடுக்கவேண்டும். ஆயிரக்கணக்கான பிரதிகள் இருந்தாலன்றி இஃது அசாத்தியம். இப்படிச் செய்தல் பொதுப் பணத்தை வீணாக்குவதேயாகும். பத்திரங்களை விநியோகிப்பது அவசியமானால் சொற்பவிலைவைத்து விற்றுவிடுவதேசிலாக்கியமான முறை.

கொஞ்சம் முன்யோசனையுடன் காரியம் செய்தால் எவ்வளவோ கஷ்டமும், காலமும், பணமும் மீதியாகும். பொதுக் கூட்டங்களைக் கூட்டுவோர், அதிலும் கதர்க் கூட்டங்களைக் கூட்டுவோர் உலகிலேயே இந்தியாதான் ஏழ்மைப்பட்டதேசம் என்பதை மறந்துவிடக் கூடாது. அவசியமில்லாத செலவு ஒரு பைசா கூடச் செய்யக்கூடாது. ஒருபைசா ஒரு விதவைக்கு ஒருநாள் சம்பாத்தியமாகச் சிலவிடங்களில் இருக்கிறது. வர்ணக்காகிதங்களினால் அலங்காரம் செய்வதில் பணம் செலவு செய்வது அநாவசியம். அலங்கார ஆடம்பரங்களுக்கேற்ற காலம் இஃதன்று. ஜனங்களைக் கூட்டுவதற்கு அவசியமானால், சட்டைகளுக்குக் கிழித்துமிகுந்த துண்டுக்கதர்த் துணிகளைக்கொண்டு கொடிகள் தயார் செய்து கொள்ளலாம்.

பூமாலை வேண்டாம்

மலர்மாலைகளை அறவே நீக்கிவிடவேண்டும். அவசியமானால் நூல் மாலைகளை உபயோகிக்கலாம். ஆனால் நூல் வீணாகா வண்ணம் முடிந்திருக்கவேண்டும். உபசாரபத்திரங்களை அச்சடித்தல் அவசியமில்லை. நல்ல கையெழுத்துள்ளவர்களைக்கொண்டு காகிதத்தில் எழுதச் செய்து அலது ஒரு கதர்த் துணியில் அழகாகத் தைத்துக் கொடுக்கலாம். பூ வேலை தெரிந்த சிறுவர்கள் யாரேனும் கதர்த்துணியில் உபசாரபத்திரத்தின் மொழிகளைச் சித்திரித்து விடுவார்களானால் இன்னும் நலம். இது கலையழகு பொருந்தியதாயிருக்கும். சாப்ரா நகரசபையின் உபசாரபத்திரம் இவ்வாறுதான் எனக்கு அளிக்கப்பட்டது. மேற்படி நகரசபையின் தலைவர் பாபுமகேந்திர பிரஸாதரின் புதல்வி ரமா இவ்வாறு சித்திரித்துத் தந்தாள். நகரசபைக்குச் செலவில்லை. எனக்கோ, குஜராத் வித்தியா பீடப் பொருட்காட்சிச் சாலையில் வைப்பதற்கு ஓர் அழகிய கலைப் பொருள் கிடைத்தது.

விலை யுயர்ந்த வெள்ளிப் பேழைகள் வேண்டாம். அவற்றை வைப்பதற்கு எனக்கு இடங்கிடையாது. சமீபகாலத்தில் எனக்கு அளிக்கப்பட்ட வெள்ளிப் பேழைகளை யெல்லாம் ஏலம் போட்டு தேசபந்து நிதிக்குச் சேர்த்து வருகிறேன். பெறுமானத்தைவிட அதிகவிலை கிடைத்துவருவதால் இது லாபகரமாகவே இருக்கிறது. இருந்தாலும், அதிக விலைபெறுவதற்காக வெள்ளிப் பேழைகளைத் தருதல் முறையாகாது. மலிவானதாயும், ஆனால் அழகு பொருந்தியதாயும், உள்ளூரில் செய்யப்பட்டதாயுமுள்ள பேழைகள் எனக்குத்திருப்தியளிக்கும்.

"சாப்பிட வரவில்லை"

நான் செய்வது சந்தோஷப் பிரயாணம் அன்று என கங்காதரராவ் தேஷ்பாண்டே கூறியது முற்றுமுண்மை. என்னுடையது காரியப் பிரயாணம். தரித்திர நாராயணரின் சேவைக்கு இயன்ற அளவு காரியம் செய்யவிரும்புகிறேன். இதைமனதிற் கொண்டு ஆங்காங்கு ஏற்பாடு செய்யவேண்டும். உள்ளூர்க்காரர்கள் தேவைக்கதிகமான பேர் என்னுடன் பிரயாணம் செய்கிறார்கள். தேவைக்கு மேற்பட்ட மோட்டார்வண்டிகள் கூலிக்கு அமர்த்தப்படுகின்றன. செலவு இனம் ஒவ்வொன்றும் முன்னாலேயே யோசனை செய்யப்பட்டுத் தீர்மானிக்கப்படவேண்டும். இல்லாவிடில் பட்டினிகிடக்கும் லட்சக் கணக்கான ஜனங்களுக்கு ஊழியம் செய்வதற் கேற்ற திறமையுள்ள ஸ்தாபனத்தை நாம் நிர்மாணிக்கமுடியாது. அரசாங்கத்தின் மீது நாம் சுமத்தும் குற்றத்துக்கு நாமே சிறு அளவில் உள்ளாவோம். விருந்துகளில் அதிக பணம் செலவு செய்யப்படுவதையுங்காண்கிறேன். என்னுடன் வருவோர் சாப்பாட்டுக்காக வரவில்லை. தங்குவதற்குச் சுத்தமான இடமும், தூய்மையான எளிய உணவும் போதும். சாப்பாட்டில் நாம் அளவுக்கு அதிகமான பணமும் காலமும் செலவு செய்கிறோம். கல்கத்தாவிலிருந்தும், பம்பாயிருந்தும் பழங்கள் தருவிக்கப்படுவது எனக்கு பெரும் வருத்தத்தைத் தருகிறது. எனக்குப் பழ உணவு சிறிதளவு அத்தியாவசிய மென்பது உண்மையே. ஆனால் 100க்கு 75 வீதம் இதற்காகும் செலவைக் குறைக்க இடமுண்டு.

பயனற்ற அன்பு

"தங்களிடம் அன்புள்ளவர்கள் இப்படிச் செய்தால் என்ன தவறு? அவர்கள் வேறு வழியில் செலவு செய்ய மாட்டார்கள். உங்களுடைய சொந்த சௌகரியத்துக்காக வென்றால் செய்வார்கள். அவர்கள் இந்த ஆனந்தத்தை யாவது அடையட்டுமே?" என்று சொல்லப் படுகிறது. என்னிடம் அன்புள்ளவர்கள் என்னுடைய இயக்கத்தினிடம் அன்பு செலுத்தார்களாயின், அவர்களுடைய அன்பு பயனற்றதேயாகும். அன்புடன் பரஸ்பரம் சேவை செய்வதே உண்மை நட்புக் கறிகுறியாகும். அதைவிட்டு நண்பர்களைச் சுகபோக ஆசைகளுக்குட்படுத்துவது சில சமயங்களில் தீமை செய்வதேயாகும். என்னுடைய இயக்கத்துக்குப் பணங் கொடுக்க மறுப்போர், என்னுடைய சுகத்துக்காகக் கொடுப்பதாகச் சொன்னால் அதை மறுத்தல் என் கடமை. நண்பர்கள் சுகபோகப் பொருள்களைத் தருவதற்கு முன்னால் வாழ்க்கைக்கு அவசியமான பொருள்களைத் தரவேண்டும். நான் உயிர் வாழ்வதற்குக் கதர் வேலை இன்றியமையாதது; உணவைவிட முக்கியமானது. வரவேற்புக் கமிட்டிகள் இதைக் கவனிக்கவேண்டும்.

"மேற்கண்ட குறிப்புகளை எழுதிய பின்னர் ஆமதநகருக்குச் சென்றோம். பெரிய கூட்டம் ஒன்று நடந்தது. பல ஸ்தாபனங்களின் சார்பாக உபசாரபத்திரங்களும், மலர்மாலைகளும் அளிக்கப்பட்டன. பண முடிப்பை அளித்தவர், ஆமதநகர் பஞ்சத்திலடிபட்ட பிரதேசமாகையால் தொகை சிறிதாயிருப்பதாகக் கூறினர். நான் விடையளிக்கையில், பஞ்சப்பிரதேசம் என்று கூறப்பட்டதற்கும், சுற்றிலும் இருந்த மாடமாளிகைகள், ஆடம்பரமான வரவேற்பு இவற்றிற்கும் உள்ள முரணை எடுத்துக்காட்ட வேண்டிவந்தது. நாட்டில் பஞ்சம் மிகுந்திருக்கிறதாயினும் சிலரிடம் பணம் குவியாமல் இருக்கவில்லையென்றும், நகரவாசிகள் ஏழைக்கிராமவாசிகளின் உழைப்பினால் தான் பணக்காரர்களாகிறார்களென்றும், கதர் இயக்கம் நகரவாசிகள் கிராமவாசிகளுக்குச் சிறிது பிரதி உபகாரம் செய்யச் சாதனமாயிருக்கிறதென்றும், ஆமதநகர் பஞ்சப் பிரதேசம் என்பது உண்மையானால், அங்குள்ள செல்வர்களுக்கு இருமடங்கு பணங் கொடுக்கும் கடமை ஏற்படுகிறதென்றும் சொன்னேன் மற்றும், இந்நிலைமையில் வெள்ளிப் பேழைகளையும், விலையுயர்ந்த பூமாலைகளையும் ஏற்றுக் கொள்ளுதல் எனக்குத் தகாதென்றும், நம்மைப்போலவே செடிகளுக்கும் உயிருண்டென்று நம்புகிறவன் நானாதலால், அநாவசியமாக ஒரே ஒரு பூவைக்கிள்ளுதலையும் நான் விரும்பவில்லையென்றும், அதிலும் நான் பஞ்சத்தில் அடிபட்ட ஏழைகளின் பிரதிநிதி என்பதையும், ஆமதநகரில் அத்தகைய ஏழைகள் அதிகம் என்பதையும் உபசாரபத்திரத்தில் நினைவூட்டி விட்டபடியால் மேற்படி பரிசில்கள் எனக்கு வெறுப்பையே தருகின்றனவென்றும் சொன்னேன். அநாவசியமாகச் செலவு செய்யும் ஒவ்வொரு ரூபாவும் பட்டினிகிடக்கும் சகோதரிகள் 16 பேருக்கு உணவின்றிச் செய்வதாகுமென்றும், ஆதலின் வெள்ளிப் பேழையையும், பூமாலைகளையும் ஏலம் போடப் போவதாகவும், நான் இதுகாறும் கூறியவை அவர்கள் செவியில் ஏறியிருக்குமாயின் அவற்றிற்கு அதிக விலை கொடுத்துவாங்குவார்களென்றும் கூறினேன். வெள்ளிப் பெட்டியை சேத்மக்னிராம்ஜி ரூ1000க்கு வாங்கிக் கொண்டார். பூச்செண்டுகளும் பூமாலைகளும் ரூ 502க்கு ஏலம் போயின. இனி,நான்போகவிருக்குமிடங்களில் வெள்ளிப்பெட்டிகளும்,பூமாலைகளும் கொடுக்க வேண்டாமென்று எச்சரிக்கை செய்கிறேன்! அப்படிக் கொடுத்தால், ஏலம் போட்டு ஏழைகளின் நிதிக்கு அதிக பணம் சேர்ப்பதற்காகவே கொடுத்தார்களென எண்ணிக் கொண்டு அப்படியே செய்ய வேண்டிவரும்.

புகழுக்காகவன்றி ஈசனுக்குக் கோயில் கட்டுபவன் தன் பெயரைக் கல்லில் செதுக்கமாட்டான்.—போப்.

* * *

வாழ்வதற்கு நாம் வேலை செய்யவேண்டும். வேலை செய்யவோ உயிர் வாழ்வதசியம். ஆதலின் வாழ்க்கையும் கன்மமும் இணை பிரியாத தொடர்புடையவை—தாகூர்.

இயற்கையின் வன்மம்!

மனிதன் தன்னை அதிமேதாவி என்று எண்ணிக்கொள்கிறான். இயற்கை நியதியில் தலையிட்டு அதற்கு இடையூறு செய்கிறான். இயற்கை சும்மா விடுவதில்லை. பழிக்குப் பழி வாங்கியே விடுகிறது.

அமெரிக்கா காலிபோர்னியா மாகாணத்தில் கோடானு கோடி சுண்டெலிகள் உற்பத்தியாகிப்பெருகி வந்தன. சில சமயங்களில் பாதைகளில் போக்கு வரவையும் தடைசெய்யுமாறு அவை பெருகிப்பல்கின. விஸ்தாரமான பிரதேசங்களில் நகரும் கம்பளத்தைப்போல் அவை காணப்பட்டன. இவற்றை ஒழிக்க எவ்வளவோ உபாயங்களைக் கையாடினார்கள். சமீபத்தில் நச்சுக் கலந்த உணவுப் பொருள்களைப் பரப்பிக் கொன்றது குறித்துச் செய்தி வந்தது. ஆனால் இவ்வளவு தொந்தரையும் எதனால்? சுண்டெலிகளை உணவாகக் கொள்ளும் இராஜாளி முதலிய பறவைகளை அம்மாகாணத்தார் சுட்டழித்தனர்." அதன் பயனே இப்படிவிளைந்தது!

பற்பல பிராணிவர்க்கங்களையும் ஓர் அளவுக்குட்படுத்தி வைப்பதற்கு இயற்கை மிகவும் நுட்பமான ஒரு நியதியை ஏற்படுத்தியிருக்கிறது. இதில் மனிதன் தலையிடும் போது இந்நியதி ஏறுமாறாகி விடுகிறது. அப்போது இயற்கை கோபங் கொள்கிறது. மனித குலத்திக்குச் சனியன் பிடிக்கிறது.

உலகமெங்கும் இவ்வாறு மனிதன் இயற்கை நியதிக்கு இடையூறு விளைத்து விட்டுத் தன்புறுவதற்கு உதாரணங்கள் காணலாம். கிரேட்பிரிட்டனில், எலியின் பகையான ஆந்தை முதலிய பிராணிகள் மனிதனால் அழிக்கப்பட்டபடியால் அங்கே எலிகள் மலிந்துவிட்டன. ஒரு எலி தம்பதிகளின் சந்ததிகள் ஓராண்டில் ஆயிரம் ஆகிவிடுகின்றன. இவை 1500 பவுன் விளை பொருளை அழிக்கின்றன. வருஷந்தோறும் கிரேட்பிரிட்டன் எலியினால் அடைந்துவரும் நஷ்டம் 7,00,00,000பவுன்.

ஜமெய்காதீவில் கரும்புத் தோட்டங்களில் எலிகளைக் கொல்வதற்காகக் கீரிப்பிள்ளைகளை வேறு தேசத்திலிருந்து கொண்டு வந்தார்கள். கீரிப்பிள்ளை எலியைக் கொன்றதோடு நில்லாமல் கோழி, குள்ளவாத்து முதலிய பட்சிகளையும் சாப்பிட்டுவிட்டது. இதன் பயனாக ஓணான், அரணை இனங்கள் பெருகிவிட்டன. முடிவில் அரசாங்கத்தார் கீரிப்பிள்ளையைக் கொல்வதற்குப் பலமான நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டியதாயிற்று!

ஆஸ்திரேலியாவின் விஷயம் வேறு. முதலில் அங்கே உணவுக்காக் குழி முயலைக் கொண்டுவந்தார்கள். குழிமுயல் பெருகிவிளைச் இவற்றினின்று பாதுகாக்கிட்டவே, அயல்நாட்டு சப்பாத்திக் கள்ளியைக்கொண்டு வந்தார்கள்! இப்பொழுது சப்பாத்தியைத் தொலைக்க அவர்கள் படும்பாட்டைச் சொல்லமுடியாது!

இப்போது அக்காட்டில் சப்பாத்திக் கள்ளி 2,00,00,000 ஏக்கரா நிலத்தை அபகரித்துக் கொண்டுவிட்டது! வருஷம் 10,00,000 ஏக்கர் வீதம் பரவிக்கொண்டு வருகிறது! எல்லா வகைத் தடைகளையும் தாண்டிக் கொண்டு அது முன்னேறுகிறது. இதன் முன்னேற்றத்தைத் தடுக்க வழி காணாவிட்டால் குவீன்ஸ்லாண்டு மாகாண ஜனங்கள் அதிவிரைவில் கடலில் மூழ்கிவிடவேண்டியதாகவரும்! இதை அழிப்பதற்கு உபாயம் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. வெட்டி, நசுக்கி, எரித்து, விஷந்தெளித்து, இன்னும் எவ்வளவோ செய்துபார்த்தாய் விட்டது பயனில்லை. தீமலையிலிருந்து புறப்படும் அக்கினிக் குழம்பைப்போல் அது அதிவேகமாகப் பரவிக் கொண்டிருக்கிறது.

ஆனால் இயற்கையின் கோபத்தின் முழுப் பயனையும் நாம் அநுபவிக்கும் காலம் இன்னும் வரவில்லை. பூச்சிவர்க்கத்தின் பெருக்கைத்தடுப்பதற்கு இயற்கைசெய்திருக்கும் ஏற்பாடே அடியோடு போகும்போதுதான் இத்தகைய காலம் வரும். அப்போது பூச்சிகளுடன் சண்டை போட்டு மனிதன் மீளுதல் இயலாதகாரியம்.

உலகில் பூச்சிவர்க்கத்தில் 7,50,000 தனித்தனி சாதி இருக்கின்றனவாம். ஒவ்வொரு சாதிக்கும் பெரிய பெரிய குடி யேற்றங்கள் உண்டு. குளவிக் கூடு ஒன்றில் 4000 குளவிகள் இருக்கும். எறும்புப் புற்று ஒன்றில் கோடிக் கணக்கான எறும்புகள் இருக்கும். ஒரு பெண் ஈயின் சந்ததியில் ஓராண்டில் 4,472, 286, 103, 628, 718, 559, 320 ஈக்கள் உற்பத்தியாகக் கூடுமென்று ஆசிரியர் ஹாவர்டு என்பார் கணக்கிட்டிருக்கிறார்!

மனிதன் உணவுக்காகவோ, உடைக்காகவோ பயிரிடும் பயிர்களில் சராசரி 100க்கு 10 வீதம் பூச்சிகள் அழித்து விடுகின்றன வென்று டாக்டர் ஹீவ் என்பார் சொல்கிறார். பூச்சிவர்க்கங்கள் ஆறுமாத காலம் எவ்வித இடையூறுமின்றி அபிவிருத்தியானால் உலகிலுள்ள தாவரவர்க்கங்கள் முழுவதையும் அழித்து விடுமென்றும் அவர் கூறுகிறார்.

பூச்சிவர்க்கத்தின் [illegible] தன் [illegible]

கன்பியூஷியஸ் பேசுகிறார்!

கன்பியூஷியஸ் என்னும் சீனமகான் [illegible] துவுக்கு முன் 478-ம் ஆண்டில் அ[illegible] இற்றைக்கு 2405 ஆண்டுக்கு முன்னர் [illegible] சென்றவர். இவருடைய ஆவி சமீப[illegible] நியூயார்க் நகரில் மிஸ்டர் ஜார்ஜ் [illegible] டின் என்பார் மீது ஆவிர்ப்பவித்துப் [illegible] தாக "டெயிலி நியூஸ்" பத்திரிகை [illegible] கிறது. மிஸ்டர் வாலியண்டின் என்பா[illegible] உள்ள விசேஷம் யாதெனில், அவர் [illegible] ஆவிகள் ஆவிர்ப்பவித்துப் பேசும் போ[illegible] குரல் அந்தந்த ஆவியின் சுயமான குரலா[illegible] இருக்கும். மிஸ்டர் வாலிடண்டின் ஓர் [illegible] கிலேயர். இவர் சமீபத்தில் அமெரி[illegible] வுக்குச் சென்றார். இவர் மீது ஆவி[illegible] ஆவிர்ப் பவிக்கும்போது இவருக்குத் [illegible] தம் தெரியாத பாஷைகளில் பேசுவது [illegible] முறை நிகழ்ந் திருக்கிறது. நியூயார்க்கில் நடந்த சில (வியான்ஸ்" ஆவேசக் கூட்ட[illegible]) களில் இவ்வாறே நடந்தது. அங்கிருந்த[illegible] களுக்கு விளங்காத மொழிகள் அடிக்கடிபே[illegible] பட்டபடியால் டாக்டர் நெவில் [illegible] என்பாரை ஒரு கூட்டத்துக்கு அழைத்தா[illegible] இவர் ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலையில் [illegible] மொழி ஆசிரியராயிருந்தவர். மொத்தம் [illegible] மொழிகளில் பயிற்சியுள்ளவர்.

முதலில் இவர்வந்ததும் மேற்படி ஆவே[illegible] பீடத்தின்மீது ஆவிர்ப்பவித்திருந்த ஆவி [illegible] விய பாஷையில் பேசுவது கன்பியூஷியஸ் [illegible] சம்பாஷித்தார். இதற்குப்பிறகு வேறொ[illegible] கேட்க ஆரம்பித்தது. முதலில் அ[illegible] என்ன பாஷை பேசப்படுகிறதென்று [illegible] வில்லை. பின்னர் உற்றுக் கவனித்தபோ[illegible] அது சீன பாஷையேயென்றும், ஆனால் [illegible] போது எங்கும் பேசப்படாத அ[illegible] மாகவும் நல்லியமாகவும் அது பேசப்[illegible] தென்றும் தெரிந்தது. அந்தக் குரல், [illegible] கன்பியூஷியஸின் ஆவி யென்று [illegible] கூறிற்று. டாக்டர் வைமண்ட் [illegible] பண்டை இலக்கியங்களைப் பற்றிக் கேள்வி[illegible] கேட்டார். ஆவி அவற்றிற்குத்தக்க [illegible] யளித்தது. சில கிளிஷ்ட கேள் [illegible] பின்னர் டாக்டர் வைமண்ட் [illegible] பக்கனில் சில கவிகளுக்குப் பொருளி[illegible] வில்லை யென்று சொன்னார்.

"உதாரணமாக?" என்று குரல் கேட்ட[illegible]

டாக்டர் வைமண்ட் ஒரு கவியின் [illegible] யைக்குறிப்பிட்டார். அந்தக் குரல் [illegible] குத்து கடைசிவரை அதை ஒப்புக் [illegible] முடித்தது. இது 16 வரி அடங்கிய [illegible] வரை பொருள் தெளிவாக [illegible] பகுதிகள் எல்லாம், ஆவியின் குரல் [illegible] கவியைக் கூறியபோது ஒப்புக [illegible] பொருள்பட டாக்டர் வைமண்ட் [illegible] கள், ஆவி ஒப்புகப் பதம் [illegible] போது, ஆழ்ந்த பொருள் பெற்ற [illegible] வாம். எனவே, அக்கவியின் புதிய மொழி[illegible] பெயர்ப்பை இப்போது டாக்டர் வைமண்ட் வெளியிட்டிருக்கிறார். சீன மொழியை யல்லா[illegible] மல் இதாலிய, பர்ஷிய, போர்ச்சுகீஸ், ஜப்பானிய, அரபு பாஷைகளும், தமிழ்ந்தானியும், சமஸ்கிருதமும் கூட மேற்படி ஆவேசபீடத்தின் மூலம் பற்பல ஆவிகளால் பேசப்பட்டனவாம்.

உலகில் பணம் பெருத்த வீதி:— த[illegible] போது உலகிலேயே பணம் பெருத்த[illegible] நியூயார்க் நகரிலுள்ள பார்க் அவென்யூ என்று "டெயிலி நியூஸ்" பத்திரிகை கூறுகிறது. இவ்வீதியில் வருஷம் பத்தாயிரம் பவுன் (ரூ 1,35,000) வருவாயுள்ளவ[illegible] ஏழை என்று கருதப்படுகிறான்! இவ்வீதியில் 4000 செல்வர் குடும்பங்கள் வசிக்கின்றன. இவர்கள் வருஷத்தில் மொத்தம் 5 கோடி 60 லட்சம் பவுன் செலவு செய்கிறார்கள். பூவில்மட்டும் தினந்தோறும் 2500 பவுன் செலவாகிறது! நாடகங்கள், விருந்துகள் முதலியவற்றில் வருஷத்தில் பத்து லட்சம் பவுன் செலவு செய்யப்படுகிறது. பெண்களின் உடைக்கு தினம் 40,000 பவுன் (வருஷம் 1 கோடி 40 லட்சம் பவுன்) செலவழிக்கப்படுகிறது. எட்டு லட்சம் பவுனுக்குப் பாதரட்சைகள் வாங்கப்படுகின்றன. இவ்வீதியில் வசிப்போர் எல்லோருக்கும் சேர்த்து உணவுக்காகச் செலவு 40 லட்சம் பவுன்தான் ஆகிறது! அதாவது உடைச்செலவைவிட மிகவும் குறைவு! பிரயாணத்தில் அவர்கள் 30 லட்சம் பவுன் செலவு செய்கிறார்கள். தர்மத்தில் 10 லட்சம் பவுன் செலவிடுகிறார்கள். தர்மத்தில் செலவழிப்பது அவர்களுடைய மொத்த வருவாயில் 100க்கு 2 வீதமே யாகும்.

இயற்கை நியதிக்கு இடையூறு செய்வதினும் [illegible] அபாயமாகும். [illegible]

சென்னை அரசாங்க வரவு செலவுத்திட்டம்

சென்னை அரசாங்க வரவு செலவு அங்கத்தவர் மிஸ்டர் மாயர் மார்ச்சு மாதம் முதல் தேதி கூடிய சென்னைச்சட்ட சபையில் அடியிற்கண்ட 1927-28 வருஷத்திய வரவு செலவுத் திட்டத்தை ஆஜர் செய்தார்:—

வரவு	லக்ஷம்
வருமான வரி	5 46
நில வரி	754·86
கலால் வரி	498 24
ஸ்டாம்பு வரி	248·85
காடுகள்	50·83
பத்திரப்பதிவு	39·68
நீர்ப்பாசனம்	49·13
வட்டி	23 34
நீதிபரிபாலனம்	12·61
சிறைச்சாலைகள்	8·86
போலீஸ்	9.44
கல்வி	6·51
வைத்தியம்	4·54
சுகாதாரம்	·37
விவசாயம்	2·65
கைத்தொழில்	7·73
சில்லரை இலாகாக்கள்	14·42
ஸிவில் வேலைகள்	7·92
பென்ஷனுக்கு வசூலாகும் தொகை	5 91
தளவாட சாமான்	2·49
இதர வருமானம்	7·18
மொத்த வரவு	1654·80

செலவு	லக்ஷம்
நிலவரி வசூல் செலவு	45·09
கலால் இலாகா	43·87
ஸ்டாம்பு	6·30
காடுகள்	43·32
ஷை க்கு மூலதனச் செலவு	5 97
பத்திரப்பதிவு	26·63
பாசன வகையில்	59·85
சாதாரணக்கடன் வட்டி	62·79
கடன் தீர்க்கும் நிதி	40 22
பொது நிர்வாகம்	233 31
நீதிபரிபாலனம்	98·86
சிறைச்சாலைகள்	31·52
போலீஸ்	195·26
துறைமுகச்செலவு	0·39
சாஸ்திர இலாகாக்கள்	2·69
கல்வி	217·60
வைத்தியம்	75 90
சுகாதாரம்	33·98
விவசாயம்	34·25
கைத்தொழில்கள்	20·81
சில்லரை இலாகாக்கள்	21·76
ஸிவில் வேலைகள்	167·84
பஞ்ச நிவாரணம்	6·61
பென்ஷன்	59·94
சில்லரை அச்சுச் செலவுகள்	21·01
மற்ற இனங்கள்	3·17
மத்திய சர்க்கார் கப்பம்	165·19
மொத்தச் செலவு	1724·13

	லக்ஷம்
வரவு நீக்கித் தண்டு விழும் அதிக செலவு	69·33

சேலம் தாலூகா வேம்படி தானத்தில் சென்ற வாரத்தில் ஒரு பெண்ணுக்கு எட்டு மாதக் கர்ப்பத்தில் இரண்டு தலை, ஓர் உடல் நான்கு கை, நான்கு கால்களுடன் ஒருகுழந்தை பிறந்து ஒரு மணி நேரத்தில் இறந்துவிட்டதாம்.

o o o

சென்ற மூன்று மாதத்தில் லண்டன் வீதியில் மோட்டார் வண்டிகளால் உயிரிழந்தவர்களின் தொகை இருநூற்றைம்பதாம். காயமடைந்தவர்கள் இன்னும் அதிகம். மொத்தத்தில் மூன்று மாதத்தில் மோட்டார் விபத்துக்காளானவர்கள் தொகை இருபத்தையாயிரமாம்!

o o o

மாயவரம் பட்டமங்கலம் காவேரிப்பாலத்தை அடுத்த விசுவநாதசுவாமி கோயில் வடக்குப் பிரகாரத்தில் திருக்கோயில் கொண்டிருந்த சனீசுரனை யாரோ எடுத்துக்கொண்டு போய்விட்டார்களாம். மேற்குப் பிரகாரத்திலிருந்த சுப்ரமணியரின் செப்பு வேலையும் காணவில்லையாம்.

o o o

சென்னைத் திருமயிலை கொச்சிக்குப்பம் திரு அதிபத்த நாயனார் கழகத்தின் ஆதரவில், சென்னை நகர பரிபாலன சபைத்தலைவரான திவான் பகதூர் கோபதி நாராயணசாமி செட்டியார் அவர்களுக்கு 27-2-27 ஞாயிற்றுக்கிழமை கொச்சிக்குப்பம் முனிசிபல் பாடசாலையில் ஐகோர்ட் வக்கீல் திருவாளர். டி. நல்லசிவன் பிள்ளை அவர்கள் தலைமையில் கூடிய ஒரு பொதுக்கூட்டத்தில் வரவேற்புப் பத்திரமொன்று தமிழில் கொடுக்கப்பட்டது எனக் கழகக்காரியதரிசி தெரிவிக்கிறார்.

குதிரைப் பந்தயத்தால் விளைந்த வினை

கணவன் திருடியதாக மனைவி வழக்குத் தொடுக்கிறாள்!

பம்பாய் நகரில், கிர்க்காம் போலீஸ் கோர்ட்டில் ஒருவிநோதமான வழக்கு நடைபெறுகிறது. நாதாலி என்னும் ஸ்திரீ தன்புருஷன் அந்தோணி என்பவன் 250 ரூபா பெறுமான தங்கக்கழுத்துச் சங்கிலியைத் திருடிவிட்டதாக வழக்குத் தொடுத்திருக்கிறாள். நாதாலியின் உறவினள் ஒருத்தி மேற்படி நகையைப் பத்திரமாக வைத்திருக்கும்படி நாதாலியிடம் கொடுத்திருந்தாளாம். அவள் திரும்பிவந்து நகையைக் கேட்டபோது நாதாலி பெட்டியைத்திறந்து பார்த்தாள். நகையைக்காணோம். அன்று முதல் புருஷனும் வரவில்லை. மூன்று நாள் கழித்துப் போலீசில் எழுதிவைத்தாள். போலீஸார் அந்தோணியை குதிரைப் பந்தய மைதானத்தில் கைது செய்தார்கள். அந்தோணி, தான் குற்றவாளி யென்று ஒப்புக் கொண்டு, மேற்படி நகையை அடகு வைத்து வாங்கின பணம் அவ்வளவையும் குதிரைப்பந்தயத்தில் தோற்று விட்டதாகக் கூறினன். வழக்கு முடிவு பெறவில்லை.

Printed and Published by T. V. Kalyanasundara Mudaliar (Editor) at the Sadhu Press, 12-Ganapathi Mudali St., Royapettah, Madras.

END OF ISSUE